# இரு மகாகவிகள்




க. கைலாசபதி

NCBH

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

TAMIL PUBLICATIONS & DISTRIBUTION NETWORK
44, 3rd Floor
C. C. S. M. Complex
Colombo - 11.

470544

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TAMIL PUBLICATIONS & DISTRIBUTION NETWORK
44, 3rd Floor
C. C. S. M. Complex
Colombo - 11.

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு மகாகவிகள்

TAMIL PUBLICATIONS & DISTRIBUTION NETWORK
44, 3rd Floor
C. C. S. M. Complex
Colombo-11.

க. கைலாசபதி, எம்.ஏ., பி.எச்.டி.,

470544

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

470544
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IRU MAHAKAVIGAL
by K. Kailasapathy, M.A., Ph.D.,
முதற் பதிப்பு : செப்டம்பர் 1962
ஏழாம் அச்சு : ஜூலை, 1992
© Tmt. Sarvamangalam Kailasapathy
Code No. A 321

விலை: ரூ. 14-00

UNIVERSITY
17-2-1996
LIBR

ISBN.

அச்சிட்டோர் :
ஜனசக்தி அச்சகம்,
161, பிரகாசம் சாலை,
சென்னை-600 108.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

# பதிப்புரை

இரவீந்திரநாத் தாகூரும் பாரதியும் இந்த நூற்றாண்டு ஈந்தெடுத்த இருபெரும் மகாகவிகள். தாகூர் வங்கத்திலும், பாரதி தமிழகத்திலும் தோன்றிய போதிலும் இருவரும் பாரதம் முழுமைக்கும் பொதுவானவர்கள்; ஏன் உலகத் துக்கே பொதுவானவர்கள்.

இருவரது வாழ்விலும் ஒற்றுமைகளைவிட வேற்றுமை களே சட்டென்று நம் நினைவுக்கு வருகின்றன. தாகூர் வசதி யான பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர். பாரதியோ எளிய குடும்பத்தில் பிறந்தவர். வறுமையின் கொடுமையை வாழ்வில் நேரடியாக அனுபவியாதவர் தாகூர். வாழ்வின் இறுதிவரையிலும் வறுமையுடன் போராடி, உடலும், சமயங் களில் உள்ளமும் கூட சலித்தவர் பாரதி.

தாகூரின் குடும்பச் சூழ்நிலையே அவரது முற்போக்கான கருத்துக்களுக்கு இளமையிலேயே வித்திட்டது. பாரதி தமது இளமைக் காலத்தில் வாழ்ந்த சூழ்நிலையோ ஜமீன்தாருக்கு லாலி பாடிய ஆஸ்தானப் புலவர்களின் சூழ்நிலை.

தாகூர் தமது ஆயுட் காலத்தில் உலகமெல்லாம் சுற்றிப் பார்த்தவர். ஆனால் பாரதியோ சாகும் வரையிலும் இந்தி யாவின் எல்லையைத் தாண்டி அறியாதவர்; தமது இலக்கிய வாழ்வின் செம்பாதியை அஞ்சாத வாசத்திலே கழித்தவர். தாகூருக்கு தமது ஆயுட் காலத்திலேயே சர்வதேசப் புகழ் கிட்டியது; நோபல் பரிசு கிடைத்தது. பாரதிக்கோ தாய கத்திலேகூட அவரது ஆயுட் காலத்தில் போதிய புகழும் செல்வாக்கும் கிட்டவில்லை.

இவ்வாறு இந்த இருபெரும் கவிஞர்களின் வாழ்க்கை யிலே வேற்றுமைகள் மிகுந்திருந்தாலும் அவர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனையிலும் கண்ணோட்டத்திலும் வேற்றுமையைவிட ஒருமைப்பாடே மேலோங்கி நிற்பதைக் காண முடியும்.

இருவருமே வங்கத்தில் தோன்றி, பின்னர் நாடு முழுவதும் பரவிய இந்த நூற்றாண்டு தொடக்கத்தின் தேசிய எழுச்சியாலும் தேசிய மறுமலர்ச்சியாலும் ஆகர்ஷிக்கப் பட்டு தேசியக் கவிஞர்களாக மலர்ந்தவர்கள். இரண்டு பேர்களும் உலகு தழுவிய மனிதாபிமானத்தை வெளியிட் டார்கள். பாரதியின் மனிதாபிமானம் உணர்வு பூர்வமானது. தாகூரின் மனிதாபிமானம் அறிவு பூர்வமானது.

தாகூரும் பாரதியும் இந்திய நாட்டின் பண்டைய தத்துவங்களிலும், மத இலக்கியங்களிலும் ஈடுபாடு கொண்டு அவற்றிலே காலூன்றி நின்ற போதிலும், இருவரும் பண் டைய தத்துவங்களில் இடம் பெற்றிருக்கும் மாயாவாதத் திலும் அநித்யக் கோட்பாட்டிலும் சிக்கிக் கொண்டவர் களல்லர்; அதேபோல இருவரும் எந்த ரூபமான துறவறத் தையும் அங்கீகரித்தவர்களல்லர்.

இரண்டு மகா கவிகளும் அப்பழுக்கற்ற தாய்மொழிப் பற்றுக் கொண்டவர்கள்; இசைக் கலைஞானம் பெற்ற வர்கள்; ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதில் உறுதி கொண்ட வர்கள்.

இவ்விதம் இரு மகாகவிகளும் பல விஷயங்களில் ஒன்றுபடுகிறார்கள். எனினும் அவர்களது சில பல கண் ணோட்டங்களில் வேற்றுமையும் இல்லாமலில்லை.

பாரதி இந்திய நாட்டிலே யந்திர வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்று விரும்பியவர். ஆனால் தாகூரோ யந்திர வளர்ச்சியில் நாட்டம் செலுத்தவில்லை. 'யந்திர நாகரிக மானது இன்பத்தைப் பலியிட்டுப் பணத்தைத் திரட்டுகிறது' என்றார்.

இந்த ஒற்றுமை வேற்றுமைகளின் பின்னணியில் இவ் விரண்டு உலக மகாகவிகளையும் ஒப்புநோக்கி விரிவாகவும், நுணுக்கமாகவும், ஆழமாகவும் இந்த நூலில் ஆராய்ந்திருக் கிறார் திரு. கைலாசபதி. இத்துறையிலே ஒரு முன்னோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான சிறந்த ஆய்வு நூல் இது. நீரோட்டம் போன்ற தெளிந்த எளிய நடையில் அமைந்திருக்கிறது.

இந்த அரிய நூலை எழுதியுள்ள திரு. கைலாசபதி பிரபல இலங்கை எழுத்தாளர்; தமிழ் மொழியில் நிறைந்த பாண்டித்யம் பெற்றவர்; இலங்கைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். பல ஆய்வு நூல்களை எழுதியிருக்கிறார்.

தமிழ் விமர்சனத் துறையில் இந்நூல் ஒரு சிறப்பான இடம்பெறும் என்பதில் சந்தேகமில்லை. இந்நூலை வெளியிட அனுமதி தந்த திரு. கைலாசபதி அவர்களுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்நூற்றாண்டின் இணையற்ற இரண்டு கவிக் குயில்கள் பற்றிய இந்த அருமையான நூலுக்கு தமிழ் கூறும் நல்லுலகம் நல்லாதரவு நல்குமென்று நம்புகிறோம்.

—பதிப்பகத்தார்

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதற் பதிப்பின்

# முன்னுரை

ஆறாண்டுகளுக்கு முன்பு தாகூர் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்பட்ட பொழுது இலங்கை-தினகரன் பத்திரிகையில் தொடராக எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். 'மகாகவி கண்ட மகாகவி' என்ற தலைப்பில் பாரதியாருக்கும் தாகூருக்குமுள்ள தொடர்புகளை விவரிப்பதே எனது முதல் நோக்கமாயிருந்தது. கட்டுரைகளை எழுதத் தொடங்கிய பின்னர், இரு கவிஞரையும் இயன்றளவிற்கு ஒப்பு நோக்கி எழுதலாம் எனத் தோன்றியது. அதன் விளைவாகச் சில புதிய குறிப்புக்கள் சேர்க்கப்பட்டன. கட்டுரைகளை நூலாக்கும் பொழுது **இரு மகா கவிகள்** எனப் பெயர் சூட்டினேன்.

தமிழில் ஒப்பியல் இலக்கியம் இப்பொழுதுதான் அரும்பத் தொடங்கியுள்ளது. பல்லாண்டுகளுக்கு முன்னதாக வ. வே. சு. ஐயர் வழிகாட்டிப் போந்தனரெனினும், அப்பாதையிற் சென்றோர் சிலரே. பல குறைபாடுகள் இருப்பினும், இச்சிறு நூல் அத்துறையைச் சார்ந்தது என்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். பெரியதொரு நூலுக்கு முற்குறிப்புக்களாகவே இக்கட்டுரைகள் அமைந்துள்ளன. இவற்றை விரித்து எழுத வேண்டுமென்பதே எனது ஆசை. ஆயினும் மிகக் குறுகிய காலத்தில் இம்மறுபதிப்பு வெளிவர வேண்டியிருந்தமையால், திருத்தங்கள் செய்ய வாய்ப்பில்லாது போயிற்று. அடுத்த பதிப்பில் இவற்றைச் செய்ய எண்ணியுள்ளேன்.

கட்டுரைகளாகக் கிடந்தவற்றை நூல் வடிவமாக்குவதற்கு ஊக்கமும் உதவியுஞ் செய்த நண்பர்கள் ரகுநாதன், விஜயபாஸ்கரன் ஆகியோருக்கு என் நன்றி. இதனை அச்சிட்டு வெளியிடும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு என் அன்பு.

சென்னை
10-1-68

**க. கைலாசபதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் பதிப்பின்

# முன்னுரை

பத்து வருடங்களுக்குப் பின் இந்நூல் மூன்றாம் பதிப்பாக வெளிவருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இந்நூலைப் பாடப் புத்தகமாக அங்கீகரித்து உற்சாகம் தந்துதவிய கல்வி நிறுவனங்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பதிப்பு இரண்டாம் பதிப்பை ஒட்டியே வெளியிடப்பட்டுள்ளது. இந்நூற் பதிப்பில் தொடர்ந்து ஆர்வம் காட்டி வரும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர்க்கு என் நன்றி.

கொழும்பு
18-1-72

க. கைலாசபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு மகா கவிகள்

## 1

'கீர்த்தியடைந்தால் மஹான் ரவீந்திரரைப்போலே அடையவேண்டும். வங்காளத்தில் மாத்திரமா? இந்தியா முழுமையுமா? ஆசியா முழுதுமா? ஜெர்மனி, ஆஸ்திரியா, பிரான்ஸ் பூமண்டல முழுமையும் பரவின கீர்த்தி. இத்தனைக்கும் அவர் பாடிய பாட்டுகளோ வங்க பாஷையிலே உள்ளன. வெறும் மொழி பெயர்ப்புக்களைத் தான் உலகம் பார்த்திருக்கிறது. அதற்குத்தான் இந்தக் கீர்த்தி.'

இரவீந்திரநாத் தாகூரைப் பற்றி மகாகவி பாரதியார் எழுதியுள்ள ஒரு குறிப்பு இது. இந்தியாவின் தேசிய மறு மலர்ச்சிக்கு வித்திட்ட இருபெருங் கவிஞர் தாகூரும் பாரதி யும். பாரதியார் தாகூரைவிட இருபத்தொரு ஆண்டுகள் இளையவர். ஆனால் தாகூர் இறப்பதற்கு இருபது ஆண்டுகள் முன்னதாகவே இறந்தவர். தாகூருக்குப் பின்னால் தோன்றி முன்னதாகவே மறைந்தாலும் தாகூரும் பாரதியும் சம காலத்தவர்களே. பலவிதங்களில் இருவருக் கும் ஒப்புமை, வேற்றுமைகள் இருக்கின்றன. வானமும், வையமும் அளந்த இருபெரும் யுகக் கவிஞர்களுக்கிடையில் காணப்படும் உறவையும் தொடர்பையும் கண்டுகொள்வது இலக்கிய உணர்விற்குப் பயன் தரும் முயற்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதியாரின் கவிதா உள்ளம்

தமிழிலக்கிய மரபிலே ஊறித்திளைத்த பாரதியாரது கவிதா உள்ளம் பல தேசிய சர்வதேசச் சக்திகளாற் கவரப் பட்டது; உந்தப்பட்டது; பல பெரியோர்களால் செம்மைப் படுத்தப்பட்டது; சில மகான்களின் நெருங்கிய உறவால் புடம் போடப்பட்டது. மெருகு பெற்றது. சதா விழிப்புடன் இருக்கும் ஒரு கவித்துடிப்பைப் பாரதியிடம் நாம் காண் கிறோம். ஷெல்லி, கீட்ஸ், பைரன் முதலிய ஆங்கிலக் கவிஞர்கள் பாரதியின் இளமைக்கால இலட்சிய கவிஞர்கள்; 'ஷெல்லிதாஸன்' என்று ஒரு காலத்தில் பாரதி புனை பெயர்கூடப் பூண்டிருந்தார். எட்டயபுரத்திலே இருந்த காலத்தில் 'ஷெல்லி கழகம்' ஒன்றும் கூட்டினார். ஷெல்லி, பைரன் முதலிய 'புரட்சி'க் கவிஞர்களைப் படித்துத் தனது இலட்சிய-தர்மாவேச தாகத்தைத் தீர்க்க முயன்றார்.

அரசியலில் பிரவேசித்த அந்த உணர்ச்சி செறிந்த வீரம் விளைந்த காலத்தே பாலகங்காதர திலகர், விபின் சந்திரபாலர், லாலா லஜபதிராய் முதலிய தீவிரவாதி களால் கவரப்பட்டார். 'திலகர் விதைத்த விதை பாரதி யாக முளைத்தது' என்று சிலர் கூறியுள்ளனரல்லவா?

இதற்கிடையில் சுவாமி விவேகானந்தரின் உத்தம சிஷ்யையான சகோதரி நிவேதிதா தேவியைக் கண்டு ஞானோபதேசமும் பெற்றார் பாரதியார். 'தேசபக்தி செய்; சாதிமத பேதம் பாராட்டாதே; ஆண் பெண் சமமெனக் கொள்' என்று நிவேதிதா தேவி பாரதிக்கு உபதேசம் செய்தார் என்று அறிகிறோம்.

'அருளுக்கு நிவேதனமாய் அன்பினுக்கோர்
கோயிலாய் அடியேன் நெஞ்சில்
இருளுக்கு ஞாயிறாய் எமதுயர் நா
டாம்பயிர்க்கு மழையாய்....விளங்கியதாய்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஒரு சந்தர்ப்பத்திலே பாரதியார் தனது ஞான குருவைப் போற்றிப் பாடியுள்ளார்.

## புதுச்சேரியில் அரசியல் அகதி

பிற்காலத்திலே அரசியல் அகதியாய் புதுச்சேரியில் வாழ்ந்த காலத்து, மகான் அரவிந்தர், வ. வே. சு. ஐயர் முதலியோர் பாரதிக்குத் தூண்டுகோலாய் அமைந்தனர். மேலும் குள்ளச்சாமி, கோவிந்தசுவாமி, யாழ்ப்பாணத்துச் சுவாமி ஆகிய ஞானிகளின் உறவு பாரதியாரின் ஆன்மீக வளர்ச்சிக்கு உதவியது.

இவ்வாறு காலத்திற்குக் காலம் பலராற் கவரப்பட்ட பாரதியார் இரவீந்திரநாத் தாகூரைப் பல இடங்களிலும் போற்றியிருப்பதில் வியப்பில்லையல்லவா? எனினும் தாகூரைப் பாரதியார் நேரில் சந்தித்தார் என்று கூறுவதற்கு ஆதாரமெதுவுமில்லை. அதைப்போலவே பாரதியின் எழுத்துக்களில் தாகூரின் செல்வாக்கையோ, சாயலையோ தெளிவாகக் காண்பதும் எளிதல்ல. ஆனால் நேரில் சந்திக்காத இவ்விரு மகா கவிகளுக்கிடையிலே குறிப்பிடத்தக்க சில ஒற்றுமைகள் தோன்றுகின்றன.

## இந்திய தேசிய விடுதலைப் போர்

இந்திய தேசிய விடுதலை இயக்க வரலாற்றிலே 1905-ம் வருடம் மிக முக்கியமானதாகும். அந்த ஆண்டிலேதான் வங்கப் பிரிவினை நடந்தது. வங்கம் துண்டாடப்பட்டதைத் தொடர்ந்து, தவிர்க்க முடியாதபடி வங்கம் இந்திய விடுதலை இயக்கத்திற்குத் தலைமை தாங்கும் நிலைமை ஏற்பட்டது. விபின் சந்திரபாலர், ராஷ்பிகாரிகோஷ், வரேந்திர கோஷ் முதலிய வங்கத்துச் சிங்கங்கள் கர்ஜனை புரியத் தொடங்கிய காலமது. ஆங்கிலம், வங்காளி ஆகிய இரு மொழிகளிலும் பத்திரிகைகள் கனல் கக்கின; விபின் சந்திரபாலர் நாடெங்கும் சூறாவளி வேகத்தில் சுழன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசங்கமாரி பொழிந்தார். இத்தகைய சூழ்நிலையிலேதான், 1906-ம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடு கல்கத்தாவிலே நடைபெற்றது. பாரதியார் அந்த மாநாட்டிற்குப் பிரதிநிதியாகவும், பத்திரிகையாளராகவும் சென்றார். உணர்ச்சிப் பிரவாகத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த பாரதியார் அக்காலத்தில் எழுதிய கட்டுரை களைப் படிக்கும்போது நாம் அவரது தீவிரவாத உணர்ச்சி களை அறிந்துகொள்ளலாம். வங்கப் பிரிவினையை ஆட்சே பித்து விண்ணப்பங்களும், வேண்டுகோள்களும் கர்ஸன் பிரபுவிற்கு அனுப்பப்பட்டிருந்தன. அவை பயனளிக்காமல் போகவே வங்கத்திலிருந்த தீவிரவாதிகள் பகிஷ்காரம், சுதேசி இயக்கம் ஆகிய இரண்டு நேரடி நடவடிக்கை களையும் பிரசாரஞ் செய்தனர். (அந்த ஆண்டிலேதான் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி, சுதேசி கப்பல் கம்பெனியைத் தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.) 'வந்தே மாதரம்' என்ற மந்திரத் தொடர் நாடெங்கும் புதுச் சக்தியைத் தோற்றுவித்தது.

## தன்னை மறந்த உணர்ச்சிப் பிழம்பு

ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள் பிரான்சு தேசத்தைப் பற்றி அழகான ஒரு விளக்கம் கூறுவார்கள். 'பிரான்சு தும்மினால் ஐரோப்பாவிற்குச் சளி பிடித்துக் கொள்கிறது' என்பதே அது. பிரான்சு நாட்டில் தோன்றிய புரட்சி சிந்தனைகள், ஐரோப்பாவை அவ்வாறு உலுப்பின. இந்த நூற்றாண்டின் முற்பகுதியைப் பொறுத்தவரையில் வங் காளத்திற்கும் இந்த உவமை பொருந்தும். 'வங்காளம் இன்று நினைப்பதை இந்தியா நாளை நினைக்கும்' என்று அக்காலத்தில் கூறத்தக்கதாக இருந்தது. பிற் காலத்திலே மகாத்மா காந்தியடிகள் இதனை நன்குணர்ந் தார். 'வங்கத்தை இந்தியாவின் ஒரு மாகாணம் என்று கொள்வது தான் இயல்பு; ஆனால் இந்தியாதான் வங்கத் தின் ஒரு மாகாணமோ என்று எனக்கு அடிக்கடி தோன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதுண்டு. ஏனென்றால் வங்கத்தின் தேசிய இயக்கத்தை நான் இந்தியாவெங்கும் காண்கின்றேன். ஆனால் வங்கத்தி லேயே அதன் முழு நிறை உயிராற்றலைச் செறிவுறக் காண முடிகிறது' என்று கூறினார் காந்தியடிகள். வந்தே மாதரம், அந்நியப் பொருள்கள் பகிஷ்காரம், சுதேசி இயக்கம் ஆகிய மூன்று தாரக மந்திரங்களையும் இந்தியாவிறகு அளித்த வங்காளக் குரலில் தீவிரவாதியான பாரதியார் வசமிழந்தார்; தன்னை மறந்த உணர்ச்சிப் பிழம்பாகத் தமிழ்நாடு திரும்பினார்.

'பாரத தேச விரோதிகள் நெஞ்சு
பதைத்திடு மந்திரமும்
பாதக ரோதினு மேதகவுற்றிடு
பண்புயர் மந்திரமும்
வார முறுஞ்சுவை யின்னற வுண்கனி
வான மருந்தெனவே
மாணுயர் பாரததேவி விரும்பிடும்
வந்தே மாதரமே'

என்று பாடினார். இதற்குச் சற்று முன்னதாகவே பாரதியார் பங்கிம் சந்திரர் எழுதிய 'வந்தே மாதரம்' என்னும் கீதத்தை மொழிபெயர்த்திருந்தார். அதுபற்றி ஒரு சிறு கட்டுரையும் எழுதியுள்ளார். அக்கட்டுரையின் மூலமாக பாரதியாருக்கு வங்காள மொழியும் ஓரளவு தெரிந்திருந்தது என்று ஊகிக்க முடிகிறது.

'தாய்த்தேசத்தை அந்தப் பாடலில் தாய் என்று வழங்கியிருப்பது மிகவும் பொருத்தமுடைத்தே. பலரால் இக்கீதத்திற்கு எழுதப்பட்டிருக்கும் ஆங்கில மொழி பெயர்ப் பானது பெங்காளி கீதத்திலிருந்து சில இடங்களில் மாறு படுகின்றது. அவ்வாறு மாறுபட்ட இடங்களில் என்னால் கூடிய அளவு பெங்காளிச் சொற்களை அனுசரித்தே தமிழ் மொழிபெயர்ப்பெழுதியிருக்கிறேன். எனது தமிழ் எத்தனை குறைவுபட்டிருந்த போதிலும் தெய்வப் புலவராகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கிம் பாவுவின் மதிப்பைக் கருதித் தமிழுலகத்தார் இதனை நன்கு ஆதரிப்பார்களென்று நம்புகிறேன்—'வந்தே மாதரம்.'

## வங்கத்துடன் ஏற்பட்ட இணைப்பு

வங்காளக் கவிஞர்கள்—அரசியல் வாதிகள் பக்கம் பாரதியின் உள்ளம் சாரத் தொடங்கியதை இவ்வார்த்தைகள் தெளிவாகக் காட்டுகின்றன. இக்காலத்தையொட்டி 'வந்தே மாதரம்' என்னும் வங்காளப் பத்திரிகையில் அரவிந்தர் வீராவேசம் பொருந்திய கட்டுரைகளை எழுதி வந்தார். சுதேசி இயக்கத்தில் இரவீந்திரநாத் தாகூரும் கலந்து வீர உணர்ச்சிகளுக்கு ஆக்கப்பணிகள் மூலம் உருவம் கொடுக்க முனைந்து கொண்டிருந்தார். வங்காள மொழியும் ஆங்கிலமும் தெரிந்த பாரதியார் இவை யாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தார். உடனுக்குடன் தானும் பல துறைகளில் உழைக்கத் தொடங்கினார். பாரதிக்கும் வங்கத்திற்கும் ஏற்பட்ட இணைப்பு இவ்வாறாக ஆரம்பமாயிற்று.

## வானைப் பிளந்த புதுக் குரல்கள்

பாரதியார் இயற்றிய சுதேச கீதங்கள் என்ற நூல் 1908-ல் வெளிவந்தது. **வங்க வாழ்த்துக் கவிகள், வந்தே மாதரம், எனது தாய்நாட்டின் முன்னாட் பெருமையும் இந்நாட் சிறுமையும்**, முதலிய கவிதைகள் மூலம் 1905-ம் வருடத்திலிருந்தே பாரதியார் தமது கவிதைப் பணியை மேற்கொண்டது மட்டுமின்றி இந்தியாவின் பிற பாகங்களுடன் சேர்ந்து சரிநிகர் சமானமாகச் சென்றிருக்கிறார் என்பது புலனாகிறது.

ஏறத்தாழ இக்காலப் பகுதியிலேயே இரவீந்திரரும் அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளாற் கவரப்பட்டார். 1901-ம் ஆண்டில் தாகூரின் 'நைவேத்தியம்' கவிதைத் தொகுதி வெளிவந்தது. இயற்கையின் அழகிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபஞ்சத்தின் இரகசியங்களிலும், மனதைப் பறிகொடுத்திருந்த தாகூர் வாழ்க்கையை நேர் நோக்கத் தொடங்குவதை நைவேத்தியம் முதன் முதலாகக் காட்டியது. தேசத்தின் விதியானது, அழைப்பானது, கவிஞரது உள்ளக் கதவைத் தட்டுவதை நாம் அப்பாடல்களில் காண்கிறோம். நாட்டின் நலிவுற்ற நிலையும் அஞ்ஞானப் போர்வையும், நீதியற்ற நெறியும் அகற்றப்பட வேண்டும் என்று தாகூர் உணரத் தலைப்பட்டார். இந்த மனோ நிலையில் அவர் கனவுலகிலிருந்து நனவுலகிற்கு வந்து கொண்டிருக்கும் போது தான் வங்காளத்தில் வந்தே மாதரம், சுதேசியம், பகிஷ்காரம் முதலிய புதுக் குரல்கள் வானைப் பிளந்தன. கவிஞர் அவற்றினை அகத்திலேற்றுக் கொண்டார். 1904-ம் ஆண்டிலேயே சுதேசி சமாஜம் என்னும் கட்டுரையை எழுதியிருந்தார் தாகூர். 1906-ல் பப்னாவில் நடந்த மாகாண மாநாட்டின் தலைமைப் பேருரையின் போதும் கிராமப்புறங்களின் அபிவிருத்தி பற்றி விளக்கினார் அவர்.

## இரு கவிஞருக்கும் பொதுச் சூழ்நிலை

எனினும், அரசியலைப் பொறுத்தவரையில் தாகூர் சற்று நிதானமான போக்கும் ஓரளவு பற்றற்ற மனப் பான்மையும் கொண்டு விளங்கினார். இதற்குக் காரணமும் இல்லாமலில்லை. 1907-ம் ஆண்டளவில் தாகூர் நேரடியாக அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளில் அக்கறை செலுத்தத் தொடங்கியபோது அவருக்கு 45 வயதிற்கு மேலாகி விட்டது. கல்கத்தா காங்கிரசுக்கு பாரதியார் சென்றபோது இருபத்தினான்கு வயது. தாகூர் பல கவிதைகளையும், சிறுகதைகளையும், நாடகங்களையும் எழுதிக் குவித்திருந்தார். பாரதியாரோ இலக்கிய உலகில் பிரவேசித்து இரண்டொரு வருடங்கள் தானாகியிருந்தன. தாகூரது மனைவியும் இரண்டாவது மகளும் கடைசி மகனும் இறந்து விட்டனர்; பாரதிக்கோ விவாகமாகியே பத்து வருடங்கள் தானாகியிருந்தன. தாகூரோ மேனாடு சென்று திரும்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்தார்; பாரதி வட இந்தியாவில் காசிக்கும், கல்கத்தாவிற்கும் சென்றிருந்தார். இந்த வேறுபாடுகளைத் தவிரப் பொருளாதார நிலையிலும் பாரதியார் தாகூரைவிட ஆயிரம் மடங்குக் குறைந்தவராயிருந்தார். எனினும் 1906-ம் ஆண்டு கல்கத்தா மாநாட்டிலே தாதாபாய் நௌரோஜி 'சுயராஜ்யா' என்ற சொல்லை முதன் முறையாக உபயோகித்ததைத் தொடர்ந்து நாடு புதியதொரு கோலத்தையும் வேகத்தையும் பெற்றிருந்தது. அது இரு கவிஞர்களுக்கும் பொதுவான சூழ்நிலையாகவிருந்தது. இலக்கிய உலகில் இருந்துகொண்டு அரசியல் உலகின் விளிம்பில் உலாவினார் இரவீந்திரர்; அரசியல் களத்தில் நின்றுகொண்டு தற்செயலாக இலக்கிய நிழலில் ஒதுங்கினார் பாரதியார். 1907-ம் ஆண்டளவில் இரு கவிஞர்களுக்கும் மேற்கூறிய ஒப்புமை வேற்றுமைகள் இருந்தன. 1908-ம் ஆண்டிலிருந்து தேசிய காங்கிரஸ் பிளவுண்டு தீவிரவாதிகள், மிதவாதிகள் என்று இரு கூறாயிற்று. சூரத் காங்கிரசில் இது தொடங்கிற்று. ஆங்கிலேய ஏகாதிபத்தயம் மிதவாதிகளை ஆதரித்துத் தீவிரவாதிகளை நசுக்க முனைந்தது. தீவிரவாதிகள் பக்கம் நின்ற பாரதியார் தான் நடத்திய ''**இந்தியா**'' என்ற பத்திரிகையிலே சட்ட வரம்பை மீறி நெருப்பு மழை பொழியத் தொடங்கினார். தீவிரவாதிகளின் குரல்கள், பலாத்காரச் செயல்கள், எழுத்துக்கள், குழப்பங்கள் முதலியவற்றிற்கிடையில் தமது ஆக்கப்பூர்வமான சமூகப் புனருத்தாரண வேலைக்கு இடமும், வாய்ப்பும் இல்லையென்று கண்ட தாகூர் மீண்டும் சாந்திநிகேதனத்தின் அமைதியை நாடினார். பாரதியாரோ நண்பர்களுடைய ஆலோசனையின் பேரில் தனது நன்மைக்காகவும், இயக்கத்தின் நன்மைக்காகவும், புதுச்சேரி போய்ப் புகலிடந் தேடினார்.

அங்கு அவரது வாழ்வில் பல முக்கியமான சம்பவங்கள் நடைபெற இருந்தன. கவிதை வாழ்வு மலர இருந்தது.

தாகூரோ தனது மகத்தான கீதாஞ்சலியை எழுதத் தொடங்கிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

# 2

மகாகவி பாரதியாருடைய சரிதையைத் தமிழில் எழுதியவர்களில் ஒருவரான சுத்தானந்த பாரதியாரும், ஆங்கிலத்தில் எழுதியுள்ள பேராசிரியர் பி. மகாதேவனும் ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டுள்ளனர். பாரதியார் இரவீந்திர நாத் தாகூருடன் கவிதைப் போட்டி நடத்த விரும்பினார் என்பதைக் காட்டும் அந்தச் சம்பவத்தைச் சுத்தானந்தர் பின்வருமாறு எழுதியுள்ளார்.

**பாரதி :** அப்பா! இப்போது தாகூர் எங்கிருக்கிறான்?

**சிஷ்யன் :** மதுரையில்.

**பாரதி :** உடனே புறப்படு. சலோ மதுரை. அவனை ஒரு கை பார்க்கிறேன்.

**சிஷ்யன் :** நாம் போவதற்குள் தாகூர் சென்று விட்டால்....?

**பாரதி :** அட அபசகுணமே! நமது தமிழ்நாட்டுக்கு தாகூர் வந்து நம்மைக் காணாமல் செல்லுவதா!

**சிஷ்யன் :** விலாசம் தெரியாதே!

**பாரதி :** அட சீ! 'தாகூர் மதுரை' என்றால் தந்தி பறக்கும் ஐயா!

**சிஷ்யன் :** சரி என்ன செய்தி அறிவிக்க?

**பாரதி :** 'தமிழ்நாட்டுக் கவியரசர் பாரதி, உம்மைக் கண்டு பேச வருகிறார்' என்று உடனே தந்தி அடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிஷ்யன் :** அங்கே போய் என்ன செய்யப் போகிறீர்?

**பாரதி :** ஓய், ஓய், நாம் தாகூருக்கு ஒன்று சொல்லு வோம்: 'நீர் வங்கக் கவி; நாம் தமிழ்க் கவி. விக்டோரியா ஹாலில் கூட்டம் கூட்டுவோம். உமது நோபல் பரிசைச் சபைமுன் வையும். நாமும் பாடுவோம். நீரும் பாடும். சபையோர் யார் பாட்டுக்கு 'அப்ளாஸ்' கொடுக்கிறார்கள் என்று பார்ப்போம். நமது பாட்டே நயம் என்று சபை யோர் மெச்சுவார்கள். உடனே உமது கையால் எமக்கு நோபல் வெகுமதியைத் தந்து செல்ல வேண்டியது' என்போம்!

**சிஷ்யன் :** அதெப்படி? அவர் வங்காளத்தில் பாடுவார்; நீர் தமிழில் பாடுவீர். வங்காளத்திற்குக் கிடைத்த நோபல் பரிசு உமது தமிழுக்கு எப்படிக் கிடைக்கும்?

**பாரதி :** அட, அட ஜெயமே! சர்வேசுவரன் தமிழ னுக்கு எல்லாம் வைத்தான்; புத்தி மட்டும் வைக்கவில்லை. நேற்றுப் பிறந்த வங்காளத்தான் நோபல் பரிசு வாங்க வேண்டும், கற்பகோடி காலம் வாழ்ந்த தமிழ் அந்தப் பரிசுக்கு லாயக்கில்லையோ?

**சிஷ்யன் :** மன்னிக்க வேண்டும். தமிழ் வங்கத்திற்குத் தாழ்ந்ததில்லை. ஆனாலும் அவர் உலக மகாகவி, உலகப் புகழ் பெற்றவர்.

**பாரதி :** நாம் உலகப் புகழ்பெற முடியாதோ? அட தரித்திர மனிதா! அந்த இழவுக்குத்தான் நோபல் வெகு மதியை தாகூரிடமிருந்து வெல்ல வேண்டும் என்கிறோம்!

இந்த மாதிரியே பேசிக்கொண்டு பாரதியார் இரவில் எட்டையபுரம் வந்தார் (1919). பிறகு நன்றாக சாப்பிட்டுத் தலையைச் சாய்த்தார்; மறுநாள் காலையில்தான் எழுந்தார். நோபல் வெகுமதி விஷயம் மறந்தே போயிற்று.

இது யோகி சுத்தானந்தர் தீட்டியுள்ள சித்திரம். 1918-ல் பாரதியார் புதுச்சேரி வாழ்க்கை அலுத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்த் தமது மனைவியின் ஊரான கடயத்திற்குச் சென்றார். கடயத்தில் ஈராண்டு வாழ்க்கை; அப்பொழுது தான் மேற்கூறிய சம்பவம் நிகழ்ந்ததாகத் தெரிகிறது.

## விடை பெறுமுன் இறுதி அஞ்சலி

தாகூருடன் கவிதைப் போட்டி நடத்த வேண்டும் என்ற இந்த எண்ணம் ஒருவித 'க்ஷணப்பித்தம்' என்பதில் ஐயமில்லை. சலன புத்தி கொண்டிருந்த பாரதியார் எதையும் மித மிஞ்சியே செய்வார்; சொல்வார். அந்த வகையில் தாகூருடன் 'கவிதா வாதம்' நடத்த உணர்ச்சி யினால் உந்தப்பட்டிருப்பாரே தவிர, தாகூரைப் பற்றிப் பாரதியார் குறைவாக எண்ணினார் எனக் கூறமுடியாது. ஏனெனில், பாரதியார் இறப்பதற்குச் சில வாரங்களுக்கு முன் எழுதிய கட்டுரையிலே தாகூரின் ஐரோப்பிய விஜயஞ் சம்பந்தமாகப் பாராட்டி எழுதியிருக்கிறார். ஸ்ரீ ரவீந்திர திக் விஜயம் என்னும் கட்டுரையை 1921 ஆகஸ்டு 25-ல் 'சுதேசமித்திரனி'லே பாரதியார் எழுதினார். அதற்கடுத்த மாதம் செப்டம்பர் 11-ம் தேதி பாரதி அமரராகிறார். 'உலகப் புகழ் பெற்ற ஒரு கவிஞருக்கு மற்றொரு சிறந்த கவிஞர் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்திவிட்டு விடை பெற்றுக் கொள்கிறார்' (பெ. தூரன்—பாரதி தமிழ்).

நோபல் பரிசு, இரவீந்திரர் சுற்றுப் பிரயாணச் சிறப்பு முதலியன ஒரு புறமிருக்க, தாகூரின் எழுத்துக்களைப் பாரதி யார் கூர்ந்து படித்து வந்திருக்கிறார் என்பதற்குப் போதிய சான்றுகள் இருக்கின்றன.

இந்த இடத்திலே ஓருண்மையை நாம் மனத்திலிருத்திக் கொள்ளுதல் தகும். மகாகவி பாரதியாரைப் பற்றி எண்ணும்போது அவரது கவிதைகளே முன்னுக்கு வருகின் றனவாயினும் பாரதி பற்றிய எந்த ஆராய்ச்சியும் அவரது வசனப் படைப்புகளின்றிப் பூரணமாகாது. பாரதியாரது இலக்கிய ஆவேசத்தையும் ஆத்ம பக்குவத்தையும் அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளே திறம்படக் காட்டுவனவாயினும் பாரதியாரது எண்ணக் குவியல்கள், சிந்தனைத் துளிகள், உணர்ச்சிப் பொறிகள் ஆசாபாசங்கள், முரண்பாடுகள் முதலியவற்றை அவரது வசனப் படைப்புக்களே தெளிவாகக் காட்டுகின்றன; காட்ட முடியும். எனவே பாரதியார் கண்ட தாகூரைப் பற்றி நாம் ஆராயும்போது பாரதியாரது வசன இலக்கியங்கள் அடிக்கடி தம்மை இனங்காட்டிக் கொள்கின்றன. பல அரிய செய்திகளைத் தெளிவாக்குகின்றன என்பதை மறக்கலாகாது.

## சிறு கதைகள் மொழிபெயர்ப்பு

தாகூருடைய சிறு கதைகள் சிலவற்றைப் பாரதியார் மொழிபெயர்த்திருக்கிறார். புதுச்சேரியில் இருந்த காலத்தில் (1908-1918) தாகூர் சிறு கதைகளில் எட்டை பாரதியார் மொழி பெயர்த்தார். தாகூரின் பிரசித்தி பெற்ற சில சிறு கதைகளான கல்லின் வேட்கை (க்ஷுதித பாஷாணம்), விடுமுறைக் காலம், மானபங்கம் (கிரிபாலா), நஷ்ட பூஷணம், பத்திராதிபர், ஸுபா, நள்ளிரவிலே ஸ்மாப்தி முதலியன இந்த எட்டுக் கதைகள் ஆகும். (இக்காலப் பகுதியிலேதான் வ. வே. சு. ஐயர் அவர்களும் சிறுகதைகள் எழுதத் தொடங்கியிருந்தார்.)

"இங்கிலீஷ் படித்து அதிகாரம் செய்வதைவிட, தமிழைப் போற்றி அதிகப்படுத்துவது நல்லது. புதிய புதிய நடைகளில் தொடருள்ள காவியங்களை விவரிப்பது, கோவையான பாசுரங்களைப் பதம் பிரித்து அச்சிடுவது, பெயர்போன பாஷைகளிலிருந்து நல்ல கதைகளைப் பிரசுரிப்பது....இதனால் நன்மை உண்டாகும்" என்று பாரதியார் கூறியிருக்கிறாரல்லவா? அந்த வகையிலே தாகூரின் கதைகள் 'மாடர்ன் ரிவியூ' (Modern Review) ஆங்கில சஞ்சிகையில் வந்ததும் பாரதியார் அவற்றைத் தமிழாக்கினார். தாகூர் கதைகளைத் தான் மொழி பெயர்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைந்ததற்கும் பாரதியாரே இலக்கிய ரீதியான காரணம் கூறியுள்ளார்.

"இரவீந்திரநாதரின் கதை அது (மானபங்கம்). அப்படிப்பட்ட கதைகளை மொழி பெயர்ப்பதும் நல்லதே. பாவ கர்ப்பிதமான துணுக்குக் கதைகள்....நம் வழக்கம் 'ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தான்' என்று ஆரம்பித்து, 'சௌக்கியமாக இருந்தான்' என்று முடிப்பது. ஆனால் இந்தப் புது வழியோ, புயல் காற்றுப்போல் ஒரு காட்சியைக் காட்டி மறைத்துவிடுகிறது. நாமே சில நேரம் யோசனை செய்தால் பொருள் தெளிவாகத் தெரியும். இது ஒரு வழி...." (யதுகிரி அம்மாள்: பாரதி நினைவுகள்).

## எண் திசைக் கலைச் செல்வம்

இரவீந்திரர் 1891-ல் சிறுகதைகள் எழுதத் தொடங்கிவிட்டார். வங்கச் சிறுகதை இலக்கியத்திலும் இந்தியச் சிறுகதை இலக்கிய உலகிலும் அவர் 1915-ம் அளவிலேயே தனிப்பட்ட ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டார். எட்டுத் திக்கிலிருந்தும் கலைச்செல்வங்களைக் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் என்று தமிழ் மக்களுக்குக் கட்டளையிட்ட புலவன், தாகூரின் கதைகளைப் பெயர்த்துத் தனது பங்கையும் செலுத்திக் கொண்டிருந்தான். தாகூரின் கதைகளிலே இயல்பாகக் காணப்படும் இலக்கிய நயம் ஒருபுறமிருக்கச் சில கதைகளின் பொருளும் பாரதியாருக்குப் பிடித்திருக்கின்றது. நிவேதிதா தேவியைச் சந்தித்து 'ஞானோபதேசம்' பெற்ற நாள் முதலாய் ஆண் பெண் சமத்துவத்தைப் பாரதியார் பலவாறாகவும் எடுத்துக் கூறி வந்தார். தனது சிந்தனையையொட்டியுள்ள தாகூர் கதைகளை அவர் விரும்பித் தெரிந்து பெயர்த்ததிலும் வியப்பில்லை. உதாரணமாக 'மானபங்கம்' என்னும் கதையை பாரதியார் விரும்பியதற்கு ஒரு காரணத்தை அவரே கூறியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அதில் பதுமைப்போல் இருக்கும் அழகைவிட மனிதர்கள் நடக்கும்போதும், கைகளை அசைக்கும்போதும், சிரிக்கும் போதும் நாற்புறமும் பார்க்கும் போதும் இருக்கும் அழகு அதிகம் என்கிறார் (ரவீந்திரர்): புருஷன் மனைவியைக் கட்டுப்படுத்தித் தன் மனம் போல் நடக்கிறான். மனைவி புருஷனுக்குப் பதில் செய்து காட்டுகிறாள். இது புதிய வழி...'

**'கற்புநிலையென்று சொல்ல வந்தார், இரு**
**கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்'**

என்றும்,

**'விலகுவீட்டிலோர் பொந்தில் வளர்வதை**
**வீரப்பெண்கள் விரைப்பில் ஒழிப்பராம்'**

என்றும் பாடிய கவியரசர் **'மானபங்கம்' 'நள்ளிரவிலே' 'ஸ்மாப்தி'** முதலிய கதைகளை விரும்பியதற்குக் கதைப் பொருளும் முக்கிய காரணமாக இருந்திருக்கலாம்.

## ஐந்து கட்டுரைகள் மொழிபெயர்ப்பு

தாகூருடைய ஐந்து கட்டுரைகளை மொழி பெயர்த்திருக்கிறார் பாரதியார். 1919-ல் **'மாடர்ன் ரிவியூ'** சஞ்சிகையில் இக்கட்டுரைகள் வெளிவந்தன. ஜப்பானுடைய ஆவி (The Spirit of Japan), ஜாதி (The Nation), அடங்கி நட (Thou Shalt Obey), கல்வி கற்கும் பாஷை (The Medium of Education), சிறிதும், பெரிதும் (The Small and the Great) **'தாகூரின் பஞ்ச வியாசங்கள்'** என்ற தலைப்புடன் ஒரு நூலாகவும் முன்பு வெளியிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இவ்வைந்து கட்டுரைகளும் பெரும்பாலும் அரசியல் சார்பானவை. கீழைத்தேயங்களின் விழிப்பு எந்தப் போக்கில் அமைந்திருக்கிறது; அதன் நன்மை தீமைகள் எவ்வாறு காணப்படுகின்றன என்பனவற்றையெல்லாம் தாகூர் இக்கட்டுரைகளில் எழுப்பியிருந்தார். 'ஸ்ரீமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. சுப்பிரமணிய பாரதி', 'காளிதாஸன்', 'சக்திதாஸன்' முதலிய பெயர்களில் பாரதியார் எத்தனையோ சர்வதேச அரசியல் விவகாரக் கட்டுரைகள் எழுதியுள்ளார். அரசிய லில் மூழ்கிப் போயிருந்த ஒருவருக்கு இத்தகைய உலகக் கண்ணோட்டம் இயல்பானது என்பதுடன், பத்திரிகை யாளராகவும் இருந்த பாரதியார் விரும்பியோ, விரும் பாமலோ உலக அரசியல் நிகழ்ச்சிகளில் அக்கறை செலுத்த வேண்டியிருந்திருக்கும். எனவே தாகூர் எழுதிய சில முக்கியமான விவரங்களைப் பாரதியார் மொழிப் பெயர்த் தமைக்குப் போதிய காரணங்கள் உள்ளன. ஆனால் ஒரு கட்டுரையை மொழிபெயர்ப்பவர்—சில சந்தர்ப்பங்களில் கடமைக்காக—மூலக் கட்டுரைக் கருத்துக்கள் யாவற்றை யும் ஏற்றுக் கொள்ளவேண்டிய தேவை இல்லை என்பதை நாமறிவோம். தாகூருடைய கருத்துக்கள் சில பாரதி யாருக்கு உடன்பாடாக இருந்திருக்கமாட்டா எனத் தோற்றுகிறது. எனினும் உடன்பாடே அதிகம் என்பதில் ஐயமில்லை. உதாரணமாக 'கல்வி கற்கும் பாஷை' என்னும் தாகூர் கட்டுரையைப் படிக்கும் பொழுது பாரதியார் கட்டுரையைப் படிப்பது போன்ற பிரமை ஏற்படும்.

"நம்முடைய தாய்ப் பாஷையில் உயர்தரக் கல்வி கற் பித்து அக்கல்வியை முழுதும் நம்மதாக்கிவிட வேண்டு மென்று சொல்லும் தைரியம் நமக்கெப்போதுமே வராது போகுமா?"—(தாகூர் 1917)

"தமிழ் நாட்டில் உண்மையான கல்வி பரவவேண்டு மானால் சகல சாஸ்திரங்களும் தமிழ் பாஷை மூலமாகவே கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை....அனுஸர ணைக்குக் கொண்டுவருவதற்குத் தக்கபடி நமக்குள்ளே சக்தி பிறக்கவில்லை."—(பாரதியார் 1916).

## தாகூரின் தனித் தாய்மொழிப் பற்று

ஆங்கில மோகம் பெருகியிருந்த அந்தக் காலத்திலே தாய்மொழி மூலம் சகல கல்வியும் போதிக்கப்பட வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கனவு கண்டு அதற்காக நடைமுறையிலும் உழைத்த வர் தாகூர். இந்தியாவிலேயே பல்கலைக்கழகப் பட்ட மளிப்பு விழாப் பேருரை ஒன்றினைத் தாய்மொழியில் நிகழ்த் தியவர் தாகூர்தான். இந்தத் துறையில் தாகூர் முன்னோடி என்பதில் ஐயமில்லை. எனினும் பாரதியாரும் தனது பொது வாழ்க்கையின் ஆரம்பத்திலிருந்தே இந்தத் துறையில் திட்ட வட்டமான தெளிவான கருத்துக் கொண்டிருந்திருக்கிறான்.

....பெரிய ஸ்தலங்களில் ஸம்ஸ்கிருதம் தமிழ் முதலிய பாஷைகளைக் கற்றுக்கொடுக்கப் பெரிய பாடசாலைகள் ஏற்படுத்திச் சம்பளம் கொடுக்கச் சக்தியற்றவர்களுக்குச் சம்பளம் இல்லாமல் கல்வி கொடுப்பாராகில் ஜனங்களை நாகரிகத்திலும் புத்தியிலும் விருத்தி செய்ய எவ்வளவு உபயோகமாயிருக்கும்....(ஆலயங்கள் 1906)

தாய்மொழிக் கல்வி சம்பந்தமாகத் தாகூரின் கட்டு ரையை மொழி பெயர்த்து வெளியிட்ட பாரதியார் இரவீந் திரரின் நாட்டுக் கல்வி என்னும் பாடலையும் மொழி பெயர்த்திருக்கிறார்.

இரவீந்திரர் குழந்தைகளைப் பற்றிப் பாடிய பாடல் களில் 'வளர்பிறை' என்பதொன்று குதரிச், மாக்டொ னால்ட், பெலீஷியா, ஹீமன்ஸ் முதலிய ஆங்கிலக் கவிகள் பாடிய குழந்தைப் பாடல்களைக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மொழி பெயர்த்ததுபோல் பாரதியார் வளர்பிறைக் கவிதைகளை மொழி பெயர்க்கவில்லை. தாம் எழுதிய குழந்தைக் கதை என்ற பகுதியில் ஓர் இலக்கியக் குறிப்பாகத் தாகூரின் சில அடிகளை வசன வடிவத்தில் பெயர்த்துத் தனது கருத்தையும் தெரிவித்துள்ளார். தாகூரையோ பாரதியாரையோ இதில் விசேஷமாகக் காண முடியாது.

## வங்க இசையுலகில் இணையற்ற இடம்

இரவீந்திரருடைய பாடல்கள் பெரும்பாலானவை இசை நயம் பொருந்தியன. வங்க இசையுலகில் அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் ஈடு இணையற்றது. சங்கீத விஷயத்தில் பாரதியாருக்கும் மிகுந்த ஈடுபாடு இருந்தது. பாரதியார் பாடல்களை அவரே கவிதா வெறியோடு பாடக் கேட்டவர்கள் அதன் உணர்ச்சிப் பிரவாகத்தைப் பலவாறாகவும் வியந்து எழுதியுள்ளனர். பாடல்களைப் பொருளுணர்ந்து சுத்தமான உச்சரிப்புடன் நல்ல குரலில் பாடுவதுதான் சிறந்தது என்று பாரதியார் சமயம் வாய்க்கும் போதெல்லாம் கூறியிருக்கிறார் தமிழ்நாட்டுப் பாடகர்கள் இசைப் பெருமை முதலியன பற்றிப் பேசும் ஒரு சந்தர்ப்பத்திலே பாரதியார் இரவீந்திரநாத் தாகூரைத் தனக்கு துணையாக இழுக்கிறார்.

"ஐரோப்பிய சங்கீதம், ஹிந்து சங்கீதம் இரண்டையும் பற்றித் தமது கொள்கைகளை வங்கத்துப் புலவராகிய ஸ்ரீ ரவீந்திரநாத் தாகூர் தமது சரித்திரக் குறிப்புகளிலே எழுதியிருக்கிறார். இவர் இளவயதிலேயே பல வருஷம் இங்கிலாந்தில் வாஸம் செய்தவர். குழந்தை முதலாகவே நல்ல ரஸிகர். இவருடைய வார்த்தைகள் மதிப்புக்குரியன" என்ற அறிமுகக் குறிப்பையெழுதிவிட்டுத் தாகூரிலிருந்து மேற்கொள் காட்டுகிறார். இறுதியிலே கூறுவதும் நாம் கவனிக்கத்தக்கது.

## பாரதியின் தமிழ் இசைக்கலை ஞானம்

"மேலே ரவிந்திரர் வார்த்தைகளை (நான்) அப்படியே மொழிபெயர்க்கவில்லை. ஸாராம்சத்தை எனது பாஷையில் எழுதியிருக்கிறேன். நம்முடைய ஸங்கீத சாஸ்திரம் ஐரோப்பிய சாஸ்திரத்தைவிட மேலானது என்று ரவீந்திரர் சொல்லும் வார்த்தை முழுவதும் உண்மையென்பது இரண்டு முறைகளிலும் பழக்கமுடைய பண்டிதரெல்லாருக்கும் தெரிந்த விஷயமேயாகும். ஆனாலும் நமது தேசத்து வித்வான்கள் கண்டப்பயிற்சி, ஸபா நாகரிகம் என்ற அம்சங்களில் ஐரோப்பியருக்குச் சமானமாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி முயற்சி செய்தால் நல்லது. ஜனங்களுக்கு இன்பம் அதிகப்படும். பாடுவோருக்குப் பணம் அதிகப்படும்'' என்று தாகூர் மேற்கோளுக்கு முடிவுரை வைக்கிறார் பாரதியார். தாகூர் கருத்துக்களைப் பாரதியார் எடுத்தாளும் விதத்திற்கு இது சிறந்த உதாரணமாகும் என்று நான் நினைக்கிறேன். ஸங்கீத விஷயம் என்னும் தலைப்பில் பாரதியார் தமிழ் நாட்டில் இசைக்கலை நிலையைப்பற்றி விரிவானதொரு கட்டுரை (அறிவுரை) எழுதியுள்ளார். அதனைப் படிக்கும் போது இசைக்கலை நுணுக்கங்கள் பற்றி பாரதியார் கொண்டிருந்த தெளிவான, ஆணித்தரமான கருத்துக்கள் தெளிவாகும்.

தாகூரின் கவிதை. கட்டுரைகள், சிறுகதைகள் முதலியவற்றை மொழிபெயர்த்தும் மேற்கோள் காட்டியும் வெளியிட்டதைத் தவிரச் சில சந்தர்ப்பங்களில் அகஸ்மாத்தாகவும் பாரதியார் தாகூரைக் கையாண்டுள்ளார்.

## சிறந்த சிந்தனைக் கட்டுரை ஒன்று

பகவத்கீதை முன்னுரை பாரதியாரது சிந்தனைக் கட்டுரைகளில் சிறந்ததொன்று. சன்னத்த வெறிகொண்ட பாரதியார் பொறுமையாக இருந்து எழுதிய வசனங்கள் குறைவே. அவற்றுள் தலையாயது கீதை முன்னுரை எனலாம். அதிலோரிடத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

''பரமாத்மா ஜீவாத்மா இருவருமே உலக காரியங்களில் தலைப்பட்டுத்தான் இருக்கிறார்கள், கீர்த்தி பெற்ற வங்கக் கவியாகிய ஸ்ரீமான் இரவீந்திரநாத் தாகூர் கடவுளை நோக்கி, ஐயனே, நீயே ஸம்ஸார வலையில் அகப்பட்டிருக்கிறாயே? யான் இதினின்றும் விடுதலை வேண்டும் பேதமை என்னே? என்று பாடியிருக்கிறார். 'ஸம்ஸார விருத்திகள் கடவுளுடைய விருத்திகள். செயலெல்லாம் சிவன் செயல். அவனன்றி ஓரணுவுமசையா' தெனும் பெரிய ஆப்தர் மொழியுண்டு கண்டீர்'' என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றெழுதிச் செல்கிறார் பாரதியார். அவரது தன்னம்பிக்கை மேற்கோளையே மங்கவைத்து விடுகிறது, சாதாரண 'கதையெழுதும்' ஒரு சந்தர்ப்பத்தில் பாரதியார் தாகூரை நினைத்துக் கொள்கிறார். குழந்தைக் கதை என்னும் பகுதியில் நாற்பத்தைந்து வயதுள்ள செட்டிச்சியம்மாவை வருணிக்கும்பொழுது "இரவீந்திரநாத் தாகூர் சொல்வது போல் இவளுடைய தலை மயிர் முக்காற்பங்கு பழமாகவும் காற்பங்கு காயாகவுமிருந்தது. அதாவது முக்காற்பங்கு நரை; பாக்கி நரையில்லை" என்று கூறியுள்ளார். வேறு சில கட்டுரைகளிலும் தனது மனதிற்பதிந்த தன் கண்ணிற் பட்ட சில பகுதிகளை பாரதியார் எடுத்துக் காட்டியுள்ளார். பெண்கள் முன்னேற்றம், தாய்மொழி மூலம் கல்வி, கலைகளின் மறுமலர்ச்சி, உலகக் கண்ணோட்டம், குழந்தை இலக்கியம் முதலிய துறைகளிலும் விஷயங்களிலும் பாரதியார் தாகூர் வாக்கைப் போற்றியிருப்பதைப் பார்க்கிறோம். இந்த மானஸீகத் தொடர்பு எத்தகையது. அதன் ஆழம் எவ்வளவு, பாரதியார் மீது தாகூர் செல்வாக்கு எவ்வாறு காணப்படுகிறது என்பனவற்றை இனிக் கவனிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

1905-ல் வங்கம் துண்டாடப்பட்ட பொழுது இந்திய தேசிய உணர்ச்சி பொங்கிப் புரண்டது. அந்த மகத்தான சரித்திர காலகட்டம் கவிஞராக இருந்த இரவீந்திரநாத் தாகூரையும் இழுத்துக் கொண்டது என்று முன்பு கண்டோமல்லவா? தாகூர் அந்தக் காலத்திலே கணக்கற்ற பொதுக் கூட்டங்களிலே பேசினார்; தமது கவிதைத் திறனையும் இயக்கத்திற்கு அர்ப்பணித்தார்; அவரது உணர்ச்சி செறிந்த விடுதலைக் குரல் நாடு முழுவதும் கேட்டது. தாகூரின் இயக்கப் பாடல்கள் வங்காள இளைஞர்களை மேலும் மேலும் தூண்டியது. ('பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனி சிறந்தனவே' என்பது அக்கால வங்காளத்தில் நிலவிய சுலோகமாகும். பாரதி அதனை நேரடியாகப் பெயர்த்திருக்கிறார்.)

## தேசியப் பாடல்களில் பெருநாட்டம்

இந்தச் சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்டோ என்னவோ பாரதியாரின் சிந்தனையும் உணர்ச்சியும் தேசியப் பாடல்களை நாடுவதைக் காணலாம். 1906-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13-ம் தேதி பாரதியார் பத்திரிகையிலே 'விண்ணப்பம்' ஒன்றை விடுத்துள்ளார்.

''எமது தாய் நாடாகிய பாரதாம்பிகையின் பெருமையை வருணித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துப் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற செய்யுள் மணிகளை ஓர் மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதியிருக்கின்றேனாதலின் பண்டைத் தமிழ் நூல்களில் பாரத நாடு முழுதினையும் ஒருங்கே புகழ்ந்து கூறப்பட்டிருக்கும் பாடல்களை அறிஞர் தெரிந்தனுப்புவார்களாயின் அவர்மாட்டு மிக்க கடப்பாடுடையவனாவேன். தமிழ்ப் புராணங்களிலும் இதிகாசங்களிலும் நாட்டுப் படலங்களில் நிடதம் கோசலம் முதலிய பகுதிகளைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் வருணனைகள் பயன்பட மாட்டா. தற்காலத்தே தமிழ்ப்புலமையிற் சான்று விளங்கும் பெருமக்கள் புதியனவாக 'தேசபக்தி'ப் பாக்கள் புனைந்தனுப்புவாராயின் அவையும் நன்றியறிவுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

சிறிய ஆற்றலுடையேனாகிய யான் இப்பெரிய தொழிலை நிறைவேற்றுவதன் கண்ணே எவ்வாற்றானும் துணைபுரிய விரும்புவோர் கால பரியயம் செய்யலாகாதென்று பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்

சி. சுப்ரமணியபாரதி''

இவ்வாறு அதே மாதத்திலே மறு முறையும் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார் கவிஞர். **'ஓர் சுதேசிய விண்ணப்பம்'** என்ற தலைப்பில் அது வெளியிடப்பட்டுள்ளது. அக்காலத்திலே இத்துறைகளில் வங்காளம் முன்னேற்றம் கண்டிருந்தது. ''பெங்காளத்திலும் மஹாராஷ்டிர தேசத்திலும் கலைகளிலே சில சிறிது சிறிது தளிர்த்து வருகின்றனவென்றாலும், இந்தியாவிலுள்ள மற்ற நாடுகளிலெல்லாம் அவை உயிரின்றி நிற்கின்றன'' என்று பாரதியாரே அந்த ஆண்டில் எழுதியுள்ளார். எனினும் பாரதியாரது வேண்டுகோள் தமிழகத்துப் 'புலவர் பெருமக்கள்' நெஞ்சைத் தொடவில்லையென்றே தெரிகிறது. இரண்டாண்டுகளுக்குப் பின்னர் 1908—ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி மாதம் 10—ம் தேதி பாரதியார் தனது 'ஸ்வதேச கீதங்கள்' என்னும் நூலை வெளியிட்டுவிட்டார். அதற் கடுத்த ஆண்டிலே (1909) 'ஜன்ம பூமி' (ஸ்வதேச கீதங்கள்—இரண்டாம் பாகம்) வெளிவந்தது. அதற்கெழுதிய முகவுரையிலே பாரதியார் ஓரிடத்திற் பின்வருமாறு கூறியுள்ளார்:

"சென்ற சுபகிருது வருஷத்திலே பாரத நாட்டில் சர்வ சுபங்களுக்கும் மூலாதாரமாகிய "தேசபக்தி" என்ற நவீன மார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தையெல்லாம் உடனே புளகிதமாகின. நல்லோருடைய குணங்களிலே குறையுடையவனாகிய யானும் தேவியினது கிருபையால் அப்புதிய சுடரினிடத்து அன்பு பூண்டேன். அவ்வண்பு காரணமாகச் சென்ற வருஷம் சில கவிதை மலர் புனைந்து மாதாவின் திருவடிக்குப் படைத்தேன்."

## அரசியல் கவிஞர் ஆன பாரதியார்

1908—ல் தேசியப் பாடல்களை வெளியிட்டதன் மூலம் 'அரசியல் கவிஞராக' பாரதியார் அடியெடுத்து வைக்கத் தொடங்கிய அதே ஆண்டில், இரவீந்திரநாத் தாகூர் அரசியலிலிருந்து விலகிக்கொண்டார். அரசியலிலும் பார்க்க இலக்கியமே தாகூரது உயிராக—ஆத்ம இலட்சியமாக இருந்ததால் சாந்திநிகேதனத்தின் அமைதியில் கலந்து தனது கவிதைப் படைப்புகளில் ஆழ்ந்துவிட்டார். பிற் காலத்திலே அவருக்குச் சர்வதேசப் பெருமை தேடிக் கொடுத்த கீதாஞ்சலி, சரதோற்சவம், பிராயச்சித்தம், ராஜா முதலிய நூல்கள் மெல்ல மெல்ல உருவாகத் தொடங்கியிருந்தன.

## தேசபக்தியும் தெய்வ பக்தியும்

தாகூருக்கும் மகாகவி பாரதியாருக்கும் இடையே காணப்படும் ஒப்புமை வேற்றுமைகளை ஆராய முனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது இந்தச் செய்தி முக்கியமானதாக நமக்குத் தோன்றுகிறது. இறுதிவரையும் தாகூர் அரசியலில் சிரத்தை இழக்கவில்லையாயினும் **'நைவேத்தியத்தில்'** இறைவனுக்குத் தம்மை அர்ப்பணித்த தாகூர் பக்தியும், அமைதியும் செறிந்த சிருஷ்டிகளையே பெரும்பாலும் படைத்தார். தம்மை ஆட்கொண்ட **'ஜீவனதேவதை'** என்னும் தெய்வத்தின் சித்தப்படியே யாவும் நடக்கின்றன என்றும் நம்பினார். அறிவின் துணைக்கொண்டு அவனியிலுள்ள மனிதச் சிறப்பையெல்லாம் அளந்து அன்புருவான உலகம் சமைக்கலாம் என்று தாகூர் கனவு கண்டார். பாரதியாரோ தேசபக்தியையே தெய்வபக்தியாக மாற்றிக்கொண்டார். வெறும் தேசபக்தியாக ஓர் உணர்ச்சியிருந்தால் அது வேகமும் ஆழமும் பெற்றிருக்காது. சமய மரபை அனுஷ்டித்தும் பாரத நாட்டைத் தாயாகவும், நாட்டுப்பற்றைத் தாயன்பாகவும் தேசப் பற்றைப் பக்தி வைராக்கியமாகவும் கொண்டார் பாரதியார். தேச பக்தியைத் தெய்வ பக்தியாக எவ்வாறு கண்டார் பாரதியார் என்பதற்கு ஓர் உதாரணம் பார்க்கலாம். **'இந்தியனாகப் பிறப்பதே பெரிய பாக்கியம்'** என்னும் கட்டுரையில் (1909) பாரதியார் எழுதியுள்ள பாடல் இது. **''கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே''** என்று அப்பர் சுவாமிகள் பாடியுள்ளார் பாரதியார். (இளங்கவிகளுக்கு ஏற்படும் ஓர் அனுபவம் இது.)

**''சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து**
**தரணியொரு வான் ஆளத் தருவரேனும்**
**மங்குவார் அவர் செல்வம் மதிப்போமல்லோம்**
**மாதாவுக்கே காந்தர் அல்லர் ஆகில்**
**அங்கமெல்லாம் குறைந்து அழுகு தொழு நோயராய்**
**ஆ உரித்துத் தின்றுழலும் புலையரேனும்**
**கங்கை பாய்வள நாட்டிற்கு அன்பராகில்**
**அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே''**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று, சமயக்குரவர் பாடியருளிய தேவாரத்தைத் தாய் நாட்டு விடுதலை இயக்கத்துடன் கொண்டு இணைக்கிறார் பாரதியார். பாரதியாரையும் தாகூரையும் ஒப்புநோக்கிப் பார்க்கும் போது இந்த முக்கியமான வேறுபாடு புலப்படும்.

அரசியல் கருத்திலே பாரதியாருக்கும் தாகூருக்குமிடை காணப்படும் கருத்து வேறுபாடு, பொதுவாக அவர்களுடைய பொதுக் கண்ணோட்டத்திலும் பிரதிபலிக்கிறது என்று கூறலாம்.

## பொதுவான தேசிய எழுச்சி

புதுச்சேரியிலே பாரதியார் இருந்த பத்தாண்டுக் காலத்தில் நேரடியான அரசியல் களத்தினின்று அகன்று இருந்தாராயினும் அரசியல் தோய்ந்த சமய உணர்ச்சியே அவரது அடித்தளத்தில் இருந்தது. 'அரசியல் தோய்ந்த' என்று கூறும் பொழுது அரசியல் அடிப்படையில் எழுந்த சமூக கலாசார உணர்வையும் நான் சேர்த்துக் கொள்கிறேன். ஆனால் தாகூர் மனமோ அப்படியன்று. பூரண மான கலைஞனது உள்ளம் அவரது உள்ளம். தம் மனத்தைத் தோண்டித்தோண்டி எண்ணற்ற மனித உணர்வுகளுக்கும், சிந்தனைகளுக்கும், கலையுருவம் கொடுத்தார் தாகூர். பொதுவாக இந்தியாவை உலுப்பிய பரந்துபட்ட தேசிய எழுச்சி இருவருக்கும் பொதுவானதேயாயினும் அந்தப் பரந்த வட்டத்திற்குள் தாகூர் தனக்கென ஒரு 'கலை—இலக்கிய சமய' உலகத்தைக் சிருஷ்டித்துக் கொண்டிருந்தார். அதற்கு வேண்டிய வாழ்நாளும், நிதிக்குவையும் பிற வாய்ப்புகளும் அவருக்கு இருந்தன. 1921—ம் ஆண்டு தாகூர் **'விஸ்வபாரதி'** என்ற உலகப் பல்கலைக் கழகத்தை நிறுவித் தனது வாழ்க்கைப் பணியில் மற்றொரு திருப்பத்தைக் காண்கிறார். பாரதியாரோ அந்த ஆண்டில் தனது உள்ளத்துணர்ச்சியையும் உத்வேகத்தையும் தமிழ்க் காதலையும் தாங்கமாட்டாத உடலைப் பிரிந்து புகழுடம்பு புகுகிறார். இந்த ஒரு வேறுபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியையும் தாகூரையும் ஒப்புநோக்குமிடமெல்லாம் வந்து வந்து குறுக்கிடுகின்றது. எனினும் பாரதியார், தாகூர் தொடர்பை விரிவாக ஆராயுமுன் தாகூரைப் பற்றிச் சுருக்கமாகக் கோடிட்டுக் கொள்ளுதல் அவசியமாகும்.

## தாகூர் உருவாக உதவிய சக்திகள்

'தாகூர்—அவரது சிந்தனைகளின் தோற்றம்' என்னும் கட்டுரையொன்றிலே **டாக்டர் வி. எஸ். நரவனே** என்பவர் தாகூரைப் பாதித்துள்ள சக்திகளை ஆராய்கையில், இந்திய தத்துவஞானம், வைணவ பக்தி இலக்கியங்கள், பௌத்த மத—மனிதாயதம், சமஸ்கிருதக் காவியங்கள், வங்காள இலக்கிய கர்த்தாக்கள், ஆங்கிலக் கவிஞர்கள், உலக நிகழ்ச்சிகள் முதலியன முக்கியமானவை என்று கூறு கிறார். இவற்றில் வங்காள இலக்கிய கர்த்தாக்களைத் தவிர மற்றைய யாவும் பாரதியையும் பாதித்தன என்று துணிந்து கூறலாம். வேதங்கள், உபநிடதங்கள், சண்டி தாஸ், வித்யாபதி முதலிய வங்காள வைணவ பக்திக் கவிஞர்கள், பௌத்த சமயங்காட்டும் மனித அன்பு, சீவ காருண்யம், சமஸ்கிருத மகாகவியான காளிதாஸனது நாடகங்கள், குமார சம்பவம் போன்ற காவியங்கள், ஷெல்லி, வாட்ஸ்வர்த், பிரௌனிங், வால்ட் விட்மன் முதலிய மேனாட்டுக் கவிஞர்கள் (இளம் பிராயத்தில் தாகூரை வங்காள ஷெல்லீ என்று கூறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.) முதலிய சக்திகள் தாகூர் உருவாக உதவின என்பதில் விமர்சகர்கள் யாவரும் ஒரேமுகமாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆனால் இவற்றை இவ்வாறு பிரித்துப் பார்த்துவிடுவதால் தாகூரை விளங்கிக் கொண்டோம் எனக் கூறிவிட முடியுமா? இவை யாவற்றை யும் கிரகித்து அளவறிந்து சேர்த்து யாவற்றிற்கும் மேலாகத் தன்னையும் அதில் கலந்து படைத்தவைதான் தாகூரின் மகோன்னதமான இலக்கியப் படைப்புகள். அவை யாவற்றிலும் தாகூரின் ஆத்மா தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
470544

அவரின் ஆளுமை பொலிகிறது. தர்க்க ரீதியாகக் கூறப் போனால் தாகூரிடம் ஒரு பெரிய முரண்பாடும் காணப் படுகிறது. வங்காளம், இந்தியா, ஆசியா, உலகம், பிரபஞ்சம் என்று படிப்படியாக அவரது மனிதாயதம் விசாலித்து விரிவடைந்து போகையில், தாகூரது தனி மனித வாதமும் உயர்ந்து கொண்டே போகிறது. விடுதலைக்காக வீறுகொண்ட தேசிய கீதங்கள் பாடியவர் வீரச் செயல்களை விரும்பவில்லை: வங்காள இலக்கியத்தில் விந்தைகள் புரிந்த கவிஞர் இந்திய இலக்கியத்தையே மனதிற் கொண்டுழைத்தார்; சமுதாயச் சீர்திருத்தத்தில், மக்கள் கூட்டத்தின் நல்வாழ்வில் ஈடுபாடு கொண்டிருந்த தயாள குணம் படைத்தவர். காந்தியடிகளின் பரந்துபட்ட மக்கள் இயக்கத்தை அங்கீகரிக்க மறுத்து விட்டார்; இந்திய தேசிய விடுதலையை வேண்டியவர், தேசியம் ஆபத்தானது என்று சதா கூறிக்கொள்ளாமல் இருக்கவில்லை; இத்தகைய **'முரண்பாடுகளை'** அல்லது இரு துருவங்களிலுள்ள சிந்தனைகளை இணைத்து அமைதி காணத் தாகூரால் முடிந்தது. ''எனது கீதம் வான வீதியை நோக்கி கிளம்புகிறது; ஆனால் எனது நடனமோ பலமான நிலத்தில் நடைபெறுகிறது', என்று எதிரெதிர்களை இணைத்துத் தாகூரே கூறுகிறார். நெடிது நாள் வாழ்ந்த மகாகவியான தாகூர் பல முரண்பாடுகளுக்குத் தன் விசாலமான—உலகைத் தழுவிய உள்ளத்திலே—இடமளித்து அமைதி காண முடிந்தது.

## இரு கவிஞர்களின் முக்கிய வேறுபாடுகள்

பாரதி இந்தத் தாகூரைக் கண்டார்; தாகூரின் உலகக் கண்ணோட்டம் பாரதிக்குப் பிடித்திருந்தது என்பதில் சந்தேகமில்லை. துருக்கி, ஜெர்மனி, ரஷ்யா, ஜப்பான், சீனா, ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் அக்காலத்தில் நடைபெற்ற எத்தனையோ சம்பவங்கள் பற்றிப் பாரதியார் பத்திரிகைகளில் திட்டவட்டமான அபிப்பிராயங்கள் தெரிவித்துள்ளார். எனவே தாகூரின் உலகக் கண்ணோட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியாருக்கு ஏற்றதாயிருந்தது என்பதுறுதி. அக்காலத்திலே மெல்ல மெல்ல **'ஆசிய எழுச்சி'** ஒன்று உருவாகிக் கொண்டிருந்தது. 'அராபியர்களின் தீரச் செயல்கள், பாரசீகக் கவிதைகள், சீன ஒழுக்க விதிகள், இந்திய தத்துவ ஞானம் என்று பல விஷயங்கள் ஒன்றையொன்று தழுவிக் கொண்டு ஆசியாவிலே வளர்ந்த காலம் அது' என்று பேராசிரியர் ஹிரேன் முகர்ஜி காந்தியடிகள் பற்றித் தான் எழுதிய நூலில் ஓரிடத்திலே கூறியுள்ளார். பாரதி இவற்றையெல்லாம் கண்டார்; அவற்றில் நன்மையிருப்பதையும் உணர்ந்தார். எனினும் இந்தியாவில் முகிழ்த்த மறுமலர்ச்சியானது இந்து மதத்தின் அடிப்படையில் இருப்பதைப் பாரதியார் ஏற்றுக்கொண்டு, பிறவற்றைத் தழுவினார்; தாகூரோ எந்தவிதமான அடிப்படையுடனும் தன்னைப் பிணைத்துக் கொள்ள மறுத்து விட்டார். இந்து மத விழிப்புணர்ச்சியின் நற்புத்திரர்களில் ஒருவரான தாகூர் தன்னை உருவாக்கிய சூழலுக்குக் கட்டுப்பட மறுத்தார். உலகமே தனது உள்ளம் என்று கருதினார்; பாரதியோ தன்னையுருவாக்கிய சூழல் பெரும் பாலும் உயர்ந்தது என்று கொண்டு, அதற்கு அநுசரணையாக உலகத்தைத் தழுவ முற்பட்டார். இது இரு பெருங் கவிஞர்களுக்கிடையிலும் காணப்படும் மற்றொரு முக்கியமான வேறுபாடாகும்.

## சரித்திரப் புகழ் பெற்ற விவாதம்

மகாத்மா காந்தி பற்றிப் பாரதியாரும் தாகூரும் கொண்டிருந்த மாறுபட்ட கருத்துக்களைக் கவனிக்கும் போது இருவருக்கும் இடையில் நிலவிய மனோ வேறுபாட்டைத் திருஷ்டாந்தமாக அறிந்து கொள்ளலாம். 1921-ம் வருடம் மகாத்மா காந்திக்கும் தாகூருக்கு மிடையே சரித்திரப் பிரசித்திப் பெற்ற விவாதம் நடந்தது. மகாத்மா காந்தியை **'எமது தலைவர்'** எனப் பாராட்டிய தாகூர், பாமர ஜனங்கள் கண்மூடித்தனமாக அடிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மையுடன் காந்தியைப் பின்பற்றுவதைக் கண்டித்தார். ''எமது சிந்தனையையும் உணர்வையும் மேனாட்டிலிருந்து திருப்பிவிட இப்பொழுது நடத்தப்படும் போராட்டம் ஆத்ம தற்கொலைக்குச் சமமானதாகும். நமது யுகத்தின் முக்கியமான பாத்திரம் **தனி மனிதன்**. தேசிய இனம் அவனது வளர்ச்சியைத் தடைப்படுத்த அனுமதிக்கலாகாது....எமது தாய்நாட்டு மக்கள் உடுக்கத் துணியின்றிக் குளிரால் நடுங்கிக் கொண்டிருக்கும்போது (அந்நிய நாட்டு) துணிகள் குவிக்கப்பட்டு எரிக்கப்படுவதைப் பாருங்கள். இது என்ன மந்திரம்? உண்மையான பொருளாதாரம் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகக் கற்பனை மந்திரம் ஒன்று புகுத்தப்பட்டுள்ளது. அறிவையும் நிதானத்தையும் கைவிட்டு, அடிமைப் புத்தியுடன், மந்திரச் செயல் தழுவிய, பொய்யான பாதையை நாம் எதிர்க்க வேண்டும்'' என்று காந்தியின் வெகுஜன இயக்கம் கோரிய பூரண நம்பிக்கைக்கு அடி கொடுத்தார் தாகூர். 'மாடர்ன் ரிவியூ' சஞ்சிகையில் இவை வெளிவந்தன.

காந்தியடிகளின் பதிலும் ஈடிணையற்றது. உலகப் பிரசித்தி பெற்றது. 'யுவ இந்தியா' (Young India)வில் வெளி வந்தது.

## காந்தி பற்றிய பாரதி கருத்து

''யுத்தம் நடக்கும்போது கவிஞன் யாழைக் கீழே வைக்கிறான்; சட்ட அறிஞன் சட்ட நூல்களையும், மாணவன் பாடப்புத்தகங்களையும் கீழே வைக்கிறான். யுத்தம் முடிந்ததும் கவிஞன் தனது சொந்த ராகத்தைப் பாடுவான்; அந்நிய உடைகளைத் தீயிலிடும்போது எனது வெட்கத்தைக் கொளுத்துகிறேன். கவியுள்ளம் எதிர்காலத்தைப் பற்றிக் கனவு காணும் என்பதில் சந்தேகமில்லை. இன்று கோடிக்கணக்கான இந்திய மக்கள் ஒரே பாடலைத்தான் கோருகிறார்கள்; அதுதான் சத்துள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு. அதனைக் கொடுக்க வழியில்லை. தாகூரும் மற்ற வர்களைப் போல நூற்கட்டும்; தனது அந்நிய உடை களைத் தீயிலிடட்டும்; அதுதான் இன்றைய கடமை; நாளை நடப்பதைக் கடவுள் கவனித்துக் கொள்வார். கீதை சொல்லுவது போல நன்றே செய்'' என்று உணர்ச்சி பூர்வமாக எழுதினார் காந்தி. காந்திஜியின் இந்தப் பிரசித்தி பெற்ற பதிலைப் பற்றி ரொமெயின் ரோலன்ட் குறிப் பிடுகையில், ''கலைக் கனவின் முன் உலகத்தின் துன்பங்க ளெல்லாம் திரண்டு எனக்கு வாழ்வில்லையா?'' என்று கேட்டது போலிருந்தது என்றார். இது நடந்தது 1921-ம் ஆண்டில். அந்த வருடத்தில் பாரதியார் இறந்து விடுகிறார். எனினும் 1909-ம் ஆண்டிலேயே புதுச்சேரியிலிருந்து பாரதியார் 'இந்தியா' பத்திரிகை நடத்துகையில் காந்தி பற்றித் திட்டவட்டமான கருத்துத் தெரிவித்துவிட்டார். 'இந்தியா' 1909 டிசம்பர் 18-ந் தேதி ஆசிரியர் தலையங்கக் குறிப்பில் ஓரிடத்தில் பாரதியார் பின்வருமாறு எழுதினார்;

''....ஸ்ரீ காந்தியின் நெறியையும் திட சித்தத்தையும் பார்த்தால் இப்படிப்பட்ட தெய்வீக குணங்களமைந்த புருஷனும் உலகத்திலிருக்கிறானாவென்று யோசிக்க வேண் டியதாயிருக்கிறது....ஆனால் கடைசியாக ஜயம் ஸ்ரீ காந்தி பக்ஷம்தான்'' என்று எழுதியிருக்கிறார். அதற்கடுத்த ஆண்டிலே (1910) 'பாரத நாட்டின் புண்ணிய ஸ்தலங்கள்' என்னும் கட்டுரையிலே 'தென்னாப்பிரிக்காவில் திரான் ஸ்வால் நாட்டிலுள்ள ஜொஹானஸ்பர்க் நகரத்திற்குப் போகிறவர்களில் எந்த மனுஷ்யனுக்குத்தான் ஆத்ம சக்தி ஸம்பூரணமாய் நிறைந்த பாரத புத்ரர்களான ஸ்ரீமான் மோ. க. காந்தி, ஜனாப் டாவுத் மஹமத், ஜனாப் அங்கிலயா, ஸ்ரீ ரஸ்தோம்ஜி முதலானவர்களின் நெற்றி வியர்வை நிலத்தில் விழுந்து புனிதமாக்கப்பட்ட வீதி இது தான்; அவர் தமது வாஸத்தால் பரிசுத்தம் செய்யப்பட்ட திவ்ய ஸ்தலமான சிறைச்சாலை இதுவே. நமது பாரத ஸஹோதரிகள் பலவிதத்திலும் இடுக்கண் படுத்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் இதுவே என்று மனசில் ஸ்மரணை வராது'' என்று மனமுருகும்படி எழுதியுள்ளார்.

இவை யாவற்றிற்கும் மேலாக, மகாத்மா காந்தி பஞ்சகம் பாடினார்.

'வாழ்க நீ எம்மான்' என்று தொடங்கும் பாடல் அற்புதமான அஞ்சலியாகும்.

அரசியலில் இரு மகா கவிகளுக்கிடையும் காணப்படும் வேறுபாட்டைத் தொடர்ந்து இருவரது கவிதைகளைப் பற்றிய ஆராய்ச்சியை அடுத்து மேற்கோள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

ஒரு கவிஞனது இயல்பு யாது? அவனது கடமை யாது? இத்தகைய கேள்விகளுக்கு எத்தனயோ பேர் எத்தனையோ விதமான வரைவிலக்கணமும் விடையும் கூறியுள்ளனர். எனினும், சமூக அமைப்பு காலத்திற்குக் காலம் மாறுவதால் கவிஞனைப்பற்றிய கருத்தும் மாறுகிறது. பூர்வீக மனிதனிலிருந்து இன்றைய மனிதன்வரை கவிஞனை வெவ்வேறு பாத்திரங்களாகக் கண்டிருக்கிறார்கள் மக்கள். சமூகவியலை ஒட்டிக் கவிஞனது பரிணாம வளர்ச்சியை ஆராய்ந்தவர்கள் ஒருண்மையைத் தெளிவாக்கியுள்ளனர்.

## கவிஞர்களும் சமுதாயமும்

ஆதிகால மனிதனது சமயச் சடங்குகள், மந்திரச் சடங்குகள் முதலியவற்றில் உச்சாடனம், வெறியாட்டம் முதலியன செய்யும் மாந்திரீகனாக இருந்தான் ஆதிகாலக் கவிஞன்; பின்னர் எதிர்காலத்தைப் பற்றி சொல்லக்கூடிய ஞானியாக—தீர்க்கதரிசியாகக் கருதப்பட்டான். சமூகத்திலே இவையிரண்டினதும் நேரடித் தேவையில்லாத காலத்து இவையிரண்டின் பண்புகளையும் இலட்சியத்தையும் வெளிக்காட்டும் சொல்லேர் உழவனாகக் கருதப்படுகிறான். மாந்தீரீகன்—கணக்கியல் வினைஞன்—கவிஞன்—இதுதான் பரிணாம வளர்ச்சி. 'மந்திரச் சொல்லின்பம்' என்றும் குடுகுடுப்பையாக 'நல்லகாலம் வருகுது' என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞன் பாடும்போது எஞ்சிய பழைய பண்புகள் சில உரு மாறி கவிதையில் இடம் பெறுவதை நாம் காணலாம். எதிர் காலத்தைக் கூறுபவன் வார்த்தைகளை மக்கள் பொது வாக நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்வதைப் போலவே அவனது வாரிசான கவிஞனது சொற்களும் மக்கள் மனதில் ஓர் எழுச்சியையும் கிளர்ச்சியையும் உண்டாக்கு கின்றன.

கவிஞனுக்கும் சமுதாயத்திற்குமிடையேயுள்ள உறவைப் பற்றிக் குறிப்பிடும்போது பெலின்ஸ்கி கூறியது நினை விற்கு வருகிறது.

"கவிஞனானவன் ஒரு ஆத்மீக இலட்சிய வாழ்வின் பிரதிநிதியாக மதிக்கப்படுகிறான்; அவன் சிக்கலான கேள்விகளுக்கெல்லாம் சட்டென விடை கூறும் அசரீரியாக இருக்க வேண்டும்; சாதாரண நோய்களையும், துன்பத் தையும் பிறரில் காணுமுன் தன்னில் கண்டுகொள்ளும் வைத்தியனாகவும் இருக்க வேண்டும்; அவற்றைக் குணப் படுத்துவதற்கு அவற்றைக் கவிதை வடிவில் மீண்டும் படைத்து விட வேண்டும்."

பெலின்ஸ்கி கூறிய இந்தக் கருத்தெல்லாவற்றையும் சில அடிகளில் தேக்கிப் பிழித்து வடித்துள்ளார். ஜெர் மானிய மகா கவியும் உலக இலக்கிய மேதைகளில் ஒருவருமான கெதே. அவர் பாடினார்.

**'துயர் தாங்க முடியாத மனிதனுக்கு**
**வலியின் ஈனக்குரலையும்**
**கண்ணீர்ப் பெருக்கையும்,**
**இயற்கை அளித்துள்ளது;**
**இவற்றுடன் எனக்கோ**
**மனத்தின் ஆவேசக் கொந்தளிப்பை**
**முற்றாய் அளப்பதற்கு**
**வாய்மொழியையும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசை யின்பத்தையும்
அன்பாய் அளித்துள்ளது:
வேதனையால் மனிதன்
ஊமை யாகிவிடும்போது
நான்படும் துன்பவார்தையைப்
பேசுவதற்கு
எனக்கு இறைவனின்
கொடை இருக்கிறது

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

ஐரோப்பாவின் நவயுகக் கவிஞர்களில் ஒருவரான கெதே (1749—1832) ஒரு கவிஞனது பணியை இதை விட அழகாக கூறியிருக்க முடியாது என்கிறார் பேராசிரியர் ஜார்ஜ் தாம்ஸன்.

## மகா கவிகளின் உலக நோக்கு

சமுதாயத்திற்கும் கவிஞனுக்கும் மனிதக் குலத்திற்கும் உள்ள ஒட்டையும் உறவையும் அளவுகோலாகக் கொண்டு தாகூர், பாரதியார் ஆகிய இரு கவிஞர்களையும் நாம் அணுகும்போது வரைவிலக்கணம் பூரணமாகப் பொருந்துவதைப் பார்க்கிறோம். இந்த அடிப்படையிலேயே தாகூரின் மகோன்னதமான உலக நோக்கு உருப்பெற்று வளர்ந்தது. பாரதியாரின் மனுக்குலப் பற்று உருப்பெறத் தொடங்கி பாரதியாரின் மனுக்குலம் பற்று உருப்பெறத் தொடங்கியிருந்தது; அதற்குள் அவர் அகால மரணமடைந்தார்.

தாகூர் பாடுகிறார்:

"பிரபுவே அதிர்ஷ்டமற்ற இந்த நாட்டிலிருந்து சகல பயங்களையும் களைந்தெறி; பொதுமக்களின் பயம்; அரசனின் பயம்; மரணத்தைப் பற்றிய பயம்; கோழைகளின் மனப்பீதிச் சுமை; இவை யாவற்றையும் துடைத்துவிடு!

முடிவற்ற துன்பம், புழுதியில் வீழ்ந்து கிடக்கும் தாழ்வுற்ற நிலை ஆகியவற்றை அகற்றிவிடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மணிநேரமும் ஒவ்வொரு கணநேரமும் அக உலகிலே நிறைந்துவிடும் தன்னிரக்கம், அடிமைத்தளை ஆகியவற்றையும், பிற உலகிலே பலாத்காரத்தின் காலடியில் மனிதன் தன்மானத்தைப் பூரணமாகப் பறிகொடுத்து நிற்பதையும் தகர்த்தெறிந்துவிடு!

வளர்ந்து வந்துள்ள இந்த அவமானத்தை, ஏ நாத, உன் திருவடிகளால் தூள் தூளாக்கு!

அப்படிச் செய்யும் அத்தகைய புனிதமான உதய காலத்திலே, சுதந்திரமான தென்றலிலும், பரந்துபட்ட சூரிய ஒளியிலும் நாம் தலை நிமிரச் செய்வாய்!''

இறைவனுக்கு விண்ணப்பஞ் செய்யும் முறையில் தாகூர் தனது வேண்டுகோளை விடுத்துள்ளார். அச்சமும், தளைகளும் இல்லாத ஆத்ம சுதந்திரமான நிலையை விழைகிறார். அந்த அற்புதமான உலகை மனக்கண்ணால் ஸ்பரிசிக்கிறார்.

பாரதியாரும் அதே இராகத்தை இசைப்பதை நாம் கேட்கலாம்:

''பிரம்மதேவன் நமக்கோர் பணியிட்டான்:
யாங்ஙனம்?

'மண்ணுலகத்து மானுடன் தன்னைக்கட்டிய தளை
யெல்லாம் சிதறுக' என்று

வாழ்க தந்தை; மானுடர் வாழ்க!

..........................................................

அறிவிலே ஒளியை அமைத்தேன் வாழ்க!
மந்திரங் கூறுவோம். உண்மையே தெய்வம்,
கவலையற்றிருத்தலே வீடு; களியே
அமிழ்தம் பயன் வருஞ் செய்கையே அறமாம்.
அச்சமே நரகம்; அதனைச் சுட்டு
நல்லதை நம்பி நல்லதே செய்க.
மகனே! வசுபதி! மயக்கந் தெளிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவத்தொழில் செய்து தரணியைக் காப்பாய்.

.........................................................................

அச்சப்பேயைக் கொல்லும் படையாம்
வித்தைத் தேனில் விளையுங்கனியாய்
வாராய், நிலவே, வா!''

## ஆசிய ஒற்றுமைக்கு வித்திட்ட அம்சம்

'விடுதலை' என்னும் வசன கவிதை நாடகத்திலே பாரதியார் இவ்வாறு பாடுகிறார். ''உண்மை வாழ்க; உலகம் ஓங்குக; தீது கெடுக! திறமை வளர்க!'' என்று அந்தக் கவிதையில் கூறும் பாரதியார் தாகூரைப் போலவே தமது பொது வாழ்வின் முற்பகுதியிலேயே 'மனுக்குலம்', 'மானுடச் சாதி', 'உலக மக்கள்' என்று பேசத் தொடங்கி விட்டார். வங்காள மொழி! வங்காள நாடு என்ற எல்லை களுடன் தமது கவிதா வாழ்க்கையைத் தொடங்கிய கவிஞர் இந்த யுகத்தின் **உலக மனிதனைக்** கனவு கண்டது போல, தமிழ்நாடு, தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிட்ட கவிஞர் **'மானுடச் சாதி ஒன்று; மனத்திலும் உயிரிலும் தொழிலிலும் ஒன்றேயாகும்'** என்று கூறத் தவற வில்லை. இத்தகைய ஓர் உலகக் கண்ணோட்டமே அப் பொழுதும் பின்னரும் ஆசிய ஒற்றுமைக்கு அடிகோலியது. ஜப்பானிய கலா விமர்சகர் **ஒக்காகுறா ககுஜோ** கலாயோகி **ஆனந்தக் குமாரசுவாமி,** மகரிஷி **இரவீந்திரநாத் தாகூர், மகாகவி பாரதியார்,** சீன அரசியல் வீரர் டாக்டர் **சன்யாட் சென்** முதலியோர் இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலே ஆசிய எழுச்சியையும், உலக ஒற்றுமையையும் கனவு கண்டவர்களாவர். அறிவின் துணைகொண்டும் உணர்வின் வலி கொண்டும் இவர்கள் மனிதனைப் புரட்டிக் 'கீழே தள்ளும் தளைகளைத் தகர்த்தெறிந்து மண்ணுலகில் விண்ணுலகைச் சமைக்க வேண்டும்; இங்கு அமரர் சிறப்புக் காண வேண்டும்', என்று நம்பியவர்கள். தாகூரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியாரும் கொண்டிருந்த உலகக் கண்ணோட்டம் முக்கியமானதாகும். அதனை இங்கு சிறிது கவனிப்போம்.

## பொதுவான நம்பிக்கை

தாகூர் சிறு வயதிலேயே மேனாடுகள் சென்றவர்; பின்னர் உலகஞ் சுற்றியவர்; அதனால் அவரது உலக நோக்கு அக்காலத்திலிருந்த வேறெந்தப் பெருமகனையும் விட விசாலமானதாக இருந்தது. தாகூருடைய உலக நோக்குடன் பாரதியார் எழுத்துக்களில் நாம் காணும் உலக நோக்கை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இரண்டிற்கு முள்ள தர வேறுபாடு தெளிவாகும். தாகூர் அறிவால் உலகை அளந்து காட்டினார்; பாரதியார் உள் உணர்வால் அளக்க முயன்றார்; எனினும் இரு மகா கவிகளுக்கும் ஒரு நம்பிக்கை பொதுவானதாக இருந்தது. உலகம் இந்தியா விடம்—கீழைத் தேயங்களிடம்—கற்க வேண்டியன எவ்வளவோ உள்ளன என்று இருவரும் நம்பினர். இந்தியாவின் புராதன ஆத்மீக மேம்பாட்டில் இருவரும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தவர்களாதலின், கீழைத் தேயங்கள் ஆத்மீக வழி வந்த நாகரிகத்தையுடையன என்றும், மேலைத் தேயங்கள் உலகாயத வழிப்பட்டன என்றும் அக்காலத்தில் (இன்றும் கூட) நிலவிய கருத்தை இருவராலும் உதறித்தள்ள முடியவில்லை.

**சுவாமி விவேகானந்தர்** (1863-1902) அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய தேசங்களில் தத்துவஞானச் சொன் மாரி மொழிந்ததைத் தாகூரும் பாரதியாரும் நன்கறிவர். மாக்ஸ் முல்லர் (1823-1900) போன்ற ஜெர்மன் **இந்திய வியல்** (Indology) ஆராய்ச்சியாளர் இந்தியாவின் வேத உபநிடத காலச் சிறப்பை உச்சிமேற் கொண்டாடிய காலமது. இவை யாவற்றின் செல்வாக்கையும் இரு கவிஞர் வாக்கிலும் காணலாம். மேனாட்டு நாகரிகம் கீழைத் தேயங்களில் வந்து மோதிபோது இரு எதிர்ச் சக்திகள் தோன்றின. மேனாட்டுப் பழக்க வழக்கங்களுக்கு அடிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகினர் சிலர்; அதனை எதிர்த்தனர் சிலர்; இவை இரண்டிற்கும் மத்தியில் இரண்டு நாகரிகங்களின் நல்லம்சங்களையும் இணைக்கலாம் என நம்பினர். ஒக்கா குறா, தாகூர், ஆனந்தகுமாரசுவாமி, பாரதியார், அன்னிபெசன்ட், சன்யாட்சென் முதலியோர். நமது காலத்தில் டாக்டர் இராதாகிருஷ்ணன் தொடர்ந்து இந்த நம்பிக்கையைக் காப்பாற்றி வருகிறார்.

1878-ம் ஆண்டிலே அதாவது தாகூர் பதினாறு வயது இளைஞனாக இருந்தபோதே மேனாட்டு நாகரிகமும் இந்திய நாகரிகமும் இணைந்தால் அற்புதமான ஆத்மீகக் கலாசார சக்தியாக இருக்கும் என்று நம்பத் தொடங்கியிருந்தார். எனினும் அது ஓரளவிற்கு **'வாலிபக் கனவு'** என்றே கொள்ள வேண்டும். 1890-ல் இரண்டாம் தடவையாக ஐரோப்பா சென்று திரும்பினார் தாகூர். **'ஐரோப்பா சென்ற யாத்திரிகனின் டயரி'** என்னும் நூலில் மேற்கு நாடுகளின் உயர்வில் தாகூர் நம்பிக்கை இழப்பதை நாம் காணலாம்: **ரட்யார்ட் கிப்ளிங்** என்னும் ஆங்கில ஏகாதிபத்தியவாதக் கவிஞன் பாடியது போல கிழக்கும் மேற்கும் ஒருபோதும் ஒன்றுசேர முடியாது என்று கூட ஒருகணம் தாகூர் ஐயமுற்றதுண்டு. உண்மையின் பயங்கரமான தோற்றத்தைக் காணுமுன் தாகூருக்கு ஏற்பட்ட மன உளைச்சல் அது.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலே மேற்கத்திய ஏகாதிபத்தியம் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் தனது கோரப் பிடியை இறுக்கியது; ஆதிக்க வெறியைக் கட்டவிழ்த்து விட்டது. விழிப்புள்ள ஆசிய, ஆப்பிரிக்க மக்கள் அதனைக் கண்டு கொண்டனர். ஆப்பிரிக்காவிலே போயர் (Boer) குடியரசு மீது இங்கிலாந்தின் ஆக்கிரமிப்பு தாகூருக்கு யதார்த்த உலகைக் காட்டிற்று. **'இந்த நூற்றாண்டின் அஸ்தமனம்'** என்று 1899-டிசம்பர் 31-ம் தேதி தாகூர் ஒரு கீதம் எழுதினார்.



UNIVERSITY OF ... 17-2-1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏகாதிபத்தியம் பற்றி தாகூர்

"இந்த நூற்றாண்டுச் சூரியன் இன்று இரத்த மேகத் திடை அஸ்தமனமாகியது.

பலாத்காரக் கோலாகலக் கேளிக்கைகளில் இன்று ஆயுதங்களில் எல்லாம் சாவின் வெறிபிடித்த பயங்கரக் குரல் ஒலித்தெழுகிறது.

நாகரிகம் என்னும் கருணையற்ற நாகம், கொடும் விஷத்தால் மறைந்துள்ள அதன் விஷப் பற்களை நிரப்பி கண்ணிமைக்கும் கணப்பொழுதில் கொடும் படம் எடுக் கிறது.

சுயநலம் சமூகத்தைத் துளைக்கிறது. பேராசையால் பெரும்போர்கள் நடக்கின்றன.......

பரிபூரணமான செல்வச் செழிப்பினிடை, அழிவின் இடிமுழக்கம் பொங்கும் புயற்காற்றின் கும்மிருட்டில், திடீரென்று பயங்கரமான பலாத்கார ஆக்கிரமிப்பு அதை உடைத்துத் தூளாக்கி நாற்புறமும் வீசி எறிகிறது."

(நைவேத்தியம்)

என்று ஏகாதிபத்திய இராணுவ ஆக்கிரமிப்பைக் கண் டித்துப் பாடினார் தாகூர். ஏறத்தாழ இதே காலத்தில் (1900) சீனாவிலே மக்கள் கலகம் ஒன்றை அந்நியப் படைகள் ஈவிரக்கமின்றி அடக்கின. இந்தச் செய்தி ஆசிய நாடுகளெங்கும் பெரிய அதிர்ச்சியையும் அருவருப்பையும் தோற்றுவித்தன. ஆசியாவிலேயே சனத்தொகை கூடிய இருபெரும் நாடுகள் அந்நிய ஏகாதிபத்தியத்தில் அல்ல லுறுவது கண்டு தாகூர் மனதில் ஒருவிதமான சகோதரத் துவ உணர்ச்சி வளரத் தொடங்கியது. அக்காலத்தி லிருந்து தாகூர் இந்தியாவுடன் சீனாவையும் கலாசார அடிப்படையில் சேர்த்தே பேசத் தொடங்கினார். "ஐரோப்பிய ஆதிக்க வெள்ளம் பூமியை அடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்தாலும், கீழைத்தேய கலாச்சாரம் தன்னைக் காத்துக் கொள்ளும்; ஏனெனில் ஆசியா தனது பழைய பெருமைகளைத் தேடிக் கண்டுபிடித்து அணைகள் கட்ட ஆயத்தமாயிருக்கிறது'' என்று அக்காலத்தில் கூறினார் தாகூர். சுய நலம் காரணமாகப் பண்பாட்டையிழக்கும் மேற்கத்திய நாடுகள் அழிவுப் பாதையில் போவதாக அஞ்சினார் அவர். ''சுயநலத்தின் முடிவு அகால மரணந் தான்.... மரணச் சந்திப்பில் மக்களன்பு நீங்கி விட்டது; சுயநலப் படகு மறைந்திருக்கும் மலையை நோக்கிப் பாய்ந்தோடுகிறது'' என்று கீதம் பாடினார் இரவீந்திரர்.

## ஏகாதிபத்தியம் பற்றி பாரதி

**'கீழைத் தேய நாகரீகம்'** என்று ஒரு பொதுப் பொருளைப் பாரதியார் தமது அக உலகில் தெளிவாகக் கொண்டிருக்க வில்லையாயினும் அதன் எல்லைகளைத் தொடுவதை நாம் காணலாம்.

''மனுஷ்ய ஸஹோதரத்வம், ஸமத்துவம் இவை ஜர்லாந்துக்குண்டா? இல்லையா? அரேபியாவுக்கும், மெஸபொடோமியாவுக்கும், இந்தியாவுக்கும், எகிப்துக்கும் அவை உண்டா? இல்லையா? இல்லை என்றால் ஏன் இல்லை? தெய்வ விதிகளுக்கு மாற்றில்லை, கொடுமையும் அநீதியும் செய்வோர், கொடுமைக்கும், அநீதிக்கும் இரையாவர்; பிறரை அடிமைப்படுத்துவோர், தாம் அடிமைகளாக்கப்படுவர்''

என்று அக்கால ஏகாதிபத்தியக் கொடுமையை உலக நோக்கில் நிறுத்துகிறார் பாரதியார்.

## மனுகுலத்துக்கு மகத்தான வழி

மேற்கத்திய நாகரிகத்தின் இத்தகைய பலாத்கார— அடக்கியாளும் முறைகளைக் கண்ணுற்ற தாகூர் மேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திய நாடுகளை இவ்வாறு உந்திக் கொண்டிருக்கும் ஓர் அடிப்படையை அறிய முனைந்தார். அந்நாடுகளின் நாகரிகம் ஏன் அதிகார வெறி படைத்தவர்களை அனுமதிக்கிறது என்று தத்துவார்த்த சமாதானம் தேடினார் தாகூர்.

''எமது ஹிந்து நாகரிகத்தின் அடிப்படை சமூகம், ஐரோப்பிய நாகரிகத்தின் அடிப்படை அரசியல்; சமூகத்தின் மூலமும், மனிதன் பெருமையடையலாம்; அரசியல் மூலமாகவும் பெறலாம்; எனினும் ஐரோப்பிய அரசியல் வளர்ச்சியின் அடிப்படையிலேயே நமது தேசிய இனத்தைத் தட்டியெழுப்ப வேண்டுமென்றோ அதுவே மனிதனது இலட்சியமாக இருக்கவேண்டும் என்றோ நாம் எண்ணினால் அது தவறாகும். ஒவ்வொரு தேசமும் தனக்கென விதிக்கப்பட்ட பாத்திரத்தையே தாங்க வேண்டும். குருநானக், சைதன்யர், கபீர் முதலிய இந்திய ஞானிகள் உபதேசித்த ஒற்றுமையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். இந்தியா இந்த வழியைக் காட்டினால் அது மனுக்குலத்திற்குச் செய்த மகத்தான தொண்டாகும்''என்று எழுதினார் இரவீந்திரர். கிழக்கு-மேற்கு தொடர்பு-வேறுபாடுகள் பற்றிப் பாரதியார் கொண்டிருந்த கருத்துக்கள் அதிகம் வேறானவையல்ல.

''பூமண்டலத்தின் தரையளவு சுமார் 5,30,00,000 (ஐந்து கோடியே முப்பது லட்சம்) சதுர மைல். இதில் நான்கு கோடியே எழுபது லட்சம் சதுர மைல் விஸ்தாரமுள்ள பூமி வெண்மை நிறத்தோரின் ஆதிக்கத்திலிருக்கிறது. இங்ஙனம் உலகம் ஒரு சிறு கூட்டத்தாரின் கீழே அகப்பட்டிருப்பதில் அச்சிறு கூட்டத்தார் தங்களுடைய வயிற்றையும் தமக்கு வேண்டிய இன்பங்களையும் மாத்திரமே கவனிப்பதுடன் மற்ற உலகத்தாரெல்லாரும் தங்களைக் காட்டிலும் தாழ்வென்றும் நினைத்துக் கொண்டிருக்குமிடத்தே ஸமத்வக் கொள்கையின் கதி என்னாகிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மனிதரும் சமமென்ற கொள்கையை சமூக வாழ்க்கையில் ஸ்தாபனஞ் செய்யும் வரை மானிடருள்ளே இகல், பொறாமை, வஞ்சனை, போர் முதலிய ஏற்பாடுகள் நீங்கமாட்டாவாதலால் அக்கொள்கையை எப்படியேனும் அனுஷ்டானத்துக்குக் கொணர்ந்துவிட வேண்டுமென்று ஐரோப்பிய ஞானிகள் பேராவல் கொண்டிருக்கின்றனர்.

தன் உபதேசப்படி தானே நடக்காத ஐரோப்பாவின் உபதேசங்களில் வெளியுலகத்தாருக்கு நம்பிக்கை பிறப்ப தெப்படி? எத்தனையோ நூற்றாண்டுகளாக இந்தியாவின் நெஞ்சில் வேதாந்தக் கொள்கை ஊறிக்கிடக்கிறது. இந்த வேதாந்தம் லௌகிகமான அனுஷ்டானத்தில் பரிபூரண மான, ஸம்பூர்ணமான ஸமத்துவம் ஏற்படுத்தும் இயல் புடையது. ஆனால் நமக்கும் ஐரோப்பியரின் உறவாலே தான் இக்கொள்கையில் உறுதியேற்பட்டது. எனினும் ஐரோப்பியர் அதை நடத்திக் காட்டக்கூடிய அளவு தெளிவு பெறவில்லை. இந்தியா விடுதலை பெற்றுவிடு மானால் தன் அஷ்டானத்தாலே உலகத்தாருக்கு இக் கொள்கையின் நலங்களை விளக்கிக் காட்டி உலக முழுவதும் இதனைப் பரவச் செய்தல் சாத்தியப்படும்.

## தாகூர்-பாரதி கருத்து பேதம்

இந்த இடத்தில் பாரதியாருக்கும் தாகூருக்குமிடையே யுள்ள மற்றொரு வேறுபாடு தெரியவருகிறது; உலக நோக்கு, மனித முன்னேற்றம், ஆசிய எழுச்சி, பெண்கள் கல்வி முதலிய எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும் அப்பொருளில் இயல்பாயமைந்த 'நன்மை', 'பெருமை' முதலியவற்றைக் கவனித்தார் தாகூர். உதாரண மாக **'இந்தியாவில் தேசியம்'** என்னும் ஒரு கட்டுரையில் (அமெரிக்காவில் நிகழ்த்திய சொற்பொழிவு) தாகூர் பின் வருமாறு கூறினார்; ''உலகிலே ஒரே வரலாறு தான் இருக்கிறது. அது மனித வரலாறு. தேசிய இன மக்களின் வரலாறுகளெல்லாம் அதில் அடங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப பிரிவுகளே. அந்த ஓர் இலட்சியத்திற்காக இந்தியர்களாகிய நாம் கஷ்டப்படவும் தயாராயிருக்கிறோம்'' என்று அவர் கூறும்போது இந்தியனை ஒரு கணம் மறந்து **உலகப் பொது மனிதன்** ஒருவனைக் கற்பனை செய்து கொள்கிறார். ஆனால் பாரதியோ அப்படி சிந்தனை செய்தவரல்லர். இந்திய விடுதலை, இந்திய மனிதனின் விடுதலை என்னும் அடிப்படைத் தேவையிலிருந்தே சகல பிரச்சினைகளையும் நோக்கினார்; அணுகினார். ''நமக்கு ஸ்வராஜ்யம் இன்றியமையாதது. இந்தியா ஸ்வராஜ்யம் பெறுவதே மனித உலகம் அழியாது காக்கும் வழி'' என்பது பாரதியார் நம்பிக்கை. எனினும் தாகூருக்கும் பாரதியாருக்கு மிடையில் காணப்படும் இந்தக் கருத்து வேறுபாட்டைப் பெரிதாகக் கொள்ள முடியாது. ஏனெனில் உள்நாட்டில் சனநாயக வாதியாகவும், குடியேற்ற நாடுகளின் கொடுங்கோலாட்சி வாதியாகவும் தோற்றமளித்த ஆங்கிலேயனைப் போலத் தாகூர் வெளிநாடுகளில் இந்தியாவின் பெருமையைச் சிறிது உயர்த்தியும், இந்தியாவிலே பிற நாடுகளின் நற்பண்புகளைத் துலக்கியும் நடுநிலைமை வகிக்க முயன்றார். அத்தகைய சந்தர்ப்பங்களில் இந்தியா உலகிற்கு வழி காட்டும் என்று தாகூர் கூறியுள்ளார். சமத்துவமானது வேதாந்த அடிப்படையில் அனுட்டிக்கக் கூடிய நடைமுறை இலட்சியம் என்று தாகூரும் பாரதியாரும் நம்பினர் என்பதில் ஐயமில்லை. காலம் என்னும் ஒரு கட்டுரையிலே பாரதியார் தாகூரின் கருத்தை எடுத்துப் பாராட்டியுள்ளார். உலக நாடுகளின் சமத்துவம் பற்றி அமெரிக்காவிலே தாகூர் ஒருமுறை சொற்பொழிவாற்றிய போது, ''இவ்விதமான கொள்கையிலிருந்தது பற்றியே உங்கள் தேசத்தை அன்னியர் வென்று கைப்பற்றிக் கொள்ள நீங்கள் தோற்றுக் கிடக்கிறீர்கள்?'' என்று ஒருவன் குறிப்புக் கூறினானாம். அதற்கு இரவீந்திரர் கூறிய பதிலையே பாரதியார் தமக்கு உடன்பாடாகப் போற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இப்போது புழுதியோடு புழுதியாக விழுந்து கிடந்தாலும் எங்கள் பூமி புண்ய பூமி. உங்களுடைய செல்வத்தின் மேலே தெய்வ சாபமிருக்கிறது'' என்று தாகூர் பதிலிறுத்தார்.

''ஆதலால் இனிமேல் ஹிந்து தர்மத்தை அனுசரித்து உலக முழுவதிலும் எல்லாத் தேசத்தாரும் உடன் பிறப் பென்றும் சமானமென்றும் தெரிந்துக் கொண்டு பரஸபரம் அன்பு செலுத்தினால் பிழைக்கலாமென்று'' தாகூர் கருதுவதாகப் பாரதியார் விளக்கம் எழுதிச் செல்கிறார். என்னதான் உலகப் பொதுவான மனிதாயதம் பேசினா லும், இந்திய தத்துவார்த்த வரம்புகளை இரு கவிஞர் களும் மதித்தனர் என்பதனை இது காட்டுகிறது. இந்த அடிப்படையில் சோவியத் புரட்சி முதலிய உலக சரித்திர சம்பவங்களையும் இந்திய அரசியல் பொருளாதாரப் பிரச் சினைகளையும் அணுகினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5

"ரஷ்ய அக்டோபர் புரட்சியானது, திட்டவட்டமான தேசியக் கொள்கையைக் கொண்டிருந்தது. கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த காலனி நாடுகளுக்கும் இந்தக் கொள்கை ஆதர்ஷமாக விளங்கியது. லெனினும் ஸ்டாலினும் கைச் சாத்திட்டு வெளியிட்ட ரஷ்ய மக்கள் உரிமைப் பிரகடன மானது, ரஷ்ய மக்களின் சமத்துவத்தையும் இறைமைத் தன்மையையும் மட்டுமின்றி தேசிய சிறுபான்மை மக்களின் முன்னேற்ற உரிமையையும் உலகறிய முரசறைந்தது; இந்தக் குரல் சங்கநாதமாக ஒலித்தது. விடுதலை வேண்டிப் போராடிக் கொண்டிருந்த சகல ஆசிய நாடுகளும் இக் குரலைப் புதிய ஆவலுடன் கேட்டன. தேசிய சுயநிர்ணய உரிமை, தேசிய சிறுபான்மை இன மக்களின் உரிமை முதலிய கொள்கைகளுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவ மானது ஆசியாவில் அரசியல் சிந்தனை வளர்ச்சியை அடுத்த கால் நூற்றாண்டிற்குப் பெரிதும் பாதித்தது. புரட்சிச்சக்தி பெற்ற ரஷ்யா ஒன்று இருந்ததே அக்காலத்தில் ஆசிய நாடுகளுக்கு மனத் தைரியம் அளித்தது என்பதில் ஐயமில்லை."

### ரஷ்யப் புரட்சி பற்றி பாரதி-தாகூர்

1917-ம் ஆண்டு அக்டோபர் மாதம் ரஷ்யாவிலே நிகழ்ந்த சோஷலிஸ்டுப் புரட்சியின் முக்கியத்துவம் பற்றிக் கூறப் புகுந்த இந்திய வரலாற்றறிஞரும், மலையாள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய கர்த்தாவும் இராஜ தந்திரியுமான திரு கே. எம். பணிக்கர் 'ஆசியாவும் மேற்கத்திய ஆதிக்கமும்' என்னும் நூலிலே மேற்கண்டவாறு ஓரிடத்தில் எழுதியுள்ளார். ஆசியாவைப் பற்றிய தமது நூலில் அவர் ரஷ்ய அக்டோபர் புரட்சியின் ஆசிய முக்கியத்துவத்தைக் கூறியுள்ளார். மனித வரலாற்றிலேயே முக்கிய இடம் பெற்றுள்ள இப்புரட்சி பற்றி மகாகவி பாரதியாரும், இரவீந்திர நாத் தாகூரும் தக்க சிரத்தை காட்டினர். அக்டோபர் புரட்சி நடந்தேறிய காலத்திலே அதன் பிரம்மாண்டமான சக்தி, முக்குயத்துவம் பற்றி நன்குணர்ந்த இந்தியர்கள் வெகு சிலரே இருந்திருப்பார்கள். மனுக் குலத்தின் மனச்சாட்சியான கவிஞர்கள் இருவர் இச்சரித் திரத் திருப்பச் சம்பவம் பற்றி ஆழ்ந்த அக்கறை காட்டி யிருப்பது வியப்பன்று.

சோவியத் புரட்சியைப் பொறுத்த வரையில் அதன் பெருமையை முதலிற் பாடிய பெருமை பாரதியாரையே சாரும். அக்டோபர் புரட்சியின் யொருளாதார அரசியல் முக்கியத்துவத்தைப் பாரதியார் நன்கறிந்திருந்தார் என்று கூற முடியாது. அவ்வாறு அறிந்து கொள்ள அவருக்கு வாய்ப்பும் வசதியும் இருக்கவில்லை. பாரதியார் இறந்து ஒன்பது வருடங்களுக்குப் பின்னர் 1930-ம் வருடம் செப்டம்பர் மாதம் தாகூர் சோவியத் ரஷ்யாவிற்குச் சென்றார். தனது கருத்துக்களை வெளியிட்டார். தாகூரும், பாரதியாரும் சோவியத் சோஷலிஸ்டு புரட்சியை பற்றி யும் அதன் விளைவுகளைப் பற்றியும் தமது வியப்பையும் ஐயத்தையும் தெரிவித்துள்ளனர். இருவரது கருத்துக்களை யும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இருவருக்குமுள்ள ஒப்புமை வேற்றுமைகள் அங்கும் தோன்றுகின்றன.

## இந்திய தேசிய விடுதலைப் பிரச்சினை

உலகப் பிரச்சினைகளை அணுகும்போது பாரதியார் அப்பிரச்சினைகளின் தாரதம்மியங்களைவிட இந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய விடுதலைக்கும் அப்பிரச்சினைகளுக்கும் உள்ள தொடர்பையே குறிப்பாகக் கவனித்தார் என்று முன் போரிடத்தில் குறிப்பிட்டேனல்லவா? அதன் ஒரு சாயை வேறுபாட்டைப் புதிய ரஷ்யா பற்றிய பாரதியார் பாட்டிலும் காணலாம். புதிய ரஷ்யா என்று பாடல் பெயர் பெற்றிருந்தாலும் அதிலே பெரும்பாகம் பழைய கொடுங்கோலன், ஜார் சக்கரவர்த்தியைப் பற்றியும் அவனது ஆட்சிக் கொடுமையைப் பற்றியுமே அமைந்திருக்கிறது. புதிய சமுதாயத்தின் மகத்தான பண்புகளைப் பாரதியார் தெளிவாக அறிந்திருக்க முடியவில்லை என்பது ஒன்று; பழைய ஆட்சி வீழ்ந்தது, என்று பாடியபோதும் அதில் என்ன செய்தியை—உண்மையைக் கண்டானந்தித்தார் என்றறிவது மற்றொன்று.

**'இம் என்றால் சிறைவாசம்; ஏனென்றால்**
**வானவாசம்; இவ்வாறங்கே**
**செம்மையெல்லாம் பாழாகிக் கொடுமையே**
**அறமாகித் தீர்ந்தபோதில்........'**

என்று பாரதியார் ஜார் ஆட்சியின் கொடுமையைப் பாடும் போது பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குத் தப்பிச் சுயபிரஷ்டம் செய்துக் கொண்டு புதுச்சேரியில் வாழ்ந்தார் என்பதை நாம் மறுத்தலாகாது; எண்ணற்ற தேசபக்தர்கள் சிறை, தீவாந்தரம், தூக்குமேடை முதலிய தண்டனைகளுக் காளாக்கப்பட்டிருந்தனர். **'எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு. தூக்குண்டே இறப்பதுண்டு; முழுதுமொரு பேய் வனமாஞ் சிவேரியிலே ஆவிகெட முடிவதுண்டு,** என்று ஜார் மன்னன் ஆட்சியை வருணிக்கும்போது தனது நாட்டு நிலையையே உணர்ச்சிப் பெருக்கோடு வருணிக்கிறார் என்று கூறலாமல்லவா? **'பொய்யைத் தொழுதடிமை செய்வார்க்குச் செல்வங்களுண்டு'** என்று பழைய ரஷ்யாவின் நிலைமை பற்றிக் குரல் எழுப்பும்போது தேசபக்தர்கள் பற்றி உளவறிந்து ஒற்றறிந்து பொய்ச்சாட்சிகள் சோடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்குகள் தொடர்பவர்களை மனதிற்கொண்டுள்ளார் என்பது வெளிப்படை.

## பிரபஞ்ச நியதியுள் ஓர் அம்சம்

இந்திய தத்துவ மரபில் வந்த பாரதி, இதனையும் தர்ம-அதர்மப் போராட்டம் என்னும் பிரபஞ்ச நியதிக்குள் ஓர் அம்சமாகக் கண்டார், தெய்வ நீதியைக் கண்டார்:

**'இரணியன் போ லரசாண்டான் கொடுங்கோலன்**
**ஜாரென்னும் பேரிசைந்த பாவி**
**சரணின்றித் தவித்திட்டார் நல்லோரும்**
**சான்றோரும் தருமந்தன்னைத்**
**திரணமெனக் கருதிவிட்டான் ஜார் மூடன்'**

என்று பாரதியார் பாடும்போது இரணியனுக்கு ஜாரை ஒப்பிடுவதும் தருமத்தை அவன் அவமதித்ததாகக் கூறுவதும் பாரதியாரது தத்துவார்த்த வட்டத்தைத் தெளிவாக்குகின்றன. குருக்ஷேத்திரப் போர் போல, இரணியவதை போல ஜார் மரணத்தையும் 'தேவாசுர' யுத்தமாகக் கண்டார் பாரதியார். அது அவரது கல்வியாலும், நம்பிக்கையாலும் பெற்ற அறிவு உணர்வு முதலியன விதிக்கும் எல்லைகளுக்குட்பட்ட சிந்தனையுணர்வு; அதே சமயத்தில் சாதாரணமாக நடக்காதது ஒன்று நடந்துவிட்டது என்றறிந்து கொள்ளும் சரித்திர ஞானமும் பாரதிக்கு இருந்தது. **'அங்கே ஆகா வென்றெழுந்தது பார் யுகப் புரட்சி'** என்றும் **இடிப்பட்ட சுவர்போலக் கலி விழுந்தான், கிருத யுகம் எழுகமாதோ!'** என்றும் பாரதியார் பரவசப்பட்டு பாடுகையில் கண்டறியாததைக் கண்ட, கேட்டறியாததைக் கேட்ட, படிப்பறியாததைப் படித்த வியப்புணர்ச்சி, அற்புத உணர்ச்சி தெரிகிறது. 'யுகப்புரட்சி' என்று கூறும்போது அதற்குள் பொதிந்து கிடக்கும் பொருள் வெள்ளத்தை நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும். கிருதயுகம் பாரதி விழைந்த கற்பனை உலகைக் குறியிட்டு நின்ற பதம் என்பதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது பாடல்களிலிருந்து அறியலாம். 'துயர்கள் தொலைந்திடுக: தொலையா இன்பம் விளைந்திடுக; வீழ்க கலியின் வலியெல்லாம்; கிருத யுகந்தான் மேவுகவே' என்று பாரதியார் தோத்திரப் பாடல்களிலெல்லாம் பாடியுள்ளார். ரஷ்யப் புரட்சியின் விளைவாக உலகில் கிருதயுகம் எழுந்தது என்று கவிஞர் கூறினால் புரட்சியைக் கவிஞர் தனது இலட்சிய உலகின் வாயிலாகக் கொண்டார் எனக் கொள்ளலாமல்லவா? அந்த இலட்சிய உலகையும் சித்திரிக்கிறார் கவிஞர்.

**'குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு**
**மேன்மையுறக் குடிமை நீதி**
**கடியொன்றிலெழுந்தது பார், குடியரசென்று**
**உலகறியக்கூறி விட்டார்,**
**அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போது**
**அடிமையில்லை அறிக என்றார்.'**

## உலகிலேயே பெருஞ் சாதனை

புரட்சிக்குப் பின் பூத்த ரஷ்யாவை அதே காலத்தில் மனக்கண்ணால் கண்டு, பொதுப்படையாக, இலட்சிய வடிவத்தில் உணர்ச்சி பூர்வமாகப் பாடிய பாரதியார் உலகிலேயே ஒரு பெருஞ் சாதனையைச் செய்துவிட்டார் என்று துணிந்து கூறலாம். மிக நுணுக்கமான தூர உலகத்துச் சப்தங்களையும், ஒலிப்பதிவு செய்து விடும் அதி நுண்ணிய யந்திரம்போல் புதுச்சேரியில் அகதியாய்க் கிடந்த பாரதியார் சோவியத் புரட்சியின் முக்கியத்துவத்தை மானஸீகமாகக் கருத்தில் பதித்துக் கொண்டார். உலக யாத்திரைகளில் ஈடுபட்டிருந்த தாகூர் அக்காலத்தில் இது விஷயமாகப் பரவசப்பட்டார் என்று கூறமுடியாது. பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின்னரே தாகூர் அந்தத் தேசத்திற்குப் போனார்.

சோவியத் ரஷ்யாவின் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் பாரதியார் தொடர்ந்து கவனித்து வருகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்கு அவரது வசனப் படைப்புகளில் பல ஆதாரங்களிருக்கின்றன. 'புதுமைகள்' என்னும் தலைப்பின் கீழ் 'காளிதாஸன்' என்னும் புனைபெயரில் சோவியத் ரஷ்யா பற்றிச் சில விஷயங்களைப் பாரதியார் எழுதியிருக்கிறார்.

"1918-ம் வருஷத்தில் மாஸ்கோவில் நடைபெற்ற ஸோஷலிஸ்ட் ஸமாஜத்தில் குழந்தைகளுக்குக் கொடுக்கும் ஆஹாரம் முதலியவற்றுக்கும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் ஆஹாரம், துணி, வாஸஸ்தலம் முதலியவற்றுக்கும் பணம் வாங்கக் கூடாதென்ற யோசனை ஸ்ரீமான் லாரினாலே சொல்லப்பட்டது. அவ்வருஷ ஏப்ரல் மாதத்தில் குழந்தைகளுக்கெல்லாம் ருஷியாவில் இனாம் ஆஹாரம் போடுவதாக ராஜாங்க உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. குழந்தைகளின் வயதளவு 14-ஆக வைத்திருந்தது. பின்பு 16-ஆக உயர்த்தப்பட்டது; சிறிது காலத்திற்குப் பிறகு வேலையாட்களுக்கெல்லாம் இனாமாகத் துணி கொடுக்கப்பட்டது...............

மனுஷ்ய நாகரிகத்தின் ஆரம்ப காலந்தொட்டே பணப் பழக்கமிருந்து வருகிறது. இதனால் விளைந்த துன்பங்கள் எண்ணற்றன; அந்தப் பழக்கத்தை இப்போது மனித ஜாதியில் பத்திலொரு பங்கு ஜனத் தொகையை ஆளும் ராஜாங்கத்தார் திடீரென்று நிறுத்த உத்தேசிக்கிறார்கள். இதனால் புதிய ஸௌகர்யங்களேற்படுவதுடனே, பணப் பழக்கத்தால் இயன்று வரும் பழைய ஸௌகர்யங்களுக்கு இடையூறில்லாமல் செய்துவிடக் கூடுமானால், ருஷியாவை இவ்விஷயத்தில் உலகத்தார் பின்பற்ற முயல்வார்களென்பதில் சந்தேகமில்லை."

## பாரதியாரின் தெளிந்த சிந்தனை

பாரதியாரது கருத்துக்கள் இவை; தனக்கு கிடைத்த செய்திகளிலிருந்து விஷயங்களை அனுமானித்துச் சில கருத்துக்களைத் தொட்டுத் தடவுகிறார் கவிஞர்; தனியுடைமை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்துரிமை, தேச உடமை பற்றிப் பாரதியார் தெளிவான சிந்தனை பெற்றிருந்திருப்பார் என நாம் எதிர்பார்ப்பது தவறு, தனது கற்பனை உலகிற்குச் சிறப்பும் பெருமையும் தரவல்ல பல விஷயங்களைக் கவனித்து எழுதியுள்ளார் என்பதே நிச்சயமாகக் கூறக் கூடியது. இன்னோரிடத்திலே 'தொழிலாளர் கிளர்ச்சி' என்னும் பொருள் பற்றிக் குறிப்பிடுகையில் ''போல்ஷெவிஸ்ட் கொள்கையை மத்திய ஆசியாவில் பரவவிடக் கூடாதென்றெண்ணும் ஆங்கிலேய மந்திரிகள்.... என்ன செய்யலாம்.... ஆங்கிலேயப் பழங்கதையொன்றிலே சொல்லப்பட்டது போல, கான்யூட் ராஜா சொல்லுக்குக் கடல் கீழ்ப்படிந்து நடக்குமா என்று?'' கூறியுள்ளார்.

இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் பாரதியார் சோவியத் யூனியனைப் பற்றியும் பொது உடைமைக் கொள்கையைப் பற்றியும் உதிரியாகக் கூறியவற்றிலிருந்து காலக் கண்ணாடியாகக் கவிஞன் திகழ்ந்ததை நாம் அறிகிறோம். சோவியத் புரட்சி நடந்து நான்காண்டுகளுக்குள் இவ்வுலக வாழ்வை நீத்த கவிஞர் பல்லாண்டுகள் வாழ்ந்திருந்தால் என்ன கூறியிருப்பார் என்று நாம் ஊகிப்பது சரித்திர விதிக்கு அப்பாற்பட்டதாகையால் அதனை விட்டுவிட்டுத் தாகூரைக் கவனிப்போம்.

## இரவீந்திரரின் புதுமை பூஜை

''கல்வி வரட்சி நிறைந்திருந்த ரஷ்யாவிலே மக்கள் கல்வியறிவு பெருமளவில் வியாபித்து விட்டது என்று நான் கேள்விப்பட்ட போதே அந்த நாட்டிற்கும் போகவேண்டும் என்று நான் உணர்ந்தேன்; பல சோதனைகளுக்காளான எனது வயோதிக உடல் தாங்காது என்று கண்டாலும் அங்கு போக விரும்பினேன்.''

இவ்வாறு ரஷ்யா பற்றிய கடிதங்களிலே தாகூர் எழுதியுள்ளார். தனது எழுபதாவது வயதிலும் 'புதிய உலக'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொன்றைக் காண வேண்டுமென்று துடித்த தாகூரின் உள்ளம் கவியுள்ளமாகத்தான் இருக்க முடியும். கணந் தோறும் வியப்புக் காணும் கவியுள்ளம் நாகரிகப் பரிசோதனை நடக்கும் ஓரிடத்தை நாடியதில் வியப்பில்லை யல்லவா? தமது 68-வது வயதில் ஓவியங்கள் தீட்டத் தொடங்கிய இரவீந்திரர் புதுமையைப் பூஜித்தவர் என்றே கூறலாம். எழுபதாவது வயதில் அவர் ரஷ்யா சென்றார். அவரது வாழ்க்கையின் முக்கியமான மைல்கல்லாக அந்த விஜயம் அமைந்துவிட்டது. இலட்சிய வேட்கையுடன் புத்துலகைச் சிருஷ்டிக்கும் சிற்பிகளை அவர் கண்டார்; புதிதாகத் தொடங்கப்பெற்ற கூட்டுப் பண்ணைகளிலே விவசாயிகளைச் சந்தித்தார்; தொழிற்சாலைகளில் உழைப் பவர்களைக் கண்டார்; தொழிற் சங்கங்களைக் கண்டார்; மாணவர்களுடன் அளவளாவினார்; குழந்தைகளையும், பெண்களையும் அருகழைத்துப் பேசி மகிழ்ந்தார்; அவர்கள் யாவரும் பல கேள்விகளைக் கேட்டனர்; தாகூர் சில கூட்டங்களிற் பேசினார். தங்கியிருந்த பதினேழு நாட் களில் பார்க்க முடிந்தவற்றையெல்லாம் கவித்துடிப்புடனும், விழிப்புடனும் உணர்ந்தார். தாகூர் முன் தோன்றிய பல கேள்விகள் உடல் தளர்ந்தும் உளம் தளராத அவருக்குப் பல புதிய சிந்தனையுணர்வுகளைத் தோற்றுவித்தன என்ப தில் ஐயமில்லை. ''உங்கள் நாட்டு இசையை, நாடகத்தை, நடனத்தை இலக்கியங்களை நெருங்கி அறிந்துகொள்ள ஆவலாயிருக்கிறேன்'' என்று 1926-ம் ஆண்டு ஸ்டாக் ஹோம் நகரிலே சந்தித்த சோவியத் எழுத்தாளர் அலெக்ஸி அரொசெவ்விடம் தாகூர் கூறினாராம். ஆனால் நான்காண்டு களுக்குப் பின்னர் அந்த நாட்டிற்குச் சென்றபோது கலை, இலக்கியத்தை மட்டும் பார்க்கவில்லை தாகூர். வாழ்க்கை முறையையும் பார்த்தார். திறந்த மனத்துடன் பல பிரச்சினைகளை ஆழமாகச் சிந்தித்தார். ஏனெனில் அவர் மனம் திடீரென விசாலமடைந்தது. ரஷ்ய விஜயத் தின் பின்னர் தனது மகன் இரவீந்திரநாத் தாகூருக்கு எழுதிய கடிதமொன்றிலே கவிஞர் எழுதினார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஜமீன்தார் அமைப்பு முறை குறித்துப் பெரிதும் வெட்கப்படுகிறேன். இன்று எனது மனம் மேலிடத்தை விட்டிறங்கிக் கீழே ஓர் இடம் பிடித்துள்ளது. எனது குழந்தைப் பருவத்திலிருந்து ஒரு புல்லுருவியாக நான் வளர்க்கப்பட்டிருக்கிறேன் என்று எண்ணும்போது பெருங் கவலை உறுகிறேன்."

## தனி மனிதனில் தாகூர் நம்பிக்கை

கல்வித் துறையில் பெரு நாட்டம் உள்ள தாகூருக்கு ரஷ்ய மக்கள் யாவருக்கும் கல்வி வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது அளவிலா மகிழ்ச்சியைக் கொடுத்தது. குதூகல உணர்ச்சியுடன் பேதங்களின்றி மனிதப் பிரயத்தனம் பலனடைகிறது என்று தனது கடிதங்களில் கவிஞர் குறிப்பிடுகிறார். படிப்படியாகக் கவிஞரது பாராட்டுதல்கள் உயர்ந்து செல்வதையும் அவரது எழுத்துக்களில் நாம் காணலாம். இளமைத் துடிப்புள்ள 'சோதனை' என்றும் அதன் பின்னர் 'அற்புதமான மனித சாதனை' என்றும், இறுதியில் எனது 'கனவுகள் ஒன்று திரண்ட வடிவம்' என்றும் தாகூர் சோவியத் வாழ்க்கை முறையை வருணித்துள்ளார். அதே சமயத்தில் தனி மனிதனைப் பற்றி உயர்ந்த நம்பிக்கைகொண்ட தாகூர் தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகார ஆட்சியிலே தனிமனிதனது ஆளுமை காலப்போக்கில் மங்கிக் குன்றி விடுமோ என்று அச்சம் தெரிவித்தார். பாரதியார் கிருத யுகத்தைப் பற்றித் தான் கண்ட கனவுகளை ரஷ்யாவுடன் இணைத்துப் பார்க்க முயன்றது போலத் தாகூரும், தனது 'ஒப்புயர்வற்ற மனித ஆளுமை' நிறைந்த இன்ப உலகின் இலட்சிய வரம்புக்குள் நின்றுகொண்டு ரஷ்ய சமுதாயத்தை நோக்கினார். புத்தம் புதிய வாழ்க்கை முறை ஒன்று அப்பொழுது பரிசோதனை செய்யப்பட்டது என்பதனைப் பாரதியோ தாகூரோ முற்றாக உணர்ந்தனர் எனக் கொள்ள முடியாது; வேதாந்தம் கூறும் இலட்சிய வடிவமான சமத்துவக் கொள்கையிலும், சைவ வைணவ பக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான்கள் காட்டிய சமுதாய ஒற்றுமைக் குரலிலும் தோய்ந் திருந்த தாகூரும் பாரதியாரும் தனி மனித முன்னேற்றம், வளர்ச்சி என்னும் கண்ணோட்டத்திலேயே சோவியத் புரட்சியை அணுகினர்; ஆனால் மேற்கத்திய ஏகாதிபத்திய வெறுப்பானது ரஷ்ய சமத்துவக் கொள்கை ஈடுபாட்டை வலுப்படுத்தியது என்றும் கொள்ளலாம். மேற்கத்திய நாகரிகத்தில் கவிஞருக்கு நம்பிக்கை குறையக் குறையக் கிழக்கில் தோன்றிய நாகரிகத்தில் மனப்பற்று ஏற்பட்டதும் இயற்கையே. சுருங்கக் கூறின் அரசியல் பிரச்சினைகளில் அமிழ்ந்திருந்த பாரதியார் சோவியத் புரட்சியின் அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளிலும், தத்துவம், கலை, இலக்கியத் துறைகளில் மூழ்கியிருந்த தாகூர் சோவியத் மனிதனது ஆத்மார்த்த வளர்ச்சியிலும் சிரத்தையெடுத்துக் கொண்டார்கள் என்று பொதுவாகக் கூறலாம். எனினும் சமுதாயத்திலே பிரச்சினைகள் திட்டவட்டமாகத் தெளி வாகத் தோன்றுவதில்லை. ஒன்றுடன் ஒன்றிப் பின்னிப் பிணைந்தே உள்ளன. அந்தப் பிணைப்பை இரு கவிஞர் களும் உணர்ந்தனர் என்று கூற முடியாது. ஆனால் அது அவர்கள் குற்றமன்று. அன்றைய ஆசியாவின் நிலைமை அப்படி.

## உலகக் கவிஞர் இருவரின் சிந்தனை

தாகூரும் பாரதியும் உலகக் கவிஞர்களாகையால் உலக வரலாற்றையும் சிறப்பாக ஆசிய-ஆப்பிரிக்க வரலாற்றை யும் திசை திரும்பிவிட்ட சோஷலிஸ்டுப் புரட்சி பற்றி அவர்கள் சிந்தனையைத் தெளிவாக்கிக் கொள்ளுதல் அவசியமாகிறது. ஏனெனில் மகாகவிகளுக்குரிய தராசு வெறும் தேசிய இலக்கியத்தராசு அன்று; சர்வதேசப் பளுவைத் தாங்கும் கவியுள்ளத்தை மதிப்பிட்டுக் கொண்டு இனி இரு கவிஞர்களது கவிதைப் பொருளின் வேறு சில பண்புகளைக் கவனிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

ஒரு சமூகத்தின் அல்லது இனத்தின் வரலாற்றிலே நெருக்கடிகள் ஏற்படும் போது அங்கு பழமையைப் போற்றும் பண்பு தீவிரமடைவதை, உலக வரலாற்றிலே நாம் காண்கிறோம். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே இந்தியாவில் தேசிய உணர்ச்சி உருப்பெறத் தொடங்கியபோது அது இந்துமத அடிப்படையிலேயே உரம்பெற்று வந்தது. வேத, உபநிடதங்களின் ஜீவசத்தையே புதிய இந்தியா பருக வேண்டும் என்று தேசியவாதிகள் நம்பினர்; பிரசாரஞ் செய்தனர். வேதகால வாழ்க்கையையே இந்தியா மீண்டும் கடைப்பிடிக்க வேண்டும் என்று கருதிய தயானந்த சரஸ்வதி (1824-1883) நிறுவிய ஆரிய சமாஜமும், இந்து மதத்தில் புகுந்த மூடக்கொள்கைகள் வழக்கிழந்த சடங்குகள் முதலியவற்றைக் களைந்து காலத்திற்கேற்ற இந்து மதத்தை ஸ்தாபிக்க முயன்ற ராஜாராம் மோகன் ராயர் (1772-1833) நிறுவிய பிரம சமாஜமும் தமக்குள் சிறிது மாறுபட்டாலும் வேத, உபநிடதங்களையே அடிநிலைக் கருவூலங்களாகக் கொண்டன. ஆரிய சமாஜம் பஞ்சாப் மாகாணத்தில் 1875-ல் தோன்றியது; பிரம சமாஜமோ வங்காளத்திலே 1828-ல் உருவாகியது. இவ்விரு இயக்கங்களும் தோற்றுவித்த சூழலிலேயே பாரதியாரும் தாகூரும் தமது இளமைப் பிராயத்தைக் கழித்தனர். ஆரிய சமாஜமும் பிரம சமாஜமும் இந்தியா முழுமைக்கும் எழுச்சி தரவல்ல வகையில் வேதாந்தத்தைப் பரப்பி வந்தன. கல்கத்தாவிலும் பம்பாயிலும் பத்தொன்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கைத்தொழில் வளர்ச்சி தொடங்கியது; அதனையொட்டி வர்த்தகப் பெருக்கமும் ஏற்பட்டது. கைத்தொழில், வர்த்தகம் ஆகியன அளித்த செல்வத்தைப் பயன்படுத்தி மேனாட்டுக் கல்வி கற்ற மத்தியதர வர்க்கத்தினரிடையேதான் இந்துமத மறுமலர்ச்சி தீவிரமாகக் காணப்பட்டது—செல்வமும் ஆங்கிலக் கல்வியும் பெற்றிருந்தும் அந்நியராட்சி தம்மைப் பாரபட்சத்துடன் நடத்துவதை அவர்கள் உணர்ந்தனர்; அவர்களது தன்மான உணர்ச்சி புண்பட்டது. அதற்குச் சமாதானமும், நிவாரணமும் காணும் மனப்போக்கிலேயே அவர்கள் பண்டை இந்தியாவின் சிறப்பைப் பேசத் தொடங்கினர். சுவாமி விவேகானந்தர் (1863-1902) அமெரிக்காவிலே சிக்காகோ நகரில் சொற்பொழிவாற்றிய போது இந்திய மத்தியதர வர்க்கத்தினர் பேரானந்தம் அடைந்தனர். இந்திய தேசிய இயக்கம் வேகமாக வளர்ந்து கொண்டிருந்தது. அதற்குத் தத்துவார்த்த அடிப்படையாக அமைந்தது வேதாந்தம்.

## இந்து சமய மறுமலர்ச்சிப் பண்பு

பாரதியாரும் தாகூரும் இந்தத் தத்துவார்த்த வட்டத்தை விட்டு முற்றாக விலக முடியவில்லை. ஏனெனில் அவர்கள் அவ்வியக்கத்தின் புத்திரர்கள். அதற்கு இலக்கிய அந்தஸ்தும் வடிவமும் கொடுத்தவர்கள். பாரதியாரையும் தாகூரையும் வளர்த்த இந்துமத மறுமலர்ச்சியானது மற்றெந்த இயக்கத்தையும் போலவே இயல்பாகவே இரு பண்புகளையுடையதாயிருந்தது. வேதங்கள், பிரமசூத்திரங்கள், உபநிடதங்கள், பகவத் கீதை முதலியவற்றைப் போற்றித் துறவி மனப்பான்மையை வளர்த்தனர் ஒரு சிலர்; செயல், ஆனந்த மயமான வாழ்க்கைப் பற்று முதலியவற்றை வளர்த்தனர் வேறு சிலர். தன்னளவில் துறவியாக இருந்தாலும் வீறுகொண்ட வேதாந்தத்தையே சுவாமி விவேகானந்தர் போதித்தார். "விதவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் கண்ணீரைத் துடைக்கவோ, அனாதைக் குழந்தைக்கு ஒரு வாய் உணவு கொடுக்கவோ சக்தியற்ற மதத்திலே'' தனக்கு நம்பிக்கை இல்லை என்று முரசறைந்தார் விவேகானந்தர்.

தாம் பிறந்து வாழ்ந்த சமூதாயத்தின் நாடித் துடிப்பாக விளங்கிய பாரதியாரும், தாகூரும் வாழ்க்கை வாழ்வதற்கே என்னும் வேதாந்த வழியினையே பின்பற்றினர். நுணுக்க மாகப் பார்க்கின் பாரதியார் மீது ஆரிய சமாஜத்தின் செல்வாக்கையும், தாகூர் மீது பிரம சமாஜத்தின் செல்வாக்கையும் காணலாம். எனினும் இவையிரண்டும் பெரிதும் முரண்பாடுடையனவல்லவாதலின் வேற்றுமை யிலும் பார்க்க ஒற்றுமையே அதிகம் எனக் கூறலாம்.

## மாயாவாதமும் பாரதியாரும்

துறவறத்தை—உலகம் மாயை என்னும் மாயா வாதத்தை —பாரதியார் தமது கவிதையிலும் வசனத்திலும் காரசார மாகக் கண்டித்துள்ளார். இயற்கையின் மடியிலே வாழ்ந்து, இயற்கைச் சக்திகளையும் தெய்வங்களையும் விளித்துப் பாடிய வேதகால ரிஷிகளையும் 'மனிதப் பிறவியும் வேண்டு வதே இந்த மாநிலத்தே' என்று பாடிய சைவ சமய குரவர்களில் ஒருவராகிய அப்பர் சுவாமிகளையும் ஆழ்ந்து கற்ற பாரதியார் உலக வாழ்வில் நல்லின்பங்களை வாழ்த்திய தில் வியப்பெதுவுமில்லையல்லவா?

**''நானுமோர் கனவோ?—இந்த**
**ஞாலமும் பொய்தானோ?**
**காலமென்றெ ஒரு நினைவும்**
**காட்சியென்றே பல நினைவும்**
**கோலமும் பொய்களோ?—அங்குக்**
**குணங்களும் பொய்களோ?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சோலையிலே மரங்களெல்லாம்**
**தோன்றுவதோர் விதையிலென்றால்**
**சோலை பொய்யாமோ?—இதைச்**
**சொல்லோடு சேர்ப்பாரோ?**
**காண்பதெல்லாம் மறையுமென்றால் மறைந்ததெல்லாம்**
**காண்பமன்றோ?**
**வீண்படு பொய்யிலே—நித்தம்**
**விதி தொடர்ந்திடுமோ?**

என்று உலகத்தை நோக்கிப் பொய்யோ? மெய்யோ? என்று வினவுகிறார் பாரதியார். பாடலின் முடிவிலே, தானே கேள்விகளுக்கு விடையையும் கூறிவிடுகிறார்.

**'காண்பதுவே உறுதி கண்டோம்,**
**காண்பதல்லால் உறுதியில்லை;**
**காண்பது சக்தியாம்—இந்தக்**
**காட்சி நித்தியமாம்'**

என்று புதிய வரை விலக்கணம் கூறிச் செல்கிறார் பாரதியார். **'மாயையைப் பழித்தல்'**, **'சங்கு'**, முதலிய பாடல்களிலெல்லாம் பாரதியார் மாயாவாதத்தைக் கண்டித்தார். **'பொய்யுறு மாயையைப் பொய்யெனக் கொண்டு களித்திருப்பார் ஆரியர்'** என்கிறார் பாரதியார். **'நெருங்கினப் பொருள் கைப்பட வேண்டும்'** என்றும் **'எடுத்த காரியம் யாவினும் வெற்றி'** என்றும் **'காணி நிலம் வேண்டும்'** என்றும் பராசக்தியிடம் அடிக்கடி வரங் கேட்டுக்கொண்டிருந்த பாரதியார் மாயாவாதம் பேசியிருக்க முடியாதுதான்.

**'எத்தனை கோடி இன்பம் வைத்தாய்—எங்கள்**
**இறைவா! இறைவா! இறைவா!**
**சித்தினை அசித்துடன் இணைத்தாய்—அங்கு,**
**சேரும் ஐம்பூதத்து வியனுலகமைத்தாய்**
**அத்தனை யுலகமும் வர்ணக்களஞ்சிய**
**மாகப் பலபல நல்லழகுகள் சமைத்தாய்'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாரதியார் பாடும்போது உலகின் காட்சிகள் அத்தனையையும்—மண்ணுலகத்து நல்லோசைகள் அத்தனையையும் தழுவி அணைப்பதை நாம் காண்கிறோமல்லவா? வீறு கொண்ட வேதாந்தத்தின் விளைவாகத் தோன்றிய உலகப்பற்று அது.

## வேதாந்தமும் இரவீந்திரரும்

தாகூரின் வாழ்க்கைத் தத்துவமும் ஏறத்தாழ இத்தகையதுதான். உயிர்த் துடிப்புள்ள வேதாந்தமே தாகூரின் சமயமாகும். அருவமுமுருவமுமற்ற பிரமமாக இறைவனைத் தாகூர் காணவில்லை. வர்ணக் களஞ்சியமும் வடிவழகும் நிறைந்த இவ்வுலகமானது முழுமுதற் கடவுளின் ஆனந்த மயமான வெளிப்பாடு என்று அவர் கொண்டார். "காணுங் காட்சிகள் மாயையல்ல; கனவல்ல; இறைவனின் ஆனந்தக் கூத்து. எனவே மலையுச்சியிலும் பர்னக சாலையிலும் ஒதுங்கியிருந்து இறைவனைத் தேட வேண்டியதில்லை; மேலுலகத்தில் தேட வேண்டியதில்லை" என்றார் தாகூர். அவர் கூறுகிறார்:

> "எண்ணற்ற வடிவங்கள் நிறைந்த இந்த நாடக உலகிலே நான் எனது வாழ்க்கை நாடகத்தை நடத்துகிறேன். உருவமற்ற இறைவனை இங்கு நான் கண்டு கொண்டேன்;

> "துறவறமே விடுதலை என்று நான் நம்பவில்லை; ஆயிரமாயிரம் இன்பத் தளைகளின் அரவணைப்பிலேயே நான் விடுதலையை யுணர்கிறேன்."

தாகூர் எழுதிய **'சந்நியாசி'** என்ற நாடகத்திலே ரகு என்னும் தீண்டாதவன் மகள் **வசந்தி** சந்நியாசி மனதில் உலகப் பற்றை உண்டாக்கிவிட்டு உலக வாழ்வை நீத்துவிடுகிறாள். வரட்டு மாயாவாதம் பேசிய துறவி நாடகத்தின் முடிவில் தனக்கு வாழ்வில் இன்ப நிலையை விட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற வசந்தியைத் தேடியலைகிறான். அப்பொழுது அவன் சொல்லுகிறான்.

"எனது துறவற விரதம் தொலையட்டும்; எனது பற்றுக்கோலையும் பிட்சா பாத்திரத்தையும் உடைத்தெறிகிறேன்....பறவை ஆகாயத்தில் பறக்கிறது; அகண்ட பாழ்வெளிக்குள் செல்வதற்கன்று; மீண்டும் இந்த பூமியையே வந்தடைகிறது. நான் விடுதலைபெற்று விட்டேன்; உருவமற்ற இன்மைத் தளைகளிலிருந்து விடுதலை பெற்று விட்டேன். பொருள்களுக்கு மத்தியில், வடிவங்களுக்கு நடுவில், நோக்கத்திற்கு இடையில் நான் விடுதலை பெற்று விட்டேன்; எல்லையுள்ளதே உண்மையில் எல்லையற்றது. காதலே உண்மையைக் கண்டறிவது. எனது அன்பே, நீயே சகலவற்றினதும் ஜீவன். உன்னை பிரிந்திருக்க என்னால் முடியாது."

என்று மனம் மாறிய துறவி குமுறுகிறான். துறவிக்கு மனம் மாறும் நிகழ்ச்சி தாகூரின் வேறு சில இலக்கியப் படைப்புக்களிலும் இடம் பெறுகிறது. ஓர் இளம் பெண்ணின் (குஸூமா) இதய தாகத்தை உணர மாட்டாத துறவியை **'படித்துறை சொன்ன கதை'** என்ற சிறு கதையிலே படைத்திருக்கிறார் தாகூர்.

## இலக்கியமும் சாக்த வழிபாடும்

தத்துவச் சார்பைப் பொறுத்தவரையில் பாரதியாரைப் போலவே தாகூரும் வேதாந்தியாக இருந்தாலும் இருவரும் வழிபட்ட இஷ்ட தெய்வங்கள் வேறானவை. பாரதியார் சக்தியை—காளியை உலக மாதாவை—வழிபட்டார். பாரதிக்கு முன்னே தமிழில் சாக்த இலக்கியம் இருக்கவில்லை எனக் கூறமுடியாது. ஆயினும் அன்னை பராசக்தியை இஷ்ட தெய்வமாகக் கொண்டு பாடிய தமிழ்ப் பெரும் புலவன் பாரதிதான் என்பதில் ஐயமில்லை. சாக்த வழிபாடு நெடுங்காலமாகவே வங்காளத்தில் நிலவி வருவதொன்று. தேசிய உணர்ச்சி பெருக்கெடுத்தோடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் சாக்த வழிபாடு தேச பக்தியைத் தெய்வ பக்தியாக உருமாற்றுவதற்குப் பெரிதும் உதவியது. தேசபக்தி தெய்வ பக்தியாக மாறிய 'சரித்திரத் தேவை' நன்கு மனங்கொளத் தக்கதாகும். இதுபற்றிப் பேராசிரியர் டி. பி. முகர்ஜி கூறுவது பொருத்தமாகும்.

"லௌகிக உலகில் அன்றைய சக்தியானது தேசிய உணர்ச்சியாக இருந்தது. இந்த தேசிய உணர்ச்சியை ஒரு சமயமாக ஏற்றுக் கொள்ள மக்கள் தயாராக இருந்தனரென்றால், அது அன்று சமய வாழ்வின் தரக்குறைவையே காட்டுகிறது. தாம் இழந்த ஆத்மார்த்தப் பொருளுக்கு ஈடு செய்யத் தேசிய உணர்ச்சியைத் தழுவினர். மக்கள் இழந்த தெய்வீக வாழ்க்கைக்குப் பதிலாகத் தேச பக்தியை அதற்கீடாக ஆக்கிய நமது தேசியத்தின் இந்த அம்சத்தை நாம் அலட்சியஞ் செய்யலாகாது."

என்று கூறுகிறார் துரஜதிபிரசாத்முகர்ஜி. "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனி சிறந்தனவே" என்று பாரதியார் பாடும்போது இந்தப் பண்பை நாம் காண்கிறோம். "வந்தே மாதரம் என்போம்—எங்கள் மா நிலத் தாயை வணங்குதும் என்போம்" என்று பாரதியார் பாடுகையில் வங்காளத்திலிருந்தும் மகாராஷ்டிரத்திலிருந்தும் அவர் தீவிர சாக்த வழிபாட்டைப் பெற்றார் என்று கூறத் தோன்றுகிறது. 'பாரதமாதா' 'எங்கள் தாய்' 'வெறிகொண்ட தாய்' முதலிய பாரதி பாடல்களில் பாரதத் தாயும் மகாசக்தியும் ஒருவருடன் ஒருவர் இணைந்துள்ளதை நாம் காணலாம். வெறி, வேகம், கோபம், பயங்கரம், சப்தம், சங்காரம், அன்பு, அருள் முதலிய பல பண்புகள் சேர்ந்த பூரணமான—நூதனமான—பெண் சக்தியைப் பாரதியார் போற்றிப் பரவினார்; சக்தி பெற்றார்.

## பாரதியார் விடுத்த வேண்டுகோள்

இந்துமத பாதுகாவலனாக விளங்கிய சத்ரபதி சிவாஜி (16-7-1680) பவானியை வழிபட்டான். பங்கிம் சந்திரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது ஆனந்த மடத்தில் சக்திக்கு அடிமையான தொண்டர்களைச் சித்திரித்தார். இவை பாரதியின் உணர்வை வளர்த்தன என்பதில் ஐயமில்லை. எனினும் பாரதியின் சக்தி வழிபாடு பூரணமான தெளிவும் வடிவும் பெற்றது அரவிந்தர் சேர்க்கையாலாகும். அதனைப் பின்னர் கவனிப்போம்.

சிறப்பாக வங்காளத்தையும் பொதுவாக இந்தியா முழுவதையும் பாதித்த சக்தி வழிபாட்டைத் தாகூர் ஏறத்தாழ நிராகரித்தார் என்றே கூறவேண்டும். 1904-ம் ஆண்டு தாகூர் 'சிவாஜி உற்சவம்' என்னும் கவிதையை எழுதினார். 1905-ம் ஆண்டு வட இந்தியாவிலே பல இடங்களில் சிவாஜி உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. தென்னாட்டில் சிவாஜி உற்சவம் கோலாகலமாக நடைபெறவேண்டும் என்று 'இந்தியா' பத்திரிகையில் வேண்டுகோள் விடுத்தார் பாரதியார். 1907-ம் வருடம், 'சத்திரபதி சிவாஜி—தன் சைனியத்திற்குக் கூறியது' என்ற பாடல் வெளிவந்தது. 1904-ல் தாகூர் பாடிய 'சிவாஜி உற்சவம்' என்னும் கவிதையையும், 1906-1907-ல் பாரதியார் சிவாஜி பற்றி வசனமாகவும் பாட்டாகவும் எழுதியவற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்து மதச் சார்பு பாரதியில் கூட இருப்பது தெரியவரும். தாகூர் சிவாஜியை இந்திய வீரனாகக் கண்டார். பாரதியாரோ இந்து சமய வீரனாகக் கண்டார். சுருங்கக் கூறின் இந்து மத அடிப்படையில் வீரபூஜை அவசியம் என்று கருதினார் பாரதியார். 1906-ம் வருடம் சென்னையிலே திலகர் பிறந்த தினத்தைப் பாரதியார் தனது வீட்டில் கொண்டாடினார். பாரத கண்டத்தின் வீரசக்தியாகிய ஸ்ரீ பவானி தேவியின் பூஜை நடைபெற்றது. அதையொட்டி 'தமிழ் உலகம்' பத்திரிகையில் பாரதியார் எழுதிய கட்டுரையொன்றிலே பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''தெய்வ பூஜையைக் காட்டிலும் இப்போது நமது நாடு இருக்கும் நிலைமைக்கு வீரபூஜை அத்தியாவசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகும். சிவாஜி, பிரதாபர் முதலிய யுத்த வீரர்களும் புத்தர், சங்கர் முதலிய ஞான வீரர்களும் வாழ்ந்த இந்தப் புண்ய தேசமானது இப்போது வீரசூனியமாகப் போய் விட்டது. அந்த ஸ்திதியில் ஈஸ்வர கடாக்ஷத்தினால் உதித்திருக்கின்ற சாமானிய மஹான்களைக்கூட நாம் தக்கபடி கவுரவம் செய்யாமல் இருப்போமானால் நம்மை மிகவும் இழிந்த குருடர்களென்று உலகத்தார் நிந்தனை புரிவார்கள்.

வீர பூஜையானது ஒரு தேசத்தின் அபிவிருத்திக்கு இன்றியமையாததாகும். கார்லைல் என்ற ஆங்கிலேய ஞானியார் வீரபூஜையைப் பற்றி ஓர் முழுக் கிரந்தம் எழுதியிருக்கிறார்....''

என்று எழுதிய பாரதியார் 'இந்திய வீரர்கள் தமது வலிமையையும் ஞானத்தையும் தாய்த் தேசத்தின் அனுகூலத்திற்கு நிவேதனம் செய்யவேண்டும்' என உரக்கக் கூவினார். பிற்காலத்தில் பலாத்காரத்தைப் பாரதியார் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், பாரதியார், வ. வே. சு. ஐயர், அரவிந்தர் (1872-1950) முதலியோரெல்லாம் ஆரம்ப காலத்தில் தீவிர வாதத்தையே கடைப்பிடித்தனர் என்பதில் ஐயமில்லை. அந்தத் தீவிரமான வீரபூஜைக்கு நிவேதனமும் ஆகுதியும் கேட்ட தெய்வம் பராசக்தி.

## தாயன்பும் தாகூரும்

ஆனால் தாகூர் அதீத சக்தி வழிபாட்டை வெறுத்தார் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன. ஆயிரக்கணக்கான கவிதைகளைப் பாடிக் குவித்த தாகூர் தாய்மையைப் பற்றியும் தாயன்பைப் பற்றியும் பாடியுள்ள சந்தர்ப்பங்கள் அருமையாகவே காணப்படுகின்றன. இந்த இடத்திலே பேராசிரியர் டி. பி. முகர்ஜி கூறுவது கவனிக்கத் தக்கது. ''வங்காளத்தின் கலாசார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் ஓர் அம்சத்துடன் (சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடு—தாய் வழிபாடு) தாகூர் தொடர்பு கொள்ளாததும், அவர் தனது சொந்த தாயுடன் நெருங்கிய உறவு பெறாதிருந்ததும் குறிப்பிடத்தக்கன. வங்காள மொழியிலே வங்காளத்தைத் தாய் என்று பாடிய பாடல்களைப்பற்றி அவர் பெருமைப்படவில்லை. புகழ்பூத்த வந்தேமாதரம் என்னும் பாடல் அவருக்கு அவ்வளவு கவர்ச்சியானதாகத் தோன்றவில்லை. தாயினுடை 'குழந்தைகள்' பற்றியும் அவருக்கிருந்த அலட்சியம் குறிப்பிடத்தக்கது'' என்று எழுதியுள்ளார் பேராசிரியர் முகர்ஜி.

இந்தச் சந்தர்ப்பத்தில் தாகூர்—பாரதியார் தெய்வ நம்பிக்கை பற்றி ஒரு சிறிது கூறுதல் அவசியமாகிறது. இந்திய தேசிய மறுமலர்ச்சியை யொட்டி இந்துக்கள் யாவருக்கும் பொதுவான தத்துவமாக வேதாந்தத்தை மேற்கொள்ளப் பலர் முனைந்தது போலவே, சக்தி வழிபாட்டை வீரபூஜையாக்கப் பலர் முனைந்தனர். திலகர், அரவிந்தர் இந்த இயக்கத்தின் பிரதான தலைவர்களாவர். பிரமபாந்தவ, உபாத்தியாயர் முதலியோர் வீரபூஜையை நடைமுறையில் காட்டிப் பலாத்காரச் சூறாவளியில் தமது உயிரைத் தியாகஞ் செய்தனர். திலகர், அரவிந்தர் வழியைப் போற்றிய பாரதியார் இந்தியப் பொதுத் தத்துவமாக வேதாந்தத்தையும், இந்தியப் பொதுத்தெய்வமாக மாகாளியையும் கொண்டார். ஆனால் தாகூர் வேறு வழியில் சென்றார்.

## ஜீவன தேவதைப் பற்றிய மயக்கம்

தனிமனிதவாதியான தாகூர் தான் ஓர் உலகப் பிரஜையாக இருக்க முனைந்தார். ஆனால் உலகப் பொதுவாகப் பிறர் போதித்ததை அவர் ஏற்க மறுத்தார். தாகூரின் இப்பண்பை வேறு துறைகளிலும் காணலாம். பிரம சமாஜம் உபநிடதங்களின் உன்னதமான பண்புகளைப் பிரச்சாரஞ் செய்த நிறுவனம். அதன் முக்கிய தலைவர்களில் ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாகவி தாகூரின் தந்தையான தேவேந்திர நாத் தாகூர். ஓய்வு, அமைதி, தியானம், பஜனை, தனிமை முதலிய குணங்களைப் போற்றிய பிரபுத்துவக் குடும்பத்தில் பிறந்து ஜனநாயகவாதியாக மாறிய இரவீந்திரர் தனது இஷ்ட தெய்வமாக 'ஜீவன தேவதை' என்ற ஒன்றை வகுத்துக் கொண்டார். வெகுஜன இயக்கத்தை நிராகரித்த தாகூருக்கு வீறும், எழுச்சியும் ஊட்டவல்ல வீரபூஜை—சக்தி வழிபாடு அவசியமில்லாதிருந்தது. திட்டவட்டமான எதிலும் கட்டுப்பட விரும்பாத தாகூர் தனது மனக் கோயிலில் வழிபட்ட இந்த ஜீவன தேவதை எது என்பது பற்றித் தாகூர் ஆராய்ச்சியாளர்களிடையே எப்பொழுதும் தீராத கருத்து வேறுபாடுகள் நிலவி வந்துள்ளன. அந்தக் கருத்து மயக்கத்தைத் தாகூரே உண்டாக்கினார் எனத் துணிந்து கூறலாம். ஜீவன தேவதை என்பது தாகூரின் கவிதா தெய்வம் என்று சிலர் கூறுவர். 'ஜீவன தேவதை', 'நைவேத்தியம்' முதலிய கவிதைகளில் தாகூர் ஒரு தெய்வத்துடன் உரையாடுகிறார்; பல வேண்டுகோள்களை விடுக்கிறார்; சுந்தரர், ஆண்டாள் முதலிய பக்தர் பக்தைகள் இறைவனிடம் நேரடியாகச் சம்பாஷித்ததுபோலத் தாகூரும் தனது ஜீவன தேவதையுடன் மனங் கலந்து வார்த்தை பரிமாறுகிறார். ஆனால் சிவன், விஷ்ணு, காளி முதலிய உருவுள்ள கடவுள்களைப் போலல்லாது தாகூரின் ஜீவன தேவதைக்கு உருவமில்லை. உருவற்றதில் உருவத்தையும் எல்லையற்றதில் எல்லையையும், காணும் வேதாந்த வரம்பிற்குள் ஜீவன தேவதை அடங்கும் என்பது உண்மையே; தாகூர் பாடுகிறார்:

"தூரத்துக்கும் தூரமானவனே! மிக மிக நெருங்கியவனே! எங்கு நீ அருகில் இருக்கிறாயோ அங்கு நீ என்னுடையவன். எங்கு நீ தூர இருக்கிறாயோ அங்கு நான் உன்னுடையவன்.

"உன்னுடைய மங்களகரமான மந்திரம் இரகசியக் குரலில் ஒவ்வொரு ஜாமமும் என் உள்ளத்தின் உட்புறமெல்லாம் ஒலிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பக்கத்தில் நீ ஆத்மாவாகிய நதியின் கர்மக் கரையாக இருக்கிறாய்."

"தூரத்தில் நீ எல்லையற்ற கம்பீரமான சாந்தக் கடலாக இருக்கிறாய்."

தமது மானஸீகத் தெய்வத்துடன் தாகூர் உரையாடும் முறையிலே அவரது வேதாந்த அடிப்படை வேற்றுமையில் ஒற்றுமை காணும் மனோபக்குவம் தெரிகிறது. பாரதியார் காளியிடம் வரம் கேட்கும் பாடல்கள் பல இருக்கின்றன. ஆனால் தாகூரின் ஜீவன தேவதைக்கும் தாகூருக்கும் காணப்படும் நெருங்கிய இதயத் தொடர்பு பாரதியாருக்கும் காளிக்கும் இருக்கவில்லை, இருக்க முடியாது.

வேதாந்த வட்டத்திற்குள் விரிந்த கவியுள்ளங்களைப் பார்த்த கண்ணோட்டத்தில் மனித வாழ்க்கையின் வளர்ச்சி பற்றி இரு கவிஞர்கள் கொண்டிருந்த கருத்துக்களை இனி கவனிப்போம்.

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகள் ஆசியாவிலே பெருமளவில் முதலீடு செய்தன; முதலீடு செய்வதற்காகவே 'நாடு பிடிக்கும்' தேவையும் கைக்கொள்ளப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் தொடங்கிய இந்தக் காலத்தில் ஏகாதிபத்தியம் திட்டவட்டமான வடிவமும் வலுவும் பெற்றது எனக் கூறலாம். வெள்ளைக்கார முதலாளிகள் பெருமளவில் ஆசிய நாடுகளில் பரவ வழி செய்து விட்டனர். பொருளாதார அபிவிருத்தியும் தொழில் நுட்ப யந்திர அறிவும் பிரிக்க முடியாதன. கல்கத்தா, பம்பாய், ஷாங்ஹாய் முதலிய நகரங்களில் யந்திரக் கலையைப் புகட்டும் கல்லூரிகளை ஸ்தாபித்தனர். ஆளும் வர்க்கத்தினர், 'யந்திரப் புரட்சி' ஒரு நாட்டில் ஏற்படும்போது அதன் பொருளாதாரத் துறையில் மட்டுமின்றிச் சமூக, கலாசாரத் துறைகளிலும் பாரதூரமான மாறுதல்கள் ஏற்படுகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவிலும் இந்த மகத்தான மாறுதல்கள் நிகழலாயின. வேதாந்த தத்துவார்த்த அடிப்படையில் இந்துமத மறுமலர்ச்சியும் சீர்திருத்தமும் ஏற்படத் தொடங்கின என்று நாம் கூறும் பொழுது பொருளாதாரத் துறையிலும் இந்திய மக்களிடத்து (மத்திய தர வர்க்கத்தினர்) மாறுதல்கள் உண்டாக்கின என்பதை மறந்து விடலாகாது. 1870 ஆம் ஆண்டளவில் பம்பாயிலும் கல்கத்தாவிலும் கைத்தொழில்கள் தொடங்கப் பெற்றுவிட்டன. 1874-ம் ஆண்டில் பம்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரில் மாத்திரம் 28 பருத்தி ஆலைகள் நிறுவப்பட்டிருந்தன. வங்காளத்தில் 15 ஆலைகள் இயங்கிக் கொண்டிருந்தன. 1870-ம் ஆண்டில் இந்தியா லட்சம் பவுன் பெறுமதி யான யந்திரச் சாதனங்களை இறக்குமதி செய்தது. 1875-ம் ஆண்டளவில் 15 இலட்சம் பவுன் பெறுமதியான யந்திரத் தளவாடங்கள் இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப் பட்டன. கைத்தொழில்களின் துரித வளர்ச்சியை இது எடுத்துக் காட்டுகிறதல்லவா? ஆரம்ப காலத்திலே கைத் தொழில்கள் யாவும் வெள்ளையர்களின் உடமையாக இருந்தாலும் யந்திர சகாப்தத்தின் தாக்கத்தை இந்திய மக்களிடத்திலும் காணக் கூடியதாக இருந்தது.

## அசுர வேகத்தில் யந்திரப் புரட்சி

யந்திரங்கள் இந்தியக் கலாச்சார அமைப்பில் ஏற்படுத் தும் மாற்றங்களைப் பலர் எதிர்த்தனர். மகாத்மா காந்தி போன்ற அரசியல் துறை ஞானியும் எதிர்த்தார்! ஆனால் அவர்களின் எதிர்ப்பை இந்தியாவோ உலகமோ பொருட் படுத்தவில்லை. அசுர வேகத்தில் இன்று வரை இந்தியாவிலே 'யந்திரப் புரட்சி' நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தொழில் வளர்ச்சியும் யந்திரங்களும் இன்றைய உலகின் தவிர்க்க முடியாத இயக்க சாதனங்கள், அவற்றை அணுகியதில் தாகூரும் பாரதியாரும் வெவ்வேறு கருத்துச் சாயைகளைக் காட்டுகின்றனர்.

**'கைத் தொழில் போற்று'** என்றும், **கூடித் தொழில் செய்** என்றும் புதிய ஆத்திசூடியிலே எழுதியுள்ளார் பாரதியார். **பாரத தேசம்** என்ற பாடலிலே எத்தனையோ தொழில் களைப் போற்றிப் பாடுகிறார் அவர்.

**'பட்டினில் ஆடையும், பஞ்சில் உடையும்?**
**பண்ணி மலைகளென வீதிகுவிப் போம்;**
**கட்டித் திரவியங்கள் கொண்டுவரு வார்;**
**காசினி வணிகருக்கு அவை கொடுப்போம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயு தம்செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்;
ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம்;

.................................................................................

குடைகள் செய்வோம், உழுபடைகள் செய்வோம்;
கோணிகள் செய்வோம், இரும்பாணிகள் செய்வோம்;
நடையும் பறப்பு புணர் வண்டிகள் செய்வோம்;
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்;
மந்திரங்கற் போம், வினைத் தந்திரம் கற்போம்;
வானையளப் போம் கடல் மீனையளப்போம்;
சந்திரமண் டலத்தியல் கண்டு தெளிவோம்;
சந்தி, தெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம்;

என்று தொழிலுக்கு வந்தனை செய்கிறார் கவிஞர் பாரதியார். புதிய இந்தியாவிலே கைத்தொழில் பெருக்கம் இருக்க வேண்டும் என்று கனவு கண்டவர் கவிஞர். இன்று ரஷ்யாவும் அமெரிக்காவும் சந்திர மண்டலத்தை நோக்கி ஏவிவிடும் ராக்கட்டுகளைப் பாடியது போல சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம் என்று இலட்சியமான கனவு கண்டார் பாரதியார். பொருளாதார அடிப்படையில் இவற்றைக் கனவு கண்டார் பாரதியார் எனக் கொள்ள முடியா விட்டாலும் தொழிலும், தொழில் செய்யும் யந்திரங்களும் அவற்றை இயக்கும் மனிதரும் செழித்து வளர வேண்டும் எனக் கவிஞர் ஆசைப்பட்டார் என்பதில் ஐயமில்லை. கவிஞருக்கே இயல்பான முறையில் எதிர் காலத்தைப்பற்றிக் 'குறி' சொல்கிறார் பாரதியார் **புதிய கோணங்கி** என்ற பாட்டில்.

## குறி சொல்லும் தமிழ்க் கவிஞர்

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
நல்லகாலம் வருகுது; நல்லகாலம் வருகுது

.................................................................................

வேத புரத்திலே வியாபாரம் பெருகுது;
தொழில் பெருகுது; தொழிலாளி வாழ்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சாத்திரம் வளருது; சூத்திரம் தெரியுது
யந்திரம் பெருகுது; தந்திரம் வளருது;
எட்டு லட்சுமியும் ஏறி வளருது;
..........................................................................
சொல்லடி சொல்லடி மலையாள பகவதி!'

என்று பாடுகிறார் பாரதியார். யந்திரங்களையும், தொழில் வளர்ச்சியையும், தொழிலாளியையும் எத்தகையப் பேரானந்த உணர்ச்சியோடு கவிஞர் மனதாரத் தழுவினார் என்பதை நாம் நன்கு கவனித்தல் வேண்டும். தொழில் என்னும் கவிதை பாரதியைத் தலையாய நவயுகக் கவிஞர்களில் ஒருவராக உயர்த்தி வைத்துவிட்டது.

'இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே!
யந்திரங்கள் வகுத்திடுவீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடுவீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப்பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடுவீரே!
பெரும்பு கழ்நுமக் கேயிசைக்கின்றேன்
பிரமதேவன் கலையிங்கு நீரே!

என்றும்,

விண்ணி னின்றேமை வானவர் காப்பார்!
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே

என்றும்,

தேட்டமின்றி விழியெதிர் காணும்
தெய்வமாக விளங்குவிர் நீரே

என்றும் தொழிலாளர்களைப் பாடியுள்ளார் பாரதியார். சமய அடிப்படையில் எதனையும் நோக்கும் பாரதியார் தொழிலாளர்களைப் பிரமதேவனின் பிரதிநிதிகள் என்றும் விழியெதிர்க் காணும் (கண் கண்ட) தெய்வம் என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்மிசைக் காப்பவர் என்றும் கூறுவதில் வியப்பெதுவு மில்லையல்லவா? பாரத நாடு மகாசக்தியாக மாறக்கூடு மாயின், பாரத மாதாவின் புத்திரர்கள் ஏன் தெய்வ புருஷர் களாக இருக்க முடியாது? கவிஞனது உள்ளத்தில் இடம் பெறும் இரஸவாதம் இது.

## கைத்தொழில் பற்றி பாரதி

பொதுவாக நாடு கைத்தொழில் மயமாக வேண்டும் என்று பாரதியார் விரும்பினார் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. சுதேசக் கப்பல் ஓட்டிய வ. உ. சி. ஆயுத பலத் தால் வெள்ளையரை விரட்ட வேண்டும் என்று ஒரு காலத் தில் வ. வே. சு. ஐயர் முதலியோருடன் நெருங்கிப் பழகிய பாரதியார் யந்திரங்களையும், தொழில் துறையிலே ஈடுபட் டுழைத்தவர்களையும் நேசித்தார். 1916-ம் ஆண்டு பாரதியார் எழுதிய **புதிய உயிர்** என்னும் கட்டுரையிலே பின்வரும் வாசகம் காணப்படுகிறது.

''மேன்மை நிலைபெற வேண்டுமானால் கைத் தொழில்கள் பெருகும்படி செய்யவேண்டும்; சாத்தியமில்லை யென்று சொல்லி ஏங்குவதிலே பயனில்லை. எப்படியேனும் செல்வத்தை வளர்க்க வேண்டும். சோம்பேறியாக ஒருவன் நிறையப் பணத்தைக் குவித்து வைத்துக்கொண்டு அக்கம் பக்கத்து ஜனங்கள் பட்டினி கிடந்து சாவதைப் பார்த்துக் கொண்டிருப்பது மிகவும் கொடிய பாவம்; கைத்தொழில் களும் வியாபாரங்களும் ஏற்படுத்தி அக்கம் பக்கத்தாரிடம் சரியானபடி வேலை வாங்கிக்கொண்டு சரியானபடி கூலி கொடு. ஸகல ஜனங்களுக்கும் வயிறு நிறைய உணவு கிடைக்காத ஊரில் வாழும் செல்வர்களெல்லாம் திருடர், அங்கே குருக்களெல்லாம் பொய்யர்.''

என்று உணர்ச்சிபூர்வமாகக் கைத்தொழில் பெருக்கத் தின் அவசியத்தைப் பற்றியும் மக்களின் உழைப்புத் தேவையைப் பற்றியும் பாரதியார் அற்புதமாக எழுதி யுள்ளார். தேசத்தின் அரசியல் விடுதலைக்காகப் போரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் அதே சமயத்தில் பொருளாதார மேம்பாட்டிற்காகவும் உழைக்க வேண்டும் என்றும் கருதினார் பாரதியார். 1916-ம் வருடம் பெப்ரவரி மாதம் பாரதியார் **ஜப்பான் தொழிற் கல்வி** என்றொரு கட்டுரை எழுதியுள்ளார். அதில் ஓரிடத்தில் பின்வருமாறு கூறுகிறார்.

"கூடியவரை பிள்ளைகளை ஜப்பானுக்கு அனுப்பிப் பலவிதமான தொழில்களும் சாஸ்திரங்களும் கற்றுக் கொண்டு வரும்படி செய்வதே பிரதான உபாயமாகும். தொழிற் கல்வியிலும், லௌகிக சாஸ்திரப் பயிற்சியிலும் நாம் மற்ற ஜாதியாருக்கு ஸமானமாக முயலுவது அவசரத்திலும் அவசரம்.... ஆஹாரத்திற்கு வழிதேட வேண்டும். அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறார்கள் (காங்கிரஸ் சபை); நியாயந்தான். அது கிடைக்கும் வரை பிழைத்திருக்க வேண்டுமே!.... கைத்தொழில் வளர்ச்சிக்காக உழைப் போரும் உண்மையான தேசபக்தரே யாவர்!"

தேசியத்தின் முரசொலியான பாரதி அரசியல் விடுதலையை எவ்வளவு பரந்த அடிப்படையில் பார்த்தார் என்பது இந்தக் கூற்றிலிருந்து புலனாகிறதல்லவா?

## யந்திரங்கள் பற்றி தாகூர்

யந்திரங்களை அணுகிய விதத்தில் மகாகவி தாகூர் பாரதியாருக்கு நேர் முரணான கருத்தைக் கொண்டிருந்தார் என்று கூறலாம். இயற்கையின் மடியிலே பிறந்து, வளர்ந்து மடிந்த கவிஞர் தாகூர் யந்திரங்களையும், புகையும் அனலும் கக்கும் இராட்சஸ ஆலைகளையும் செயற்கையானவை—இயற்கையின் அமைதிக்கு முரணானவை என்று கருதியது இயல்பே. அமெரிக்காவில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவுகளில் ஒன்று **'இந்தியாவிலே தேசியம்'** என்பது. அதில் ஓரிடத்திலே தாகூர் பின்வருமாறு கூறுகிறார்:

இன்று உலகில் காணப்படும் பெரிய கைத்தொழில் ஸ்தாபனங்களிலே எனக்கு நம்பிக்கையில்லை. அவை குரூப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக இருப்பதே சிருஷ்டியமைப்புக்கு முரணாக இருக்கின்றன என்பதைக் காட்டுகிறது. இயற்கையின் மகத்தான சக்தியானது பயங்கரத்தில் தோற்றமளிப்பதில்லை. அழகிலேயே காட்சி தருகிறது. யந்திர நாகரிகமானது இன்பத்தைப் பலியிட்டுப் பணத்தைத் திரட்டுகிறது. தான் நிறுவும் (யந்திர) கருவிகளுக்கு அதிகபட்ச இடமளிப்பதற்காக மனிதன் தனது மனிதப் பண்பைக் குறைந்தபட்ச அளவு ஒடுக்கிக் கொள்கிறான். மனித உணர்ச்சிகள் யந்திரங்களை இலகுவில் ஏற்க மறுப்பதால்—யந்திரங்களின் பாதையை மறிப்பதால்—அந்த நல்லுணர்ச்சிகளை ஏளனம் பண்ணுகிறான் மனிதன்.''

இவ்வாறு கூறுகிறார் இரவீந்தர். உலகப் பிரஜையாக—கிழக்கையும் மேற்கையும் தழுவிய மனிதனாக விளங்க முயன்ற தாகூர் மேற்கத்திய நாகரிகத்தை வெறுத்தாரென்றால் அதற்குக் காரணம் யந்திர நாகரிகத்தின் கோர விளைவுகளே என்பதில் ஐயமில்லை. ஆனால், அதற்காகத் தாழ்வுற்று வறுமை மிஞ்சிய தனது தாய்நாட்டில் யந்திரங்கள் அறவே வேண்டாம் என்று கூற அவர் தயங்காதது தான் ஆச்சரியமாக இருக்கிறது. ''இன்றைய யுகத்தில் மனிதனுக்கும் மனிதனுக்கும் போட்டி-முரண்பாடு—மோதல்—இல்லை. மனிதனுக்கும் யந்திரத்திற்குமே முரண்பாடு இருக்கிறது என்று பிறிதோரிடத்தில் தாகூர் கூறுகிறார். மேற்கத்திய நாகரிகம் அரசியல் பலத்தின் அடிப்படையிலும், கீழைத்தேய நாகரிகம் சமூக உறவின் அடிப்படையிலும் உருப்பெற்றவை என்பது தாகூரின் நம்பிக்கையென்பதை முன்பு கவனித்திருக்கிறோம். அந்த அசைக்க முடியாத நம்பிக்கையின் விளைவாகத் தாகூர் யந்திரங்களை வெறுத்தார் என்பது தெளிவாகிறது. மேற்கத்திய நாகரிகத்தை இயந்திர நாகரிகமாக ஒரு கணம் கொள்ளும் தாகூர் அடுத்த கணம் அந்த ஒரு தலைச் சார்பிலிருந்தும் தப்பித்துக் கொள்கிறார். மேற்கத்திய நாடுகள் தமது மனிதனைக் கிழக்கிற்கு அனுப்பாமல் யந்திரங்களை அனுப்பி வைத்துள்ளன என்றும் அதன் காரணமாகவே கிழக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கும் இணைந்து போவது கடினமாக இருக்கிறது என்றும் தாகூர் வேறோர் இடத்திலே கூறுகிறார்:

"கிழக்கிற்கும் மேற்கிற்குமிடையில் உள்ள சில வேறுபாடுகளைக் கண்ட மேனாட்டுக் கவிஞர் (ரட்யார்ட் கிப்ளிங் 1865—1936) 'கிழக்கு கிழக்குதான்; மேற்கு மேற்குதான். இவையிரண்டும் ஒரு காலமும் இணைய முடியாது' என்றார். இவை சந்திப்பதற்கான நல்ல அறிகுறிகள் காணப்படவில்லை என்பது உண்மையே! ஆனால் அதற்குக் காரணம் (இதுவரை) மேற்கு நாடுகள் தமது மனிதரைக் கீழைத் தேயங்களுக்கு அனுப்பி வைக்கவில்லை. அதற்குப் பதிலாகத் தமது யந்திரங்களையே அனுப்பி வைத்துள்ளன. எனவே கவிஞரது அடிகளை சற்று மாற்றியமைக்க வேண்டும். மனிதன் மனிதன் தான், யந்திரம் யந்திரம்தான்; இவ்விரண்டும் எப்போதும் இணைய முடியாது."

இவ்வாறு தனது உள்ளத்து முரண்பாட்டிற்குச் சமாதானம் தேடிக் கொண்டார் தாகூர்.

## மகாகவிகளின் கருத்து வேற்றுமை

இந்த இடத்திலே நாம் இரு மகாகவிகளுக்குமிடையில் காணப்படும் கருத்து வேறுபாட்டிற்கு இன்னொரு தக்க காரணத்தையும் மனங்கொள்ள வேண்டும். பாரதியார் முதலாவது உலக யுத்தத்தை மட்டும் பார்த்தவர்; தாகூரோ இரண்டாவது உலக யுத்தத்தின் முற்பகுதியையும் கண்டவர்; மேற்கத்திய நாடுகள் அடிக்கடி போரிடுவதற்குப் போட்டியும் பொறாமையுமே காரணம் என்றும் அது யந்திர நாகரிகத்தின் விளைவென்றும் அவர் கண்டார்; நம்பினார். **'மனித நாகரிகத்தின் நெருக்கடி'** என்ற தனது இறுதி நூலிலே யுத்தங்களின் நாசத்தன்மைப் பற்றி அவர் பயங்கரமாகச் சித்தரித்திருக்கிறார். உலகம் சுற்றி அவர் யந்திர நாகரிகத்தின் விளைவுகளை நேரடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகக் கண்டார் என்பதிலும் ஐயமில்லை. ஜப்பான் தேசத்திலே தொழிற் கல்வி துரித வளர்ச்சியடைவது பற்றி நூல்களில் படித்துப் பிறர் சொல்லக் கேட்ட பாரதியார் இந்திய இளைஞர்கள் அங்கு சென்று தொழில் நுட்பத் திறமை பெறவேண்டும் என்று 1916-ல் எழுதினார். ஆனால் ஜப்பானுக்கு பல தடவைகள் பிரயாணஞ் செய்த தாகூர் பிற்காலத்தில் பின்வருமாறு கூறினார்:

''இப்போது ஜப்பானிய நாகரிகத்தைப் பயமுறுத்தும் மாறுதலை நான் எனது சரீரத்துக்கு நேரும் பயம்போல அஞ்சுகிறேன். ஏன்? கார்ய லாபத்தையே பொதுத் தளையாக உடைய நவீன காலத்தில், வேறுபாடுகள் மௌன சௌந்தர்யத்திற்கும் மறைந்த சக்திகளுக்கும் எதிரே, பரிதபிக்கும்படியாகத் திறந்து கிடக்கும் கோலத்தை ஜப்பானில் காண்பது போல் அத்தனை தெளிவாகப் பிற இடங்களிலே காண்பதரிது.''

என்று ஜப்பான் நவீன மயமானதைக் கவலையுடன் கண்டார் தாகூர். முற்காலத்தில் ''ஜப்பான் மானுடச் செல்வமெல்லாம் நிறையப் பெற்றிருந்தது. இப்பொழுதோ 'மானுட இரத்தத்தைக் குடிக்கும் சாத்தானுடைய நாய்களை ஐரோப்பிய நாய்க் குகைகளிலேதான் வளர்க்கலாமென்பதில்லை. ஜப்பானிலும் அவற்றைக் குடியேற்றி மனிதத் துன்பங்களை இரை போட்டு வளர்க்க முடியும்' என்பதை நிரூபணம் செய்துவிட்டது'' என்று மனம் குமைந்து கூறினார். ஜப்பான் யந்திர மயமான உற்பத்தி முறையையும் வாணிபத்தையும் மேற்கொண்டதையே தாகூர் இவ்வாறு கண்டிக்கிறார் என்பது தெளிவாகிற தல்லவா?

## மனிதனும் யந்திரமும்

கைத்தொழில் வளர்ச்சி பற்றித் தாகூருக்கும் பாரதியாருக்குமிடையே காணப்படும் கருத்து வேறுபாட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுணுக்கமாகக் கவனிக்கும்போது, தாகூரினும் பார்க்கப் பாரதியார் இந்திய தேசியத்தை நன்குணர்ந்தார் என்று கூறத் தோன்றுகிறது. இந்திய தேசியமானது இந்தியக் கைத்தொழில் பெருக்கத்துடன் கைகோத்து வளர்ந்த தொன்று என்பதையும், பழைய நிலப்பிரபுத்துவத் தளை களை உடைத்தெறிய அது உதவும் என்பதையும் தாகூர் அறிந்தோ அறியாமலோ ஏற்றுக்கொள்ளவில்லை. யந்திரங் களைத் தாகூர் அறிவின் அடிப்படையில் நிராகரிக்க வில்லை, உள்ளுணர்வு காரணமாகவே நிராகரித்தார். அதேபோலவே பாரதியார் யந்திரத் தொழில் வளர்ச்சியை உள்ளுணர்வு காரணமாக வரவேற்றார். இருவருமே விஞ்ஞான ரீதியாகப் பிரச்சினையைப் புரிந்து கொள்ள வில்லை. பேராசிரியர் டி. பி. முகர்ஜி ஓரிடத்தில் கூறுவதைப் போல மனிதனுக்கும் யந்திரத்திற்கும் முரண்பாடு இருக் கிறது என்று கூறிய போது அவர் பொதுப்படையாகவே கூறியுள்ளார். யந்திரங்கள் உலகில் இருப்பதல்ல தொல்லை களுக்குக் காரணம். அவை ஒரு சிலரின் உடைமையாக இருப்பதே தாகூர் கண்டு அஞ்சிய போட்டி, பொறாமை, தன்னலம், யுத்த ஓநாய்களின் வெறியாட்டம் முதலிய வற்றிற்கெல்லாம் அடிப்படைக் காரணமாகும். தாகூர் யந்திரங்களையே அடியோடு நிராகரித்தார்; பாரதியார் அவற்றைப் போற்றினார்; அது மட்டுமல்ல. தனது வேதாந்த அடிப்படைக்குள் அமைந்த அளவு சமத்துவம், வேலைக்கேற்ற கூலி முதலியனவற்றையும் வற்புறுத்தினார்.

இரு மகாகவிகளின் பொருளாதார ஞானம் ஒருபுற மிருக்க, அவர்கள் வழிபட்ட வெவ்வேறு தெய்வங்களும் யந்திரங்கள்பற்றி இருவரும் கொண்ட மாறுபட்ட கருத்துக் களுக்குக் காரணமாயிருந்தன எனக்கொள்ளலாம் என நான் நினைக்கிறேன்.

## இஷ்ட தெய்வம் வகுத்த பாதை

வலிமை, இருள், பயங்கரம், சப்தம், அமைதி, அழகு, இயக்கம் பல பண்புகள் கலந்து உலகத்திலே 'யாவுமாகிய'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

—பராசக்தியை—மாகாளியை கறுப்புத் தெய்வத்தை வழிபட்டார் பாரதியார். அவரது மனோ நிலையில் யந்திரங்கள் அருவருப்பானவையாகவோ குரூபமானவை யாகவோ தோற்றத்தில் வியப்பில்லை. எமில் வேர்ஹேரன் (Emil Verheren 1855-1916) என்ற பெல்ஜியம் தேசத்துக் கவிஞரை பற்றிப் பாரதியார் எழுதியுள்ள கட்டுரை யொன்றிலே (உல்லாச சபை-மார்ச் 1916) இதற்கு சான்று காணலாம். பாரதியார் கூறுகிறார்:

"வலிமை ஓர் அழகு, அழகு ஒரு வலிமை. யந்திர ஆலை, நீராவி வண்டி, நீராவிக் கப்பல், வானத்தேர், பெரிய பீரங்கி எல்லாம் அழகுதான். உயர்ந்த கவிகள் வலிமையுடைய பொருள்களை அவ்வக்காலத்தில், வழங்கிய வரையிலே வர்ணனை செய்துதான் இருக் கிறார்கள், இதிலே புதுமையொன்றுமில்லை, வலிமைக் கருவிகள் இப்போது சில புதுமையாகத் தோன்று கின்றன. இவற்றை ஐரோப்பியக் கவிகள் விலக்கி வைத்தது பிழை. ஆனால் பழைய தெய்வத்தையும் இயற்கையையும் மறந்து யந்திரங்களைப் பாடத் தொடங்கினால் கவிதை செத்துப் போய்விடும்."

என்று கூறும் பாரதியார் எமில் வெர்ஹேரனது கவிதா சித்தாந்தத்தையும் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

"வலிமையே அழகு; ஒரு பொருளின் வெளியுரு வத்தைப் பார்த்து அது அழகா இல்லையா என்று தீர்மானம் செய்யலாகாது. யந்திரங்களிலே வலிமை நிகழ் கின்றது. ஆதலால் அவை அழகுடையன. அவற்றைக் கவி புகழ்ச்சி செய்தல் தகும்."

பிற நாட்டுக் கவிஞர் ஒருவரது கருத்தைக் கூறியது மட்டுமின்றி அதனைத் தனதாக்கிக் கவிதையும் பாடிச் சென்றுள்ளார் பாரதியார். அதற்குக் காளி வழிபாடு வழி வகுத்தது; உதவியும் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவன தேவதை என்ற உருவமற்ற, அரூபமான அதே வேளையில் தாகூரின் மனதை நிறைத்த கற்பனாமயமான —மென்மையான இன்பமயமான—இஷ்ட தெய்வம் யந்திரங்களின் அவலட்சணத்தையும், அருவருப்பையும் காண வைத்தது என்று கூறலாம். சாந்தி நிகேதனத்தின் அமைதியான வன உலகச் சுற்றாடலில் வாழவிரும்பிய கவிஞர், அழகையும் அமைதியையும் தெய்வாம்சமாக வழிபட்ட தாகூர் பாரதியைப் போல வலிமையும் பயங்கரமும் பொருந்திய யந்திரங்களை நேசிக்க முடியவில்லை. ஆனால் யந்திர நாகரிகத்தின் நாச விளைவுகளைக் கண்ணாரக் கண்டு நொந்த கவியுள்ளத்துடன் கூவியதில் பாரதியை விடத் தாகூர் சிறந்து விளங்குகிறார். ஆனால் ஜப்பான், ஸ்பெயின், இத்தாலி, ஜெர்மனி முதலிய தேசங்களில் பாசிஸமும், தேசிய சோஷலிஸமும் வளருவதற்கு முன் பாரதியார் இறந்துவிட்டார் என்பதையும் நாம் மறந்து விட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியார் எத்தனையோ இலக்கிய வகைகளைப் படைத்திருக்கிறார் கட்டுரைகள், சிந்தனைச் சிதறல்கள், குட்டி நாடகங்கள், சிறுகதைகள், நாவல்கள், மொழிப்பெயர்ப்புகள், கவிதைகள் என்றெல் லாம் அவர் பேனா ஓய்வொழிவின்றிப் படைத்துக்கொண் டிருந்தது. எனினும் மகாகவி என்னும் அடையே அவருக்கு நீங்காத புகழைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. பாரதியார் என்று கூறும்போது மக்கள் அமரகவி பாரதியாரையே எண்ணிக்கொள்கின்றனர். தனது காலத்தின் தலையாய கவிஞராகவே பாரதியார் இலக்கிய வரலாற்றில் இடந் தேடிக்கொண்டுள்ளார். இதில் வியப்பெதுவுமில்லை. பாரதி யாரும் தமது கவிதைகளையே உன்னதமான படைப்புக் களாகக் கொண்டார். 1919-ம் ஆண்டு மே மாதம் 2-ம் தேதி எட்டயபுரம் மகாராஜாவிற்குப் பாரதியார் அனுப்பிய ஓலைத்தூக்கில் (சீட்டுக்கவி) பாரதியாரின் இந்த நம்பிக் கையை நாம் காணலாம். சம்பிரதாய பூர்வமாக அமைந் துள்ள அந்தச் சீட்டுக் கவியில் ஓரிடத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்:

**புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்**
**தமிழ் மொழியைப் புகழிலேற்றும்**
**கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்**
**வசையென்னாற் கழிந்ததன்றே!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சுவைபுதிது; பொருள் புதிது; வளம் புதிது,
சொற்புதிது, சோதிமிக்க
நவகவிதை, எந்நாளும் அழியாத
மகாகவிதை' என்று நன்கு.

"பிரான்ஸென்னும் சிறந்த புகழ்நாட்டிலுயர்
புலவோரும் பிறருமாங்கே
விராவுபுக ழாங்கிலத்தீங் கவியரசர்
தாமுமிக வியந்து கூறிப்

"பரவியென்றன் தமிழ்க்கவியை மொழிபெயர்த்துப்
போற்றுகின்றார்; பாரோரேத்துந்
தராதிபனே! இளசை வெங்கடேசு ரெட்டா!
நின்பால்அத் தமிழ் கொணர்ந்தேன்!

என்று பாடிய பாரதியார் தமது படைப்புக்களில் கவிதை களையே சிறந்தவையாகக் கொண்டார் என்பதற்கு வேறு பல சான்றுகளும் உள்ளன. 'பாரதி' என்னும் பட்டத்தைப் பதினோராவது வயதிலேயே பெற்றுவிட்ட பாரதியார் "தமது ஏழாவது பிராய முதல் அருமையான தமிழ்க் கவிகளை விளையாட்டாக வரைந்து கவனஞ்" செய்தார் என்று கவிஞரின் இளமை காலத் தோழரான நாவலர் சோமசுந்தர பாரதியார் கூறியுள்ளார்.

இவ்வாறு கவிதா வாழ்க்கைக்கென்றே தன்னை அர்ப் பணித்துக் கொண்ட கவிஞர் பாரதியார் கவிதையைப் பற்றி யும், கவிதைக் கலையைப் பற்றியும் அதிகம் எழுதினா ரல்லர். தமது குறுகிய வாழ் நாளில் 'முன்னிக் கவிதை வெறி மூண்டே நன வழியப் பட்டப்பகலில் பாலலர்க்குத் தோன்று வதாம் நெட்டைக் கனவு' களாகப் பாடிய பாரதியார், ஆற அமர இருந்து கலைகளுக்கு அரசியாம் கவிதை பற்றி எழுத அவகாசம் பெற்றாரல்லர். தமது கவிதை பற்றியோ, பொதுவாகக் கவிதை பற்றியோ, பாரதியார் எழுதியவை அருகியே காணப்படுகின்றன. அவர் பூரணமான கவிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார் என்பது எமக்குத் தொழில் கவிதை, என்று தொடங்கும் அவரது பாட்டா லேயே தெரிகிறது.

## தனிப்பாடல்கள் பாடிய கவிஞர்

வள்ளுவர், இளங்கோ, கம்பன், சேக்கிழார் முதலிய பெருங் கவிஞர்கள் வரிசையில் வந்த பாரதியார் காப்பியம் எதுவும் இயற்றவில்லை. காப்பியம் தோன்றக்கூடிய காலத்திலும் அவர் தோன்றி வாழவில்லை. இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்திய மக்கள் சமூக, அரசியல் நிறுவனங்களைக் கண்ட சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்கள் காதலையும் வீரத்தையும் உணர்ச்சி செறிந்த தனிப் பாடல்களாகப் பாடியது போல, சைவ, வைணவ, பௌத்த, சமண தத்துவங்களுக்கிடையே மோதல் நிகழ்ந்த பல்லவர் காலத்தில் வாழ்ந்த செஞ்செற் புலவர்கள் சமயவாதப் பிரதி வாதத்தையும் பக்தியையும் உருக்கமிக்க தனிப்பாடல் களாகப் பாடியதுபோல, மகத்தான மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்காலத்தே வாழ்ந்த பாரதியார் வாழ்க்கையின் பல்வேறு பிரச்சினைகளையும் அம்சங்களையும் தனித்துவம் பெற்ற தனிப்பாடல்களாகப் பாடியுள்ளார். இது வரலாற்றுண்மை மட்டுமன்றிக் கவிதா உண்மையுமாகும்.

தமது காலம் காவியங்களுக்கு ஏற்ற காலம் அன்று என்பதைப் பாரதியாரே நன்குணர்ந்திருந்தார்.

''எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்தே செய்து தருவோன், நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான்; ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்க முள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரணத்துவம் தேடும் கவி உள்ளம்

பாஞ்சாலி சபதத்திற்குப் பாரதியார் எழுதிய முகவுரையிற் காணப்படுவது இந்தக் குறிப்பு, 'பாஞ்சாலி சபதம்' பாரதியார் இயற்றிய மிக நீண்ட கவிதை. அதனைக் குட்டிக் காப்பியம் என்று ஒருகால் கூறலாம். எனினும் கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகியனவற்றை முப்பெரும் பாடல்கள் எனச் சிலர் குறிப்பிட்டாலும் அவை பழைய காப்பிய மரபில் வந்தனவல்ல என்பதை நாம் மனங் கொள்வது அவசியம். பாரதியாரை உணர்ச்சி வேகக் கவி (Lyric Poet) என்றே கொள்ள வேண்டும். நீண்ட காவியங்கள் எதுவும் இயற்றாமலே உணர்ச்சிமிக்க தனிப்பாடல்களினால் மகாகவி என்னும் அந்தஸ்தைப் பெற்றுள்ளார் பாரதியார்.

காலத்தின் புத்திரரான கவிஞர் தமது காலத்து இலக்கியப் போக்கைக் கோடிட்டு வரையறை செய்துவிடுகிறார். இது மகா கவிகளுக்குரிய முக்கிய பண்புகளிலொன்றாகும். காலத்துக்குக் காலம் மக்கள் கூட்டத்தினரின் சமுதாய மதிப்பீடுகள், சிந்தனைகள், நம்பிக்கைகள் மாறுகின்றன. அவை அப்படி மாறும்போது நிரந்தரமான சில உண்மைகளுக்கிணங்க வாழ்க்கைப் பொருளை விளக்கி வரைவிலக்கணம் சமைப்பது மகாகவியின் பொறுப்பாகிறது. அந்த மகத்தான பொறுப்பைத் தமது உணர்ச்சி வேகமிக்க தனிப்பாக்களால் செய்து முடித்துள்ளார் பாரதியார். பூரணத்துவத்தைத் தேடித் துடிக்கிறது கவி உள்ளம். தன்னைத்தானே அறிந்துகொள்வதன் மூலம் தனது காலத்தையும் தனது சமூகத்தையும் உணர்ந்துகொள்கிறான் கவிஞன். பாரதியின் கவிதைகளிலே இந்தப் பண்பினையே நாம் தெளிவாகக் காண்கிறோம். கவிதையே கவிஞனின் கருவியும் படைப்புமாதலின் கவிதைப் பற்றிக் கவிஞனது கருத்து முக்கியமானதாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாகவி கம்பனை நன்கு கற்ற பாரதி

"....நெடுங்காலத்துக்கு முன்னே எழுதப்பட்ட நூல்கள் அக்காலத்தில் பாஷையைத் தழுவினவை. காலம் மாற மாற பாஷை மாறிக்கொண்டு போகிறது. பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றது. புலவர் அந்த அந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக் கூடிய பதங்களையே வழங்க வேண்டும். அருமையான உள்ளக் காட்சிகளை எளிமைகொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை....நமது கவிதையிலே ஆனந்தம் குறையத் தொடங்கிற்று; ருசி குறைந்தது; கரடுமுரடான கல்லும் கள்ளிமுள்ளும் போன்ற பாதை நமது கவிகளுக்கு நல்ல பாதையாகத் தோன்றலாயிற்று. கவிராயர் 'கண்' என்பதை 'சக்கு' என்று சொல்லத் தொடங்கினார். ரஸம் குறைந்தது. சக்கை அதிகப்பட்டது. உண்மை குறைந்தது; பின்னல் திறமைகள் அதிகப்பட்டன."

என்று **புனர்ஜன்மம்** என்ற கட்டுரையிலே பாரதியார் குறிப்பிட்டுள்ளார். மகாகவி கம்பனை நன்கு கற்ற பாரதியார் கவிதைக்குரிய பொது இலக்கணத்தை அவனிடமிருந்து பெற்றுக்கொள்கிறார். "கவிதைகளில் ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்கவேண்டுமென்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை" என்று எழுதியுள்ளார் பாரதியார்.

ஒரு கவிஞன் காலத்துக்கேற்ற வகையில் கவிதை சமைக்கிறான் என்று பொதுப்படையாகக் கூறும்போது நாம் மனதிற் கொண்டுள்ள கருத்து யாது? இதற்கு விடை கூறுமுகமாக ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். தமிழிலக்கியத்திலோ தெய்வங்களைக் கவிதைப் பொருள்களாகக் கொண்ட பல கவிஞர்களும் பெண்பாற் புலவர்களுள் நாயக நாயகி பாவத்தைக் கையாண்டுள்ளனர். ஆழ்வார்கள், நாயன்மார்கள், இராமலிங்க சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியோரெல்லாம் சிவனையும், விஷ்ணுவையும் நாயக நாயகி பாவத்தில் வழிபாட்டுப் பாமாலையும் புனைந் துள்ளனர். அதைப்போலவே பிள்ளைத் தமிழ், உலா முதலிய பிரபந்தங்களில் தெய்வங்களைப் போற்றிப் பாடியவர்கள் குழந்தையாகவும் வீரனாகவும் கடவுளைக் கண்டுள்ளனர். இத்துறையில் எண்ணிறந்த கவிதைகள் தமிழில் உள்ளன. எனினும் இதே முறையை அனுசரித்துக் கண்ணனைத் தாயாகவும், தந்தையாகவும், எஜமானனாக வும், குருவாகவும், தோழனாகவும், சேவகனாகவும், நாயகனாகவும், நாயகியாகவும் பாவித்துப் பாரதியார் பாடிய பின்னர், இப்பொழுது அப்பழைய இலக்கியங்களைப் பாரதியின் படைப்புக்கள் என்னும் அளவுகோல் கொண்டே நாம் பார்க்கின்றோம். நூல் வெளிவந்த காலத்தில் கண்ணன் பாட்டிற்கு முன்னுரை எழுதிய இலக்கிய விமர்சகர் வ. வே. சு. ஐயரே இந்தக் கண்ணோட் டத்தைத் தொடங்கி வைத்து விட்டார். பழைய வைணவ பக்தி சிரேட்டர்களின் தெய்வப் பாடல்களுடன் பாரதியின் கண்ணன் பாட்டை ஒப்பு நோக்கிப் பாரதி செய்திருக்கக் கூடிய சில குறைபாடுகள் பழைய கலைஞர்களிடம் இருந் தன என்று சமாதானம் கூடச் சமைக்கிறார் விமர்சகர் வ. வே. சு. ஐயர்.

## காவிய உலகிலே இணையற்ற சாதனை

எந்தக் கவிஞனுக்கும் தனித்த வாழ்வும் மதிப்பும் கிடையாது. அதிலும் உண்மையான—உயர்ந்த கவிஞன் ஒரு மொழியிலே தோன்றும்போது அவன் முக்காலத்தை யும் பாதிக்கிறான். உதாரணமாக, சங்க இலக்கியங்களிலே ஆங்காங்கு காணப்படும் நெய்தல் நில நாகரிகப் போக்கும். பரத்தையிற் பிரிதலாகிய மருதத்திணை ஒழுக்கமும், பல் வேறு சமயங்களின் வளர்ச்சியும் இன்னபிறவும் ஒன்று திரண்டு முழு உருப்பெற்றுப் பின்னர் தோன்றிய சிலப்பதி காரத்திலே காட்சி தந்தன. சிலப்பதிகாரம் தோன்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் சங்க இலக்கியத்தைச் சிலப்பதிகாரத்தினூடாகவே விமர்சகர் நோக்கினர். அதைப் போலவே தமிழிலே முதலில் தோன்றிய தொடர் நிலைச் செய்யுளான (காப்பியம்) சிலப்பதிகாரத்துடன் பின்வந்த காப்பியங்களை ஒப்பிட்டுப் பார்த்தார்கள் விமர்சகர்கள்—உரையாசிரியர்கள். அதைப் போலவே 'சாத்திரங்கள் கண்டறியாச் சத்தியத்தை இராமகதைப் பாத்திரங்கள் மூலம் படைத்துவிட்ட 'கம்பனுக்கீடாக அவனுக்கு முந்திய வைணவ பக்திக் கவிஞர்களையும், 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவரான' சேக்கிழார் நோக்கிலிருந்து அவருக்கு ஆதாரமாயிருந்த சிவநேயச் செல்வக் கவிஞர்களையும் எடை போடுவர் திறனாய்வாளர். அதே சமயத்தில் கம்பராமாயணம், பெரிய புராணம் ஆகியவற்றிற்குப் பின்பு தோன்றிய காப்பியங்கள் அவற்றின் அளவு கோலாலேயே அளக்கப்பட்டன. சுருங்கக் கூறின் ஒரு மகாகவி தோன்றும்போது தனது காலத்து இலக்கியங்கள் மீது மட்டுமின்றி இறந்தகாலம், எதிர்காலம் ஆகிய இரண்டின் மீதும் புத்தொளியைப் பாய்ச்சி விடுகின்றான். இவனையே கவிஞனது காலங்கடந்த பண்பு என்று விமர்சகர்கள் கூறுவர். இதுபற்றி ஆங்கிலக் கவிஞரும் விமர்சகருமான டி. எஸ். எலியட் கூறியிருப்பது மனங்கொளத்தக்கது:

"சென்ற காலத்தின் செல்வாக்கு எதையும் பெறாமல் பூரணமான புதுமைத் தனித்துவம் என்பது காவிய உலகிலே கிடையாது; ஒரு வெர்ஜில், ஒரு தாந்தே, ஒரு ஷேக்ஸ்பியர், அல்லது ஒரு கெதே பிறக்கும் போது ஐரோப்பிய இலக்கியத்தின் எதிர்காலமும் மாற்றியமைக்கப்பட்டு விடுகிறது. ஒரு மகாகவி வாழ்ந்து முடிந்ததும் காவிய உலகிலே சில கருமங்கள் ஆற்றப்பட்டு விடுகின்றன. அவற்றை மீண்டும் சாதிக்க முடியாது. அதே சமயத்தில் எதிர்காலக் கவிதை தோன்றும் சிக்கலான கவிப்பொருளுக்கும் சில மாற்றங்களை ஏற்படுத்தி விடுகிறான் மகாகவிஞன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பண்பாட்டு வரைவிலக்கணம் பற்றிச் சில குறிப்புகள்' என்னும் நூலிலே எலியட் இவ்வாறு எழுதியுள்ளார். தமிழிலக்கியத்தைப் பொறுத்த வரையில் பாரதியார் இந்த இலக்கணத்திற்குச் சிறந்த இலக்கியமாய் விளங்கு கிறார் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

"கல்லை வயிரமணியாக்கல்—செம்பைக்
கட்டித் தங்கமெனச் செய்தல்—வெறும்
புல்லை நெல்லெனப் புரிதல்...."

என்று பாரதியார் பாடியிருக்கிறாரல்லவா? உருவகப் படுத்திக் கூறினால் தமிழிலக்கியத்தில் இவை யாவற்றையும் சாதித்துள்ளார் அவர். தேசியமென்ற கல்லை இந்திய மாதா திருப்பள்ளியெழுச்சி என்ற வயிரமணியாக்கி, வயிற் றுக்குச் சோறிடும் தேவையாகிய செம்பை வாழும் புது வழியாகிய கட்டித் தங்கமாக்கி தனிமனிதக் கவலை என்ற புல்லைத் தரணியைத் தாங்கும் மனிதாயத நெல்லாக்கி விந்தை தோன்றிடச் செய்தவர் மகாகவி பாரதியார். அதனாலேதான் மகாகவி என்று அமரத்துவம் பெற்று விட்டார் அவர்.

## உளக்காட்சிக்கு உருவம் தந்த தாகூர்

கீதாஞ்சலி என்ற தலைப்பில் சில கவிதைகளை ஆங்கிலத்தில் பெயர்த்ததின் மூலம் மேனாட்டுக் கவிஞர்கள் சிலருக்கு அறிமுகமாகி, அதன் பின்னர் இலக்கியத்துக்காக நோபல் பரிசையும் பெற்ற இரவீந்திரநாத் தாகூர் தமது எண்பதாண்டு வாழ்நாளில் தொடாத இலக்கியத் துறையே இல்லையெனலாம். கவிதை, நாடகம், நாவல், சிறுகதை, இலக்கியக் கட்டுரைகள், அரசியல் சிந்தனைக் கட்டுரைகள். தத்துவக் கட்டுரைகள், கடிதங்கள், உபதேசங்கள், கல்வி பற்றிய ஆராய்ச்சி நூல்கள் முதலிய சகல துறைகளிலும் அவர் பேனா சென்றிருக்கிறது. இவை யாவற்றுக்கும் மேலாக அவர் பாடகராகவும், நடிகராகவும், நாடகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிப்பாளராகவும், ஓவியராகவும், ஆசிரியராகவும் இருந்திருக்கிறார். கவிஞர் புத்ததேவ போஸ் கூறுவது போல எண்பதாவது வயதில் காலமான தாகூர் அகால மரணமடைந்தார் என்றே கொள்ள வேண்டும். இலக்கியத்தின் அத்தனைப் பிரிவுகளிலும் பரிசீலனைகள் செய்தது மட்டுமின்றிப் பல துறைகளில் வெற்றியும் கண்ட தாகூரை உலக இலக்கியத்திலே ஜெர்மானிய மகாகவி கெதேக்கு மாத்திரம் ஒப்பிடலாம் என்பது சில வங்காள இலக்கிய விமர்சகர்களின் கருத்தாக இருந்து வந்திருக்கிறது. அது எவ்வாறாக இருப்பினும் உலகம் தாகூரை மகாகவி என்றே மதித்து வருகிறது. ஏனெனில் நாவல், நாடகம், கட்டுரை முதலிய துறைகளில் தாகூரைவிட அதிகம் வெற்றி கண்டவர்கள் வங்காளத்தில் மட்டுமின்றிப் பிற பகுதிகளிலும் தோன்றியிருக்கிறார்கள். தனது இறுதி ஸ்தானம் கவிஞனாகவே இருக்கும் என்று தாகூரும் நம்பினார். 1912-ம் வருடம் தனது எழுத்துக்கள் சிலவற்றை முதன்முதலில் ஆங்கிலத்திலே மொழி பெயர்த்தபோது கவிதைகளையே தெரிந்தெடுத்தார். வசனமும் கவிதையுமாக ஏறத்தாழ ஐம்பது தொகுதிகள் அதுவரை வெளியிட்டிருந்தார் தாகூர். எனினும் முதன் முதலில் தாகூர் மொழி பெயர்த்த கவிதைகள் தாகூரின் வாழ்க்கைத் தத்துவத்தைத் திரட்டிக் காட்டின என்பது ஒருபுறமிருக்க, அவை எளிமையும், உணர்ச்சி வேகமும், நேருக்கு நேரான சம்பாஷணைப் போக்கும் கொண்டவனாயிருந்தன. உள்ளத்துத் தெளிவு 'வாக்கினிலே ஒளியாக வெளிவந்தபடியால், கால தேச எல்லைகளைக் கடந்த அவற்றை மொழி பெயர்க்கவும் ஏதுவாக இருந்தது. மொழி பெயர்ப்புப் பரிசீலனையைத் தொடங்குமுன் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாகச் சொற்களுக்குச் சுதிகூட்டி உளக்காட்சிகளுக்கு உருவம் கொடுத்து வந்தவர் தாகூர். எனவே அவரது ஆங்கில மொழி பெயர்ப்புப் பரிசீலனை அற்புதமான சாதனையாக அமைந்து விட்டது. வெளியுலகில் தாகூர் ஒரு பெரும் புலவன் என்னும் உண்மையையும் நிலைநாட்டி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகா கவிகளுக்குள் ஓர் ஒற்றுமை

தனது எழுத்துக்களின் கவிதையே நித்தியத்துவத்தைப் பெறும் என்று உணர்ந்ததைப் போலவே, தனது கவிதா சக்தி காவிய இலக்கிய வடிவத்திற்குப் பொருத்தமற்றது என்றும் உணர்ந்தார் தாகூர். தாகூருக்குச் சற்று முன்னதாக வங்காளத்தின் இலக்கிய சக்தியாக விளங்கிய (மைக்கேல்) மதுசூதன தத்தர் (1824—1873) காவியங்கள் எழுதிவந்தார். மேனாட்டு இதிகாசங்களுக்குச் சமதையாகத் தமது காலத்திலும் தமது மொழியிலும் காவியம் சமைக்க வேண்டுமென்று விரும்பிய மதுசூதன தத்தர் 'மேகநாதவதம்', 'திலோத்தமா சம்பவம்' போன்ற காவியங்களை எழுதினார். ஆனால் தாகூர் ஆரம்பத்திலிருந்தே தத்தரின் காவிய முறையை உதறித் தள்ளிவிட்டார். உணர்ச்சி வேகமிக்க தனிப் பாடல்களிலேயே தனது ஆத்மா வெளிப்படும் என்று தன்னையே அறிந்து கொண்டார் தாகூர். சந்தியா சங்கீத (மாலைப்பாக்கள்) (1882) மானஸீ (1890) க்ஷணிகா (1900) நைவேத்தியம் (1901) ஸ்மரணை (1903) முதலிய பிரசித்தி பெற்ற கவிதைத் தொகுதிகளில் அடங்கிய பாடல்களெல்லாம் தனிப்பாடல்களாகவே (Lyric) எழுதப்பட்டன. கவிஞரின் வாழ்க்கைத் தத்துவம் இவை யாவற்றிற்கும் ஊடாக இழையோடி இணைந்துப் பூரணத்துவத்தையும் பொலிவையும் கொடுக்கிறது.

நாவல், சிறுகதை, கடித இலக்கியம், நாடகம் முதலிய துறைகளில் தாகூர் பாரதியாரைவிட அதிக உழைப்பும் அதற்கதிகமான வெற்றியும் கண்டார். பாரதியார் தொடர்ந்து எழுதியிருந்தால் நாவல் இலக்கியத்திலே குறிப்பிடத்தக்களவு வெற்றி கண்டிருப்பார் என்று இப்பொழுது கூறத் தோன்றுகிறது. ஞானரதம், சந்திரிகையின் கதை, சின்னச்சங்கரன் கதை முதலியவற்றை எழுதிய கவிஞர் உரைநடையிலும் உயர்ந்த இலக்கிய கர்த்தாவாக இருந்திருப்பார் என்பதை அந்நூல்களைப் படிப்பவர்கள் அறிந்துகொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் உணர்ச்சிமிக்க தனிப்பாடல் தொகுதிகள் மூலம் மகாகவி அந்தஸ்தைப் பிடித்துக்கொண்டதில் பாரதியாருக்கும் தாகூருக்கும் ஒற்றுமை இருக்கிறது.

## மோகனமான இசைப்பாடல்கள்

வங்காள மொழியிலுள்ள வைணவ பக்தி இலக்கியங்கள், வடமொழியிலுள்ள உபநிடத உள்ளுணர்வுகள், வங்காளத்து நாட்டுப் பாடல்கள் இவை யாவற்றையும் புதிய ஒளியில் பார்க்கும்படி பார்க்கவைத்தவர் தாகூர். உபநிடத வாக்கியமா, தாகூர் இதய ஒலியா என்று பேதம் காணமாட்டாத வகையில் எத்தனையோ கவிதைகள் அமைந்துள்ளன. தாகூருக்குக் கவிதா உரமளித்தபடியால் வங்காள வைண பக்திக் கவிஞர் வித்தியாபதியும் நாடோடிப் பாடகர்களும் இன்று பன்மடங்கு முக்கியத்துவம் பெற்று விட்டனர். அதைப்போலவே வங்காள இலக்கியத்தில் தாகூருக்கு முன்னும் பின்னும் உள்ள இலக்கிய கர்த்தாக்கள் அவரது பெருமை கோலாலேயே அளவிடப்படுகின்றனர். ‘எளிய சந்தம், எளிய நடை, ஜனங்கள் விரும்பும் மெட்டு’ என்று பாரதியார் அடிக்கடி வற்புறுத்தியது போலவே தாகூரும், தமது பாடல்களை இலக்கியச் சநாதனிகளின் யாப்பிலக்கணப் பிடியிலிருந்து விடுவித்து, மக்கள் உளங் கலந்து பாடும் மோகனமான இசைப் பாடல்களாக மாற்றினார். உண்மையைக் கூறப்போனால் தாகூர் தமது இசைப் பாடல்கள் மூலமாகவே வங்காள மக்கள் நெஞ்சில் அமரராகியிருக்கிறார். அவற்றின் மூலமாகவே அவர் நிரந்தரமாக மக்கள் கவிஞராக இருப்பார். இந்தப் பண்பிலும் இரு கவிஞர்களுக்கும் ஒற்றுமை இருக்கிறது. தமிழில் கவிதைகளைப் பாடிக் குவித்த பாரதியார் பல அற்புதமான கீர்த்தனங்களையும் பாடியுள்ளார் என்பதை நாம் மறத்தலாகாது. எனினும் தமிழில் பாரதியார் யாப்பு அமைதியில் பாரதூரமான புரட்சி செய்தார் எனக் கூற முடியாது. ஆனால் வங்காள மொழியைப் பொறுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்குச் சமானமாகும் முறையில் புதிய யாப்பு உலகத்தையே தாகூர் தரிசனஞ் செய்தார் என்று பல இலக்கிய விமர்சகர்கள் காட்டியுள்ளனர். அது தாகூரின் பெருமையா அல்லது வங்காள மொழியின் பெருமையா என்பதை நிச்சயிப்பது இலகுவான காரியமன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

"இந்தியாவின் சிந்தனை வளர்ச்சியில் குறிப்பாகத் தனக்குப் பின் வந்த தலைமுறையினரைப் பாதித்ததில் இரவீந்திரரின் செல்வாக்கு பிரம்மாண்டமானதாகும். அவர் இலக்கியம் படைத்த வங்காள மொழி மட்டுமின்றி இந்தியாவின் பிற மொழிகளிலுள்ள இலக்கியங்களும் அவரின் சிருஷ்டிகளினால் ஓரளவு உருப்பெற்றுள்ளன. தாகூர் இந்தியாவின் தலையாய மனிதாயதவாதி."

இரவீந்திரநாத் தாகூர் பற்றி எழுதுகையில் பண்டித நேரு 'கண்டு கொண்டேன் இந்தியாவை' என்னும் நூலிலே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

## நவ இந்தியாவின் கலாசாரப் பிரதிநிதி

இந்த நூற்றாண்டின் முதற்பகுதியிலே இந்திய மக்களின் சிந்தனையையும் செயலையும் பாதித்த இரு பெருந் தலைவர்கள் தாகூரும், மகாத்மா காந்தியும் என்பதில் ஐயமில்லை என்பது பல வரலாற்றாசிரியர்களின் கருத்தாகும். வரலாற்றுச் சம்பவங்களின் காரணமாக மேற்கத்திய ஏகாதிபத்தியத்தினதும், நாகரிகத்தினதும் தாக்குதலைப் பெருமளவில் அனுபவித்த வங்காளத்திலே தோன்றிய தாகூர் நவீன இந்தியாவினுடைய இலக்கிய கலாசார சாதனைகளின் சின்னமாக—பண்பாட்டுப் பெருமையின் சிகரமாக-சிருஷ்டி சக்தியின் உன்னதமான விளக்கமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்து விட்டதில் ஆச்சரியமெதுவுமில்லை. ஒவ்வொரு காலப் பகுதியும் தனது தேவைக்கு வேண்டிய காலப் புருஷர்களைத் தேடியணைத்துக் கொள்கிறது. அதே சமயத்தில் ஒரு காலப் பகுதியின் பெருமையையும் சிறுமையையும் பலவீனத்தையும் தனக்குள்ளே அடக்கிக் காட்ட வல்ல சில மனிதர்களும் வரலாற்றாசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். நவீன இந்தியாவினுடைய கலாசாரத் துறையின் தனிப்பெரும் பிரதிநிதியாக விளங்குபவர் தாகூர் என்பதில் ஐயமில்லை. சுருங்கக் கூறின் இந்தியாவின் ஆத்மீகப் பெருமைக்கு இலக்கணமாகவும், இலக்கியமாகவும் விளங்கியவர் தாகூர்.

## வழிகாட்டியாக விளங்கிய வங்காளம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி இருபத்தைந்தாண்டுகள் இந்தியாவைப் பொறுத்தவரையில் முக்கியமானவை. கைத்தொழில் வளர்ச்சியும், புதிய மத்தியதர வர்க்கத்தினரின் எழுச்சியும் பல துறைகளில் காணப்பட்டன. சென்ற நூற்றாண்டின் முற்பகுதியிலே ஆங்கில மொழி, நாகரிகம் முதலியவற்றினூடாக மேற்கத்திய சிந்தனைகள் பல இந்தியாவிலே ஊடுருவின. இந்தியாவிலே முதலீடு செய்த பல வெள்ளைக்கார முதலாளிகளும், தொழிலதிபர்களும், வர்த்தகர்களும், தவிர்க்க முடியாதபடி இந்தியாவிற்காக வாதாடவும் நேர்ந்தது. அத்தகைய சூழ்நிலையிலேயே ஆங்கிலக் கல்வியும் அதனுடன் இணைந்த விளைவுகளும் இந்தியாவிலே வேரூன்றலாயின. இந்திய மொழிகள் பலவற்றில் நவீன உரைநடை வளம் பெற்றது இக்காலப் பகுதியிலேயே எனலாம்.

[தமிழகத்திலே ஆறுமுக நாவலர் (1822—1879) வசன நடை வளர்த்தது இந்தப் பேரியக்கத்தின் ஒரு பகுதிதான் என்பதை நாம் நினைவூட்டிக் கொள்ளலாம்.] வசன நடை வளர்ந்து ஒரு குறிப்பிட்ட தரத்தையடையவும் இந்திய மொழிகள் பலவற்றிலே பத்திரிகைகள் தோன்றின. சுதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகளில் பத்திரிகைகள் பெருகவே, அரசியல், சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றிப் புதிய கருத்துக்கள் மக்கள் மத்தியில் பரவலாயின.

பத்திரிகைகளையும் நூல்களையும் மக்கள் ஓரளவு வாசிக்கும் நிலை ஏற்பட்டதும் ஆங்கிலம் படித்தறிவு பெற்றவர்களின் இலக்கியத் திறமைகள் மலரத் தொடங்கின. மேனாட்டிலக்கியங்களைப் படித்தவர்கள், அவற்றைப் பிரதிபலித்தும், தழுவியும், மொழிபெயர்த்தும் இலக்கியம் அமைக்க ஆரம்பித்தனர். வங்காளத்திலே ஸ்காட்டைப் பின்பற்றி பங்கிம் சந்திரர் நாவல்களும் மில்டனைப் பின் பற்றி மதுசூதனதத்தர் காவியங்களும், ஐரோப்பிய இலக்கிய ஆசிரியர்களைப் பின்பற்றி துவிஜேந்திரலால் ராயர் வரலாற்று நாடகங்களும் எழுதினர், தமிழகத்திலே பேரா சிரியர் சுந்தரம்பிள்ளை ஆங்கிலக் கதையொன்றைத் தழுவி **மனோன்மணீயம்** என்னும் நாடகத்தையும் வி. கே. சூரிய நாராயண சாஸ்திரியார் எனப்படும் பரிதிமாற் கலைஞர் ஆங்கில செனட் வகைகளைத் தழுவி தனிப் பாசுரத் தொகை என்னும் கவிதை நூலும் வெளியிட்டனர் என்பது மனங்கொள்ளத்தக்கது. இந்தியாவின் தற்கால மொழிகள் பலவற்றிலும் இத்தகைய வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருந்தது. எனினும் வங்காளமே வழிகாட்டியாக இருந்தது.

## தாகூர் யுகத்தில் இலக்கியப் புரட்சி

சென்ற நூற்றாண்டின் இறுதிக் காலத்திற்குச் சற்று முன்னதாகத் தோன்றிய இலக்கிய கர்த்தாக்கள் சிலர் தமக்கு முன்னிருந்தவர்கள் மேனாட்டுப் பேரிலக்கியங்களை யும் சிற்றிலக்கியங்களையும் தழுவியோ எதிரொலித்தோ எழுதுவதை நிராகரித்தனர். மேனாட்டு இலக்கியங்களுக்குச் சமதையாகத் தாமும் இந்திய இலக்கியம் படைக்க வேண்டும் என்றும் உணர்ந்தனர். அந்த லட்சியத்தின் காவிய நாயகர் தாகூர். தாகூரின் வருகையோடு இந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகள் நவின மொழிகளாயின இருபதாம் நூற்றாண்டு இந்திய மொழிகளுக்குள் புகுந்துகொண்டது. இந்தச் சந்தர்ப்பத்திலே பிரபல வங்கக் கவிஞராகிய புத்ததேவ போஸ் கூறுவது கவனிக்கத்தக்கது:

''இரவீந்திரரின் எழுத்துக்களைப் படித்ததன் பயனாகவே மேற்கத்திய இலக்கியத்தை எம்மால் இலகுவில் அணுக முடிந்தது. வங்காள இலக்கியத்தின் பொற்காலத்திற்குப் பின்னர் முதன் முறையாகத் தாகூர்தான் எம்மை உலகப் பிரஜைகளாக்கினார்''

என்று தாகூர்ப் புகழ் பாடுகிறார் புத்ததேவபோஸ், தாகூர் யுகத்தில்' வந்தவர்கள் புதிய இந்தியாவை இனங் கண்டுகொள்ள விரும்பினர். தேசியம் தெய்வீக வாழ்வைப் பெற்றுவிட்டது. திலகரும் அரவிந்தரும் தெய்வீகமயமான இந்தியாவைக் கண்டனர். வங்காளத்திலே தாகூர் ஏற்படுத்திய இலக்கிய யுகப்புரட்சி பிற இந்திய மொழி களிலும் எதிரொலித்தது.

தாகூரையும் பாரதியையும் ஒப்பு நோக்கும்போது இந்த வரலாற்றுப் பகைப்புலம் அவசியமாகும். நவீன இந்தியாவின் கலாசார வாழ்வில் தமது முத்திரையைப் பொறித்த—பேரொளியைப் பாய்ச்சிய இரவீந்திரர்; பாரதி மீது எத்தகைய ஆதிக்கம் செலுத்தியுள்ளார் என்பதை இங்கு ஒரு சிறிது நோக்குவோம்.

## தமிழ்க் கவிஞரும் வங்கக் கவிஞரும்

வறுமைப்பட்ட இளமைக் காலத்தைக் கழித்து, தமிழ்க் காதல் கொண்டு சுதேசி இயக்கத்தில் சிக்கி தீவிரவாதியாகப் மாறி, பத்திரிகாசிரியராக இருந்து, அரசியல் அகதியாகப் புதுச்சேரிக்கு ஓடி, ஞானிகள் சுவாமிகள் சிலரின் சகவாசத் தால் உள்ளொளி பெற்று, தெளிந்த உலக நோக்குடன் சென்னைக்குத் திரும்பி வந்து திடீர் மரணம் எய்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் பாரதிக்கும், செல்வம் படைத்த நிலப்பிரபுத்துவக் குடும்பத்திலே பிறந்து, வங்காளக் காதல் கொண்டு, தீவிர வாதத்தைக் கைவிட்டு தனிமையான—அமைதியான வாழ்க்கை முறையை வகுத்து உலகஞ் சுற்றி, தனிப்பட்ட தெய்வ வழிபாட்டு முறையைக் கொண்டு, விஸ்வபோதம் பெற்று, கல்வி, கலை முதலியவற்றிற்காக நிலையங்கள் நிறுவி, தத்துவ வாதியாக மாறி, எண்பதாவது ஆண்டு வரை வாழ்ந்து தனது காலத்திலேயே புகழின் பூரணத் துவத்தை அனுபவித்து மறைந்த தாகூருக்கும் மேல்நோக் காகப் பார்க்குமிடத்து ஒற்றுமைகள் காண்பது கடினம். அதே போலப் பாரதியார் மீது தாகூரின் செல்வாக்கைக் கண்டுகொள்வதும் இலகுவான காரியமன்று.

மகாத்மா காந்தியுடன் பல துறைகளில் கருத்து வேறுபாடு கொண்டிருந்த தாகூர் பிற்காலத்தில் காந்தீய யுகத்தை ஏற்றுக்கொண்டது போல, அதன் அடிப்படை சகல இந்தியர்களையும் ஆசர்ஷித்தது போலத் தாகூருடைய இலக்கிய மேதாவிலாசத்தின் சில பண்புகள் கவிஞர் பாரதியை ஆட்கொண்டுள்ளன என்பதில் ஐயமில்லை. தாகூர் பற்றி பண்டித நேரு எழுதியுள்ள மற்றொரு கருத்து இங்கு பொருத்தமுடையதாகக் காணப்படுகிறது.

''மேற்கு—கிழக்கு ஆகிய இரண்டின் இலட்சிய ஒற்று மையை வற்புறுத்தியதிலும், இந்திய தேசியத்தின் அடிப் படைகளை அகலமாக்கியதிலும் தாகூருக்கு இணை தாகூர் தான். இந்தியாவின் தலைசிறந்த சர்வதேசிய வாதி அவர் தான்'' என்று பண்டித நேரு கூறிய வார்த்தைகள் கூர்ந்து நோக்கத்தக்கன. வங்காள இலக்கியக் கர்த்தாக்கள் மட்டுமின்றி இந்தியாவின் இலக்கியக் கர்த்தாக்கள் பலர் பரந்து விரிந்து உலக நோக்கைப் பெறுவதற்கும்' சர்வதேசியக் கண்ணோட்டத்தைப் பெறுவதற்கும் தாகூரே காரண புருஷராக இருந்தார். இது விஷயத்தில் தாகூரின் வாழ்வும் எழுத்தும் சிறந்த உதாரணங்களாகவும் இலட்சியங் களாகவும் மிளிர்ந்தன. சொல்லாலும் செயலாலும் சகோதரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவத்தைப் பரப்பியவர் தாகூர். பாரதி போன்றவர்கள் சில சந்தர்ப்பங்களில் தாகூரை இந்தியாவின் பிரதான கலா சாரத் தூதுவராகக் கருதினர். எனினும் தாமும் அவ்வாறு வர ஆசைப்பட்டனர் என்பதில் சந்தேகமில்லை.

## இரவீந்திரருக்கு பாரதி புகழ்மாலை

''ஸ்ரீ ரவீந்திர திக் விஜயம்'' என்ற கட்டுரையிலே தாகூர் மேனாட்டு யாத்திரையின்போது அவருக்குக் கிடைத்த உபசாரங்களைப்பற்றி எழுதியுள்ளார் பாரதியார். ''தன் பொருட்டாகச் சேகரிக்கப்படும் கீர்த்தியொரு கீர்த்தியாகுமோ? ஒரு தேச முழுமைக்கும் கீர்த்தி சேகரித்துக் கொடுப்போனுடைய புகழே புகழ். ரவீந்திரநாதர் இந்தியாவை பூலோக குருவென்று பூமண்டலத்தார் கண் முன்னே நிலைநாட்டிக் கொடுத்தார்.

அவருடைய திருவடி மலர்கள் வாழ்க'' என்று தாகூர் பெருமையில் மகிழ்ச்சி கொண்டாடும் பாரதியார் தாகூருடைய சொற்பொழிவுகள் மேனாடுகளில் வரவேற்கப் படுவதற்குக் காரணத்தையும் கூற முற்படுகின்றார். ''பழைய வேத இரகசியத்தை ஆத்ம ஐக்கியமான பரம தத்துவத்தை மிக இனிய தெளிந்த வசனங்களாலே ஐரோப் பாவுக்கு எடுத்துக் கூறியது பற்றிய ரவீந்திர கவிச் சக்கரவர்த்திக்கு ஐரோப்பா இங்ஙனம் அற்புத வழிபாடு செலுத்திற்று'' என்றும் விளக்கம் கூறுகிறார் கவிஞர் பாரதியார்.

1920-ம் ஆண்டு தாகூரின் 'இருட்டறை வேந்தன்' என்னும் நாடகம் ஜெர்மானிய மொழியில் பிராங்க்போர்ட் நகரத்திலே நடிக்கப் பெற்றது. அது பற்றியும் அந்த வருடம் நோபல் பரிசு பெற்ற சுவிட்சர்லாந்துக் கவியாகிய கார்ல் ஸ்பித்தலர் பற்றியும் குறிப்புகள் எழுதுகையில் பாரதியார் பின்வருமாறு எழுதியுள்ளார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"....அவ்வவ் வருஷத்தில் நாகரிக முழுவதிலும் இலக்கியத்திலும் சாஸ்திரத்திலும் மிகச் சிறந்த வித்வான்களுக்கு இந்த வெகுமானம் கொடுக்கப்பட்டு வருகிறது. ரவீந்திர நாத் தாகூருக்குக் கிடைத்த வெகுமதி ரூபாய்க் கணக்கில் சுமார் லட்சத்திருபதாயிரமாயிற்றென்பது நம்மவருக்கு நினைப்பிருக்கக் கூடும். பரிசு இத்தனை பெருந்தொகையாக இருப்பது மன்றி, இதனைப் பெறுவோர் உலகத்து வித்வான்களில் சிறந்தோரென்ற ஸ்தானமும் ஏற்படுவதால் ஒவ்வொரு தேசத்தாரும் தத்தம் நாட்டுக் கவியாசர்களுக்கு அந்த ஸம்மானம் கிடைக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்—இந்தியாவின் நாகரிகம் உலகத்தில் பரவுவதற்குத் தொழில் புரியும் நமது காலத் தொழிலாளிகளில் ரவீந்திர பாபுவை முன்னணியில் சேர்க்கவேண்டும்" என்று கவிஞர் பாரதியார் கூறுவது கவனிக்கத்தக்கது.

## ஸ்ரீ அரவிந்தர் பதித்த முத்திரை

தாகூர் கூறிவந்த உலக ஒற்றுமை, கிழக்கு—மேற்கு இணைப்பு, மனிதாயதம் முதலியன பழைய வேத உண்மையென்றும், இந்தியாவின் தெய்வீக இரகசியமென்றும் பாரதியார் சில இடங்களில் கூறினாலும் தாகூரது (Universality) உலகப் பொதுமையை பாரதியார் அறிந்தோ அறியாமலோ ஏற்றுக் கொண்டார் என்பதை மறுக்க முடியாது.

கடைசிக் காலத்திலே சாந்தி நிகேதனத்தில் ஒரே வீட்டிலோ அறையிலோ ஒரு சில நாட்களுக்கு மேல் இருக்க விரும்பாத தாகூர், எந்த ஒரு பழமைக்கும், எல்லை வரையறைக்கும் கட்டுப்பட விரும்பாத கவிஞர் சர்வதேசியத்தையும் உலகப் பொதுமையையும் உணர்ச்சிமயமாகக் கண்டனுபவித்தார். பாரதியாரோ அதனை அறிவால் கிரகித்து உணர்ந்தார். அந்த அளவிற்குத் தாகூருடைய உணர்வு அசல், பாரதியினுடைய நால் என்றே கொள்ள வேண்டும். ஆனால் பாரதியினுடைய கவிதைகளில் இது தெளிவாகத் தெரியவில்லை. வசனப் படைப்புக்களிலேயே ஆங்காங்கு தெரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி வசதியும், பிரயாண வசதியும், சர்வதேசப் புகழும் பெற்று, இந்தியாவின் கவி சிரேஷ்டராகவும் விளங்கிய தாகூர் பாரதிக்கு ஓர் இலட்சியக் கவிஞராக—புருஷராக—இருந்தார். ஆனால் சமயம், தத்துவம், சிந்தனை முதலிய வற்றில் பாரதியார் தாகூரைப் பின்பற்றினார் என்றோ, ஆதர்ஷ புருஷராகக் கொண்டார் என்றோ கூறமுடியாது.

நிவேதிதா அம்மையார், திலகர், அரவிந்தர், குள்ளச் சாமியார், விவேகானந்தர் முதலியோரே வெவ்வேறு வகை களில் பாரதியாரின் ஆத்ம பக்குவத்திற்குக் காரணமாக இருந்திருக்கின்றனர். 'சான்றோர்' என்னும் தலைப்பில் இப்பொழுது அடங்கியுள்ள பாரதியார் பாடல்களும், 'சுய சரிதை'யும் இதனைத் தெளிவாக்கும்.

வேதங்களில் நம்பிக்கை, காளி வணக்கம், கைத் தொழில் வளர்ச்சியில் சிரத்தை, உழைப்பில் உறுதி, தெய்வீக வாழ்வில் ஈடுபாடு முதலியன தாகூருடைய செல்வாக்கை மறுத்து நிற்கின்றன. அவை பாரதியின் பரிணாம வளர்ச்சியில் வந்து சேர்ந்தவை. காட்டாறுபோல கலங்கியோடிய பாரதியின் கவியுள்ளம் தெளிவுபெறத் தொடங்கிய காலத்தில் மரணமடைந்தார். பாரதியின் தத்துவ ஞான வளர்ச்சியில் அரவிந்தர் ஒருவர்தான் குறிப் பிடத்தக்க முத்திரையைப் பொறித்துள்ளார். அரவிந்தருக் கும் பாரதிக்கும் ஏற்பட்ட நெருங்கிய தொடர்பையும் அதன் பலாபலன்களையும் பிறிதோரிடத்தில் கவனிப்போம். அது முக்கியமானதாகும். தாகூரைப்பற்றி—தாகூரின் கவிதைகளைப் பற்றி—பாரதியும் அரவிந்தரும் ஏறத்தாழ ஒரே கருத்துக் கொண்டிருந்தனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. வேதம் கீதை, இந்திய தத்துவ தரிசனங்கள் முதலியனபற்றித் தாகூரைவிட அரவிந்தர் ஆழமான, தனித் தன்மையான, சொந்தமான, நூதனமான கருத்துகளை யும், உணர்வையும் பெற்றிருந்தார். அது உலகம் ஒப்புக் கொள்ளும் உண்மையாகும். அரவிந்தரின் செல்வாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியிடத்து ஊடுருவியது; பாரதியின் ஆத்ம வெளிப் பாடான கவிதைகளிலும் அவை இடம் பெற்றுள்ளன. தாகூர் பாரதியின் வசன எழுத்துக்களிலேயே அதிகமாக இடம் பெற்றிருப்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும். அது மட்டுமின்றி அரவிந்தரைப்பற்றிப் பாரதியார் எழுதிய போதும் தம்மை மறந்து உணர்ச்சி வயத்தவராய் நின்று எழுதியிருப்பதையும் நாம் கவனிக்கலாம்.

## கங்கை நதியும் காவேரி ஆறும்

கவிஞர்கள் என்ற முறையில் பாரதியும் தாகூரும் சுதந்திரமான இரு பெரும் கவிஞர்கள் என்றே கொள்ள வேண்டும். இதுபற்றித் திரு. கே. எம். பணிக்கர் கூறி யுள்ளது நினைவிற்கு வருகிறது.

''பாஷைக்குள் வலுவும் வளைவு நெளிவுகளும் புகுத்தி, பழைய மரபிலிருந்து புரட்சி செய்த இலக்கிய வடிவங் களையும், வண்ணங்களையும் அமைத்துப் பிரபலமாக்கி, வங்காள மொழிக்கு உலகக் கண்ணோட்டத்தை ஏற்படுத்தி அதனைத் தனித்துவம் அடையச் செய்தார் தாகூர். இந்த வகையில் அவர் அபூர்வ மேதையாகத் திகழ்ந்தாலும் தனியனாக இருக்கவில்லை. பிற மொழிகளிலும் இதே சக்திகளினால் உந்தப்பட்ட புகழ்பூத்த கவிஞர்களும் எழுத் தாளர்களும் இருந்தார்கள். இவர்களில் இருவர் குறிப்பிடத் தக்கவர்கள். தமிழ்க் கவிஞர் சுப்ரமணிய பாரதி, அல்லாமா) முஹம்மத் இக்பால் ஆகிய இருவரே அவர்கள்.''

சர்தார் பணிக்கரின் கருத்தை நாம் ஏற்றுக்கொள்வதில் கஷ்டமெதுவுமில்லை. அது வரலாற்று அடிப்படையில் அமைந்த அபிப்பிராயமே என்பதிலும் ஐயமில்லை.

தாகூர் கங்கை, கங்கை நதி பள்ளத்தாக்கிற்கு வளமும் செழிப்பும் அளித்துக் கோதுமையும், சணலும் இன்ன பிறவும் விளைய உதவும் பேராறு அது. அது இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலேயே மிகப் பெரிய ஆறு. புராதனப் பெருமை கொண்ட நதி.

பாரதியார் காவேரி, நாணமுடன் உடல் வளைத்துச் சிந்தா முறுவல் காட்டிச் செல்லும் செவ்விய நதி அது. தமிழகத்துச் செந்நெல்லும் கரும்பும் பிறவும் விளையும் பூமியை அது பொன்னாக்குகிறது. சமயத் தொடர்பும், வரலாற்றுச் சிறப்புடையது; கங்கையைவிட அது சிறிய ஆறுதான். ஆனால் அதன் மருங்கு வாழ்பவர்களுக்கு அது கங்கையிற் புனிதமானதுதான்.

இறுதியில் இரண்டுமே வங்காள விரிகுடாவிற்குள் வந்து கலக்கின்றன.

UNIVERSITY 17-2-1996 LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

வங்காளத்தில் வெடித்த அரசியல் பூகம்பத்தினால் உந்தப்பட்டு அரசியலில் திடீர்ப் பிரவேசஞ் செய்த பாரதியார், தமது புதுவை வாழ்க்கையின் போது நெருங்கிப் பழகிய ஒரு வங்காளியினால் பெரிதும் கவரப்பட்டார். ஆம், பாரதியார் அரவிந்தரைப் புதுவையில் சந்தித்து நெருங்கிப் பழகத் தொடங்கியது முதல் ஒரு புதிய நிதானத்தையும், ஆழத்தையும் பெற்றார். ஞான மார்க்கத்தில் அவர் நுணுக்கமாகச் சிந்திக்கத் தொடங்கினார். கவிஞர் பாரதி புதுச்சேரியில் அரசியல் அகதியாக வாழ்ந்த காலப் பகுதி மகோன்னதமானது. பாரதிக்கு, அமரத்துவம் அளிக்கும் படைப்புகள் யாவும் அக்காலத்திலேயே—பத் தாண்டுகளுக்குள்ளேயே—பிறந்தன என்பதை நாம் ஒரு கணம் ஆழ்ந்து சிந்திக்கும் போது அதிசயத்தில் ஆழ்ந்து விடுகிறோம். கவியுள்ளத்தைக் கணக்கிடுவதும் பகுத்துப் பார்ப்பதும் பயனற்ற வேலை என்று சில விமர்சகர்கள் கூறுவார்கள். அது உண்மையே. எனினும் புதுவையில் பாரதியின் கவிக்கனி பழுத்து நறுமணம் வீசப் பல காரணங்கள் இருந்தன. அவற்றில் ஒன்று பாரதியார்—அரவிந்தர்....ஐயர் சேர்க்கை என்பதில் ஐயமில்லை.

## திரிமூர்த்திகள் சர்ச்சை

*1910*-ம் வருடம் ஏப்ரல் மாதம் அரவிந்தர் இரகசியமாகப் புதுவை வந்தார்; 'பாரதியின் யுக்தி'யைப் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிப் புதுவை வந்தவர் அரவிந்தர். அரவிந்தர் புதுவை வந்த போது பாரதியும் ஸ்ரீநிவாஸாச்சாரியும் கப்பலுக்குச் சென்று அழைத்து வந்து தற்காலிகமாகக் கலவை சங்கர செட்டியார் வீட்டு மாடியில் தங்க ஏற்பாடு செய்தனர்.

அரவிந்தர் புதுவை வந்து ஆறு மாதத்திற்குள் (1910 நவம்பர் (வ. வே. சு. ஐயர் இங்கிலாந்திலிருந்து அங்கு வந்து சேர்ந்தார். ஐயரின் வருகையுடன், புதுவையில் திரிமூர்த்திகள் இருந்தனர். தத்துவஞானி அரவிந்தர், இலக்கிய விமர்சகர் வ. வே. சு. ஐயர், மகாகவி பாரதி. இந்த மூன்று மேதைகளும் கலை, இலக்கியம், தத்துவம் முதலியவற்றை ஆழமாகச் சிந்தித்தவர்கள். ஒருவருக்கொருவர் மதிப்பும், அன்பும் கொண்டிருந்தவர்கள். புதுவையில் அவர்கள் அடிக்கடி சந்தித்து இலக்கிய மத சர்ச்சைகள் புரிந்தனர். அகதிகளாகச் சென்ற அவர்களுக்குள் ஓர் ஒருமைப்பாடு உருவாகியது. உள்ளங்கள் உறவாடின. இவர்களுடன் நான்காவது நபராக மண்டயம் ஸ்ரீநிவாஸாச்சாரியும் இருந்தார். ''சாயங்காலம் நாலு மணிக்கு அரவிந்தரின் வீட்டுக்குப் போய் வேதம், உபநிஷத் இவைகளைச் சிந்தனை செய்வார்கள். இரவு பத்து மணி, பதினொரு மணிக்கு வருவார்கள்'' (பாரதி நினைவுகள்: யதுகிரி அம்மாள்). பாரதியாரே இது பற்றிக் கூறியிருப்பதாகத் தெரிகிறது. வ. வே. சு. ஐயரும் ஸ்ரீநிவாஸாச்சாரியாரும் உரையாடிக் கொண்டிருக்கையில் பாரதி தமது 'குழூ'வைப் பற்றிக் கூறியதை யதுகிரி அம்மாள் எழுதியுள்ளார்.

**ஐயர் :** மிகவும் நன்றாக இருக்கிறது. நாலைந்து மாத விஷயங்களையும் ஐந்து அடிகளில் அடக்கியிருக்கிறார். (எங்ஙனம் சென்றிருந்தீர் என்ற பாடல்)

**ஸ்ரீ. ஸ்ரீ :** ஒரு பதத்தில் நூறு பொருள்களை அடக்கும் சக்தி பாரதி தவிர யாருக்கும் வராது.

**பாரதி :** நம் நால்வருக்குள் நம் குண விசேஷங்கள் அடங்கிவிட்டன. நான் நன்றாகப் பாடுகிறேன் என்கிறீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர். உம்மைப் போன்ற எழுத்தாளர் இல்லை என்று சொல் கிறேன் நான். ஐயரைப் போன்று மொழி பெயர்ப்பு நிபுணர் கிடையாது என்று நாம் சொல்கிறோம், பாபு வைப்போல (அரவிந்தர்) பழைய வேதங்களை இங்கிலீஷில் மொழி பெயர்த்து அடுக்குபவர் கிடையாது என்கிறோம், நாலு பேர் நான்கு பக்கத்திற்கு.''

## கவி பாரதியின் ஆதர்ஷ புருஷர்கள்

அலிப்பூர் வெடிகுண்டு வழக்கில் சம்பந்தப்படுத்தப் பட்டு விசாரணை செய்யப்படும் வரை அரவிந்தர் வங்காளத் தின் எரிமலையாக விளங்கினார், அக்காலத்தில் திலகரும், அரவிந்தருமே இந்தியாவின் அரசியல் சிந்தனையாளராக வும் செயல் வீரராகவும் திகழ்ந்தனர். தீவிரவாதியாக இருந்த பாரதியார் இவ்விருவரையும் ஆதர்ஷ புருஷர் களாகக் கொண்டார்.

பாரதியார் ஒரு வேதாந்தி. இளம் வயதிலேயே அவர் வேதாந்தியாகிவிட்டார். வேதாந்தி என்ற வகையில் அரவிந்தரின் யோகமும் தெய்வீக வாழ்க்கைத் தத்துவமும் பாரதியாரைக் கவர்ந்தன. மகரிஷி அரவிந்தர் பற்றி தி. வி. கபாலி சாஸ்திரிகள் எழுதியுள்ள ஒரு கட்டுரையி லிருந்து சில வாக்கியங்களை இங்கு கவனிப்போம்.

''முக்கியமாக திரு அரவிந்தர், அவருக்கு முன் பாரத தேசத்திலிருந்த பெரும் அத்யாத்ம குருமார்கள் போலவே, ஓர் யோகி அதற்கடுத்ததுதான் யோக திருஷ்டியால் அவர் கண்டு தெளிந்த முடிவான உண்மைகளைப் பற்றி உரைக் கும் தரிசனம், அவரது கோட்பாட்டின் தத்துவ சாஸ்திர அடிப்படை உறுதியாக உளது. ஏனெனில், ஆத்மீக வாழ்வின் அனுபவங்களுடனும், யோக அறிவால் சரி பார்த்த சரி பார்க்கக்கூடிய உண்மைகளுடனும், ஒவ் வொரு திருப்பத்திலும் இணைக்கப்பட்டுள்ளது அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளொலி கண்ட ஸ்ரீ அரவிந்தர்

தத்துவ சாத்திர அறிவின் துணைகொண்டு வாதப் பிரதிவாதங்களுக்காக மேக மண்டலங்களில் நின்று சொற் போர் புரிபவர் அல்லர் அரவிந்தர். யோகப் பயிற்சி மூலம் அனுபவிக்கும் உண்மைகளையும் விவேக உணர்வு களையும் இணைத்து உள்ளொளி கண்டவர் அரவிந்தர். இந்தப் பண்பே பாரதியாருக்கு மிகவும் பிடித்திருக்கும் என்பதில் ஐயமில்லை. தேசப் பற்றை ஆராய்ச்சி ரீதி யாகவோ, தத்துவ ரீதியாகவோ காணவில்லை அரவிந்தர். தெய்வீக வடிவைக் கண்டார். இந்தப் பண்பும் பாரதி யாருக்கு இயைந்ததாக இருந்திருக்கும். மகான் அரவிந்தர் எழுதிய '**இந்தியாவிலே மறுமலர்ச்சி**' என்னும் கட்டுரைத் தொகுதியிலே ஓரிடத்தில் பின்வருமாறு காணப்படுகிறது.

"மனித வாழ்வின் முதற்படி நிலையிலே, அரசியல், சமூகம், பொருளியல் முதலியன எல்லாம், மனிதன் கூட்டாக வாழவும், உற்பத்தி செய்யவும், ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், உடல் வலுவை வளர்க்கவும், உளத்தின் திறமையைப் பெருக்கவும் ஏற்படுத்திக் கொண்ட ஒரு முறையேயாகும். ஆனால் தெய்வீக இலட்சியமானது இவற்றிற்கு மேலும் புதிய பண்பைக் கொடுத்து விடுகிறது. முதலாவதாக மனிதன் தன்னை உணர்ந்து தெய்வீக நிலை பெற ஒரு வாழ்க்கை முறையைக் கொடுக்கிறது. இரண்டா வதாக மனித வாழ்க்கையில் காணப்படும் தெய்வீக நியதி களை ஒன்று திரட்டுகிறது. மூன்றாவதாக, மனுக்குலம் எட்டியடைய முயன்று கொண்டிருக்கும் ஒளி, சக்தி, அமைதி, ஒற்றுமை, தெய்வீக இணைப்பு ஆகியவற்றை நோக்கிக் கூட்டாக முன்னேற வழி செய்கிறது. வாழ்க் கைக்குத் தெய்வீகப் பண்பை நாம் செய்ய முனையும் போதும், தெய்வீகப் பண்பாடு என்று கூறிக் கொள்ளும் போதும் இதனையே நாம் கருதுகிறோம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீக வாழ்க்கை பற்றியும் அதன் சக்தியால் மனிதன் கூட்டாக முன்னேற முடியும் என்பது பற்றியும் அரவிந்தர் கூறியுள்ள இவ்வார்த்தைகள் மகாகவி பாரதியாரின் கவிதைகளுக்குப் பண்பிலக்கணம் அமைத்தது போல விளங்குகின்றன எனத் துணிந்து கூறலாம்.

## ஞானியின் சகவாசம் தந்த மனப் பக்குவம்

கீதை, வேதங்கள், சூத்திரங்கள் முதலியவற்றிற்கெல்லாம் புதிய புதிய கருத்துக்களும் நூதனமான விளக்கங்களும் கொடுத்தவர் அரவிந்தர். **ஆர்யா, கர்மயோகி** ஆகிய பெயர்களுடன் இயங்கிய பத்திரிகைகளிலே தமது கருத்துக்களை வெளியிட்டவர். அதே பெயர்களுடன் அதே பத்திரிகை விஷயங்களை, (மொழி பெயர்த்து) வெளிக்கொணர்ந்திருக்கிறார் பாரதியார். அரவிந்தர் மேலும், அரவிந்தர் கருத்துக்கள் மேலும் மகாகவிக்கு இருந்த பெருமதிப்பையும் ஈடுபாட்டையும் அது தெளிவாக்கும்.

புதிய ஆத்திசூடி, உயிர்பெற்ற தமிழர் பாட்டு முதலிய படைப்புக்களிலெல்லாம் பாரதியார் பல கருத்துக்கள், சொற்கள், எண்ணங்கள் முதலியவற்றிற்குப் புதிய விளக்கங்கள் கொடுத்திருக்கிறார். இந்த மனோ நிலையும் பக்குவமும் அரவிந்தரின் சகவாசத்தால் ஏற்பட்டதே என்று கருத இடமுண்டு.

**'ஊருக் குழைத்திடல் யோகம்—நலம்**
**ஓங்கிடுமாறு இருந்துதல் யாகம்;**
**போருக்கு நின்றிடும் போதும்—உளம்**
**பொங்கல் இல்லாத அமைதி மெய்ஞ்ஞானம்'**

**.................................................................**

**'ஐந்து புலனை அடக்கி—அரசு**
**ஆண்டு மதியைப் பழகித் தெளிந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொந்து சலிக்கும் மனதை—மதி
நோக்கத்திற் செல்ல விடும் வகைகண்டோம்'

..........................................................

'ஒன்றுண்டு மானிடசாதி—பயின்று
உண்மைகள் கண்டவர் இன்பங்கள் சேர்வார்;
இன்று படுத்தது நாளை—உயர்ந்
தேற்றம் அடையும் உயர்ந்த திழியும்'

..........................................................

என்றெல்லாம் பாரதியார் சூத்திரங்களாகப் புதிய உண்மைகளைக் கூறும்போது,

தெய்வம் நீ என்றுணர்; மொய்ம்புறத் தவஞ்செய்;
மோனம் போற்று; லீலை இவ்வுலகு; வேதம் புதுமைசெய்;

என்று புதிய ஆத்திசூடியிலே கூறும்போது, அரவிந்தரைப் போலவே கருத்துக்களை வெளியிடுகிறார்.

## தமிழ்ச் சித்தருக்குப் பாராட்டுகள்

பாரதியாருக்கும் அரவிந்தருக்குமிடையில் நிலவிய நட்பு ஒருவரையொருவர் மதித்த உயர் பண்பிலிருந்து பிறந்தது என்பதில் ஐயமில்லை. இயல்பாகவே பாரதியாருக்கு இருந்த கூர்மையான விவேகமும் புதுமைப்பித்தும், வேதாந்தப்பற்றும் அரவிந்தரை அணுகப் பெரும் உதவியாக இருந்திருக்கும். கற்றோரைக் கற்றோர் காமுறுவது போல ஞானியாகிய அரவிந்தர் தெளிந்த மனோநிலையையடைந்து கொண்டிருந்த நவீன தமிழ்ச்சித்தரான பாரதியை இனம் கண்டு கொண்டார் என்பதற்கு ஆதாரங்கள் குறைவில்லை. தமிழ் வைணவ ஆழ்வார்களின் பிரபந்தங்களைப் பற்றி அரவிந்தர் பலவிடங்களில் புகழ்ந்து நுணுக்கமான விளக்கத்துடன் எழுதியிருக்கிறாரென்றால், அதற்கு பாரதியாரும், வ. வே. சு. ஐயருமே முக்கிய காரண புருடர்களாக இருந்தனர் என்று கூறலாம். கல்கத்தாவிலிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதே அரவிந்தர் தமிழ் கற்கத் தொடங்கியிருந்தார். பிற மொழி இலக்கியங்களைப் பேரார்வத்துடன் கற்ற அரவிந்தர் புதுவைக்கு வந்த பின்னர் தமிழ்ப் பக்தி இலக்கியங்களைக் கற்றார். அவை பற்றிப் பாரதியார், ஐயர் முதலியோருடன் உரையாடினார்; தமிழிலக்கியத்தில் மதிப்புக் கொண்டார்.

பாரதியாருடைய எழுத்துக்கள் பலவற்றை அரவிந்தர் பாராட்டியிருக்கிறார் என நாம் அறிகிறோம். பொன் வால் நரி (The Fox with the Golden Tail) என்ற ஆங்கிலக் கட்டுரையைப் பாரதியார் 1914—ல் புதுவையில் வெளியிட்டார்.

"...அச்சில் வெளியிடுமுன் கையெழுத்துப் பிரதியை பாரதியார் அரவிந்தருக்குப் படித்துக் காட்டினார்........ ஜே. கிருஷ்ணமூர்த்தி என்ற இளைஞரை 'வருங்கால உலக குரு' வாக்கவும், அவரையும் அவரது சகோதரரையும் தமது பாதுகாப்பில் பயில்விக்கவும் அன்னிபெஸண்ட் செய்த ஏற்பாடுகள் அச்சமயம் ஒரு பெருங் கிளர்ச்சியை உண்டாக்கின. கிருஷ்ணமூர்த்தியின் தந்தையாருக்கும் அன்னிபெஸண்டுக்கும் வழக்கு நடந்தது. இதையெல்லாம் மறைமுகமாகத் தாக்கிக் கேலி செய்யும் கட்டுக்கதை 'பொன் வால் நரி'

பாரதி இதைப் படித்துக்காட்ட, அரவிந்தரும், அதைக் கேட்கக் கேட்க விடாநகைப்படைந்ததுடன், தம்முடன் ஆசிரமத்திலிருந்த இளம் வித்வான்களையும் அழைத்து "பாரதியார் எவ்வளவு அருமையான இங்கிலீஷில் ஒரு அதிசயமான கட்டுக்கதை எழுதியிருக்கிறார். அதை அவரே படித்துக் காட்டும் போது நீங்கள் கவனிக்காமலும் கேட்காமலும் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறீர்களே, என்று சொன்னாராம்"

—(பாரதி புதையல்—2-ம் தொகுப்பு
ரா. அ. பத்மநாபன்—பக். 241—2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மீக எழுச்சியின் அற்புத விளைவு

பாரதியாரின் கவிதைகளாயிருந்தாலென்ன, கட்டுரையாயிருந்தாலென்ன சமயம் வாய்க்கும் போதெல்லாம் அரவிந்தர் அவை பற்றித் தமது பாராட்டைத் தெரிவித்திருக்கிறார். அவ்வாறு ஒருவரையொருவர் பரஸ்பரம் மதித்தமையாலேயே அடிக்கடி சந்தித்து வேதாந்த விசாரம் செய்ய முடிந்தது. அந்த மனோநிலையில் பாரதியார் எழுதும்போது அரவிந்தர் கருத்து எது; பாரதியார் கருத்து எது என்று பிரித்துக் கூறிக் கொள்ள முடியாதபடி எண்ண ஒற்றுமையும் ஏற்பட்டு விடுகிறது.

அரவிந்தர் தொடர்பு அளித்த ஆத்மார்த்த எழுச்சி காரணமாகப் பாரதியார் 1912-ம் வருடத்திலேயே பகவத் கீதை தமிழாக்கத்தை அற்புதமான முகவுரையொன்றுடன் வெளியிட்டார். கீழியற்கை நிலையிலிருந்து விடுபட்டு இவ்வுலகில் தெய்வீக வாழ்வு நடத்தும் வழியையே கீதை காட்டுகிறது என்று மிடுக்கோடு எழுதினார் மகாகவி.

''உலகமெல்லாம் கடவுள் மயம் என்ற உண்மையான வேதாந்தத்தைக் கீதை ஆதாரமாக உடையது, மாயை பொய்யில்லை: பொய் தோன்றாது; பின் மாறுகிறதே எனில் மாறுதல் உலகத்தியற்கை; மாயை பொய்யில்லை, அது கடவுளின் திருமேனி. இங்குத் தீமைகள் வென்றொழித்தற்கு உரியன. நன்மைகள் செய்தற்கும் எய்துதற்கும் உள்ளன. சரணாகதியால்-கடவுளிடம் தீராத மாறாத பக்தியால்—யோகத்தை எய்துவீர்கள், எல்லா ஜீவர்களையும் ஸமமாகக் கருதக் கடவீர்கள். அதனால் விடுதலையடைவீர்கள். சத்ய விரதத்தால், ஆனந்தத்தை அடைவீர்கள். இல்லறத் தூய்மையால், ஈசத்தன்மை அடைவீர்கள்.

இந்த மஹத்தான உண்மையையே கீதை உபதேசிக்கிறது.''



UNIVERSITY OF PERADENIYA
17-2-1998
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவத் கீதை முகவுரையின் இறுதியில் இவ்வாறுதான் எழுதி முடிக்கிறார் கவிஞர் பாரதியார், அரவிந்தரின் எழுத்திற்கும் இதற்கும் நெருங்கிய கருத்து ஒற்றுமை காணப்படுகிறது என்பதில் ஐயமில்லை.

## மறைந்திருக்கும் ஒற்றுமைகள்

''பாரதியாரும் அரவிந்தரும்' என்னும் தலைப்பில் திரு பி. கோதண்டராமன் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார் (கல்கி, தீபாவளி மலர் 1959). பாரதி மீது அரவிந்த மகரிஷியின் செல்வாக்கை, அவதானிக்கக் கூடிய பல சந்தர்ப்பங்களைத் திரு. கோதண்டராமன் தொட்டுக்காட்டியுள்ளார். 'வேத ரிஷிகளின் கவிதை' என்னும் நூலில் காணப்படும் சில பகுதிகள், சிறப்பாக மதுச்சந்த ரிஷி இந்திரனைப் பாடிய பாடல்கள் அக்னிஸ்தோமம் என்னும் தலைப்பின் கீழ்வரும் பாடல்கள் ஆகிய யாவும் ஸ்ரீ அரவிந்தர் 'ஆரியா' வில் வெளியிட்டுள்ளனவற்றின் நேர் மொழிபெயர்ப்பு போலவே காண்கின்றன. அக்கினி விஷயமாக ரிஷிகள் எழுதியுள்ள கவிதையைக் பற்றிப் பேசும்போது 'ஸ்ரீ அரவிந்தகோஷ் சொல்லுகிறார் என்று அரவிந்தர் அக்கினித் துதிகளுக்கு முன்னுரையாக எழுதியுள்ள ஒரு பகுதியை மேற்கோள் காட்டுகிறார். இவை திரு. கோதண்டராமன் கூறும் சில விஷயங்கள். எனினும் துலக்கமாகத் தெரியும் பொருள்கள் பற்றி மட்டுமன்றி மறை பொருளாய்க் காணக் கூடிய ஒற்றுமைகளையும் நுணுகி ஆராய்தல் தகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

470544

UNIVERSIT
17-2-1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாகவி பாரதியார் பற்றிய வெளியீடுகள்

**ப. ஜீவானந்தம்**

*பாரதி வழி*

*பாரதி பற்றி ஜீவா*

**தொ. மு. சி. ரகுநாதன்**

*பாரதியும் ஷெல்லியும்*

*பாரதி காலமும் கருத்தும்*

**ஆர். கே. கண்ணன்**

*புதுநெறி காட்டிய பாரதி*

**டாக்டர் கார்த்திகேசு சிவத்தம்பி**

*பாரதி மறைவு முதல் மகாகவி வரை*

**சி. கனக சபாபதி**

*பாரதி-பாரதிதாசன் கவிதை மதிப்பீடு*

**நா. வானமாமலை**

*பாரதியும் தொழிலாளரும்*

**தி. முத்து கிருஷ்ணன்**

*மகாகவி பாரதியார் வாழ்க்கைச் சரித்திரம்*

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**சென்னை-600 098.**

Code No. A 321 ... 81-234-0076-4

470544

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org